Follow us:

# தமிழன்

THAMILAN தமிලන්

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 03, இதழ்: 131 சுபகிருது வருடம், மார்கழி மாதம் 07ஆம் திகதி வியாழக்கிழமை விலை ரூ.60
(22.12.2022) ஹிஜ்ரி 1444, ஜமா அதுல் அவ்வல் - 27, 0115 886187 - பக்கங்கள் 10



## உஷ்



ஷங்கிரிலா ஹோட்டலில் நடந்த முன்னாள் ஜனாதிபதியின் செயலாளர் காமினி செனரத்தின் புதல்வரது திருமணத்திற்கான மலர்கள் நெதர்லாந்தில் இருந்தும், இதர பொருட்கள் லண்டன், இந்தியா, டுபாய் நாடுகளில் இருந்தும் கொண்டுவரப்பட்டனவாம்.

இந்த நிகழ்வு ஏற்பாட்டை இந்திய நிறுவனமொன்றே மேற்கொண்டுள்ளது. அதற்கு கட்டணமாக கோடிகளில் அறவிடப்பட்டுள்ளதாம்.

# ஆர்ஜென்ரீன அணிக்கு கோலாகல வரவேற்பு

02 பக்கம்



# மின் கட்டணம் உயர்கிறது!

## ஜனவரியில் அதிகரிப்பதைத் தவிர வேறு வழியில்லையென்கிறார் அமைச்சர் காஞ்சன

■ நா.தினுஷா

மின் கட்டணத்தை அதிகரிப்பதனூடாகவே மின்சார உற்பத்தி நிலைமையை சீராக்க முடியும் என்பதே அரசாங்கத்தின் நிலைப்பாடு. எனவே, எதிர்வரும் ஜனவரி மாதத்தில் நிச்சயமாக மின் கட்டணம் அதிகரிக்கப்படும் என்று மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

மேலும், பொறியியலாளர்கள் சங்கம் குறிப்பிடுவது போன்று ஜனவரி மாதத்தில் 10 மணிநேர மின்வெட்டு இடம்பெறுவதற்கான வாய்ப்பு இல்லை. அதற்கு இடமளிக்கவும் போவதில்லை. தொழிற்சங்கங்கள் பயங்கர வாதிகளைப் போன்று செயற்படக்கூடாது. அவ்வாறு செயற்படுபவர்களுக்கு எதிராக அதிகபட்ச சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார். இந்த விடயங்கள் தொடர்பில் விளக்கமளிக்கும் வகையில், அமைச்சில் நேற்று இடம்பெற்ற விசேட செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைக் குறிப்பிட்டார்.

அமைச்சர் அங்கு மேலும் தெரிவிக்கையில், பொய்யான அறிவிப்புகளினால், மக்கள் மத்தியில் குழப்பநிலை ஏற்பட்டுள்ளது. தொழிற்சங்க உரிமைகளுக்கு நாங்கள் ஒருபோதும் தடையாக இருக்கமாட்டோம். ஆனால், கடந்த சில தினங்களாக பல்வேறு சந்தர்ப்பங்களில் மின்சார சபையின் பொறியியலாளர் சங்கம் பொய்யான அறிவிப்புகளை வெளியிட்டு வருகிறது.

இவர்களின் அறிவிப்புகள் கவனத்தை திசை திருப்பும் வகையில் அமைந்திருந்தன. 02 பக்கம்

# வட, கிழக்கில் இறைச்சிக்கான தடை நீக்கம்

■ ம.சுசிகலா

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் விலங்குகள் மற்றும் இறைச்சிகளைக் கொண்டு செல்வதற்கும் விற்பனை செய்வதற்கும் விதிக்கப்பட்டிருந்த தற்காலிகத் தடை நீக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு நேற்று தெரிவித்துள்ளது.

வடக்கு மற்றும் கிழக்கில் மாடுகள் மற்றும் ஆடுகள் உட்பட ஆயிரத்து 600 க்கும் மேற்பட்ட விலங்குகள் திடீரென உயிரிழந்ததையடுத்து இறைச்சி கொண்டு செல்வதற்கும் விற்பனை செய்வதற்கும் தடை விதிக்கப்பட்டிருந்தது.

இது தொடர்பில் பேராதனை கால்நடை மற்றும் சுகாதார திணைக்களம் மேற்கொண்ட விசாரணையில், கடும் குளிரான காலநிலையினால் ஏற்பட்ட அதிர்ச்சியினால் விலங்குகள் உயிரிழந்துள்ளதாக உறுதிப்படுத்தப்பட்டது. 02 பக்கம்

# தமிழகத்தில் கைதான இலங்கையர் 09 பேருக்கு நீதிமன்ற தடுப்புக்காவல்

திருச்சி சிறப்பு முகாமில் கைதுசெய்யப்பட்ட இலங்கையைச் சேர்ந்த 9 பேரை, எதிர்வரும் ஜனவரி மாதம் மூன்றாம் திகதிவரை நீதிமன்றக் காவலில் புழல் சிறையில் அடைக்க புலனாய்வுத்துறை சிறப்பு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. குற்றச் செயல்களில் ஈடுபடும் வெளிநாட்டவர்களைத் தங்க வைப்பதற்காக திருச்சி மத்திய சிறை வளாகத்தில் சிறப்பு முகாம் செயல்பட்டு வருகிறது.

அங்கு இலங்கை தமிழர்கள் 80 பேர் உட்பட பல்வேறு நாடுகளைச் சேர்ந்த 132 பேர் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர். 02 பக்கம்

# தினேஷ் கொலை விவகாரம்; குற்றவாளியைக் கண்டறிய திணறுகிறது பொலிஸ்

## 24 மணிநேரமும் தொடர் விசாரணை

■ கே.சுபானி

தொழிலதிபர் தினேஷ் ஷாப்டரின் கொலை தொடர்பிலான விசாரணைகளை குற்றப்புலனாய்வு பிரிவினர் மேற்கொண்டு வருகின்ற நிலையில், இதுவரை எவரும் கைதுசெய்யப்படவில்லை. 02 பக்கம்

# கமெண்ட் கந்தர்...





# யாழ். மாநகர சபை பட்ஜெட் தோல்வி



02 பக்கம்

# 223 பாடசாலைகளில் போதைப்பொருள் பாவனை

## மேல் மாகாணத்தில் விசேட கட்டுப்பாட்டு நடவடிக்கை

■ கே.சுபானி

மேல் மாகாணத்திலுள்ள 223 பாடசாலைகளில் போதைப்பொருள் பாவனை இடம்பெறுவதாக தமக்கு தகவல் கிடைத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த தகவல்களுக்கமைய மேல்மாகாண பிரதிப் பொலிஸ்மா அதிபர் அலுவலகத்தினூடாக ஒவ்வொரு பாடசாலைக்கும் ஓர் ஆசிரியர் வீதம் மூன்று நாள் போதைப்பொருள் தடுப்பு பயிற்சி திட்டமொன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது. 02 பக்கம்

# 05 பொருட்களின் விலை குறைப்பு

LANKA Sathosa ලංකා සතොස லங்கா சதொச

■ கே.சுபானி

நத்தார் பண்டிகையை முன்னிட்டு பொதுமக்களின் நலன்கருதி ஐந்து அத்தியாவசியப் பொருட்களின் விலைகளை நேற்று நள்ளிரவு முதல் குறைப்பதற்கு லங்கா சதொச நிறுவனம் நடவடிக்கை எடுத்துள்ளது. 02 பக்கம்

# உச்சகட்ட பெரும்பான்மைவாதத்தை கூட்டமைப்புடன் இணைந்து எதிர்ப்போம்!



## அரசியலமைப்பு பேரவை நியமன இழுபறி குறித்து மனோ எம்.பி. தெரிவிப்பு

அரசியலமைப்பு பேரவையில் நியமிக்கப்பட உள்ள ஏழு எம்.பிக்களுக்கான நியமனங்களில், ஐந்து சிங்கள எம்.பிக்களும், ஒரு முஸ்லிம் எம்.பியும் இப்போது பெயரிடப்பட்டுள்ளார்கள். இறுதி ஏழாவது எம்.பியாக ஒரு தமிழ் எம்.பி இருக்க வேண்டும் என்பது மிக, மிக நியாயமான ஒரு எதிர்பார்ப்பு. ஆனால், இதையும்கூட தட்டிப் பறிக்க உதயகம்மன்பில, விமல் வீரவங்ச ஆகியோரின் 'உத்தர சபை' கட்சி முயல்கிறது. அந்த நியமனம் உதய கம்மன்பில எம்.பிக்கு வழங்க வேண்டுமென அந்த கட்சி பிடிவாதம் பிடிக்கிறது. 02 பக்கம்

# இலங்கையை போன்று நிலைமை மோசமாகும்!

## பணம் அச்சிட வேண்டாமென மாலைதீவுக்கு ஐ.எம்.எவ். எச்சரிக்கை

■ நமது நிருபர்

புதிதாக நாணயத்தாள் அச்சிடுவதை உடனடியாக நிறுத்துமாறு மாலைதீவு அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ள சர்வதேச நாணய நிதியம், அவ்வாறில்லாவிடின் இலங்கை போன்று பண மதிப்பை இழக்க வேண்டிவருமென எச்சரிக்கை விடுத்துள்ளது. 02 பக்கம்

# நெல் விவசாயிகளுக்கு ரூ. 20,000 கொடுப்பனவு

■ நமது நிருபர்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வேண்டுகோளுக்கிணங்க இம்முறை பெரும்போக நெற்பயிர்ச்செய்கையில் ஈடுபடும் விவசாயிகளுக்கு ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியின் கீழ் ஆகக்கூடியது 20 ஆயிரம் ரூபா வரை பண உதவியை வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இக்கொடுப்பனவு மீள அறவிடப்பட மாட்டாது என்பதுடன், முற்றிலும் நன்கொடையாகும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

02 பக்கம்

# உள்ளூராட்சி தேர்தலுக்கான விசேட கலந்துரையாடல் நாளை

■ கே.சுபானி


உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவது தொடர்பில் கலந்துரையாடுவதற்கு அனைத்து மாவட்டங்களினதும் பிரதி மற்றும் உதவித் தேர்தல் ஆணையாளர்கள் மற்றும் மாவட்ட செயலாளர்கள் நாளை கொழும்புக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

மேற்படி கலந்துரையாடல் தேர்தல் செயலக அலுவலகத்தில் நாளைய தினம் காலை 10 மணியளவில் இடம்பெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலுக்காக அனைத்து மாவட்டங்களினதும் பிரதி மற்றும் உதவித் தேர்தல் ஆணையாளர்களுக்கும், மாவட்ட செயலாளர்களுக்கும் தேர்தல் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க அழைப்பு விடுத்துள்ளார்.

இதன்போது, தேர்தலை நடத்துவது தொடர்பிலான அனைத்து விடயங்கள் குறித்தும் விரிவாக கலந்துரையாடப்படுமென எதிர்பார்க்கப்படுவதாக தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

# இலஞ்ச ஊழல் குற்றங்களில் கல்வித்துறை முன்னணியில்





■ ம.சுசிகலா

இந்த வருடத்தில் கல்வித்துறை அதிகாரிகளுக்கு எதிராக அதிகளவான இலஞ்ச, ஊழல் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளதாக இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் தகவல்கள் தெரிவித்தன.

பாடசாலைகள், கல்வி அமைச்சு மற்றும் பிராந்திய அலுவலகங்களில் இருந்து 212 அதிகாரிகளுக்கு எதிராக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இதேவேளை கல்வித்துறைக்கு அடுத்தபடியாக இலஞ்ச முறைப்பாடுகள் அதிகளவில் பொலிஸ் அதிகாரிகள் மீது சுமத்தப்பட்டுள்ளன. அந்த அதிகாரிகள் மீதான முறைப்பாடுகளின் எண்ணிக்கை 161 ஆகும். 02 பக்கம்

# சுங்கத்தினால் கைப்பற்றப்பட்ட வாகனங்கள் பொலிஸாருக்கு!

## நிதி அமைச்சு தீர்மானம்

சுங்கப்பிரிவினால் கைப்பற்றப்பட்ட வாகனங்கள் மீதான விசாரணைகளை நிறைவு செய்து அவற்றை பொலிஸ் திணைக்களத்துக்கு பெற்றுக்கொடுக்க தீர்மானித்துள்ளதாக நிதி அமைச்சு தெரிவு செய்துள்ளது.

இதுவரையில், அடையாளம் காணப்பட்ட 245 வாகனங்கள் சுங்கப் பிரிவினரின் பொறுப்பில் இருப்பதாகவும், அவை தொடர்பான விசாரணைகளை விரைவுபடுத்துமாறு ஜனாதிபதி ஆலோசனை வழங்கியுள்ளதாகவும் நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார்.

குறித்த வாகனங்களை பார்வையிடுவதற்காக நேற்று (21) கண்காணிப்பு விஜயமொன்றை மேற்கொண்டு, ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சுங்கப் பிரிவினால் கைப்பற்றப்பட்ட வாகனங்கள் சேதமடைவதற்கு முன்னர், அவை தொடர்பிலான சட்ட விசாரணைகளை விரைவாக நிறைவு செய்வதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறு ஜனாதிபதி ஆலோசனை வழங்கியுள்ளார். 2015ஆம் ஆண்டு சுங்கப்பிரிவினரால் கைப்பற்றப்பட்ட வாகனங்கள் எந்தவொரு நடவடிக்கையுமின்றி இருக்கின்றன. இவை பெறுமதிமிக்க சொத்துகளாகும்.

அடையாளம் காணப்பட்ட 245 வாகனங்கள் சுங்கப் பிரிவினரின் பொறுப்பில் இருக்கின்றன. இவற்றில் 190 வாகனங்கள் தொடர்பில் இன்னும் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இவை தொடர்பான விசாரணைகள் தற்போது வரையில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. விசாரணைகளை விரைவாக நிறைவுசெய்வதற்கான நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன. போதைப்பொருள் பயன்பாட்டு சுற்றிவளைப்பு நடவடிக்கைகளுக்காக சம்பிரதாயபூர்மற்ற வாகனங்கள் பொலிஸ் திணைக்களத்துக்கு அவசியமாகவுள்ளன. பொலிஸ் திணைக்களத்தின் வாகனங்களை குற்றவாளிகளினால் இலகுவாக அடையாளம் காணக்கூடியதாக இருக்கும்.

எனவே, சுங்கப்பிரிவிலிருந்து விடுவிக்ககூடிய வாகனங்களுக்கு முக்கியத்துவம் வழங்கி, அவற்றை பொலிஸ் திணைக்களத்துக்கு வழங்க நடவடிக்கை எடுத்துள்ளோம்.

# வெற்றி – தோல்வியை ஏற்றுக்கொள்ளத் தயார்

## பொதுஜன பெரமுன எம்.பி. விமலவீர தெரிவிப்பு

வெற்றியாக இருந்தாலும் தோல்வியாக இருந்தாலும் இரண்டையும் ஏற்றுக்கொள்ள ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தயாராக இருக்கிறது. தேர்தலுக்கான சகல ஆயத்தங்களையும் கட்சி செய்துகொண்டே வருகிறது. எனவே, நாங்கள் தேர்தலைக் கண்டு ஒருபோதும் பயங்கொள்ள மாட்டோம் என்று அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் விமலவீர திசாநாயக்க தெரிவித்தார்.

அக்கட்சியின் தலைமை அலுவலகத்தில் நேற்று (21) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வேட்புமனு தாக்கல் செய்வதற்கான சகல நடவடிக்கைகளும் நிறைவடைந்துள்ளன. வேட்பாளர்களை தெரிவு செய்யும் நடவடிக்கைகளே மீதமுள்ளன. தேர்தலை கண்டு நாங்கள் பயப்படுவதாக அனைவரும் கூறுகிறார்கள். பயத்தின் காரணமாகவே தேர்தலை காலந்தாழ்த்த முயற்சிப்பதாக கூறுகிறார்கள். பொதுஜன பெரமுன என்பது மாற்று சிந்தனைகளுக்கு பயம் கொள்ளாத கட்சியாகும். இரண்டு வருடங்களில் பழமையான கட்சிகளை தோற்கடித்து முன்னிலைக்கு வந்தோம். எனவே, தேர்தலை நடத்தினால் ஒன்று வெற்றியை சந்திப்போம். அவ்வாறு இல்லாவிட்டால் தோல்வியை சந்திப்போம். இந்த இரண்டையும் முழு மனதுடன் ஏற்றுக்கொள்ள தயாராக இருக்கிறோம் என்றார்.

### இலங்கையை போன்று...

மேலும், அந்நாட்டின் நாணயக் கொள்கையை கடுமைப்படுத்தி நாணயமாற்று வீதத்தை பாதுகாக்குமாறு அவ்வமைப்பு கேட்டுக்கொண்டுள்ளது.

இது தொடர்பில் சர்வதேச நாணய நிதியம் நேற்று (21) வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

உள்நாட்டில் நாணயத்தேவையை பூர்த்திசெய்வதற்காக நாணயத்தாள்களை மாலைதீவு நாணய சபை அச்சிடுகின்றது. இதனால் எதிர்காலத்தில் பாரிய பாதிப்புகள் ஏற்படக்கூடும். மாலைதீவு நாணய சபையானது நாணயக் கொள்கையை கடுமையாக்க வேண்டும்.

இலங்கையும் இவ்வாறான நிலைமையை எதிர்கொண்டிருந்தது. அங்கு, சனத்தொகையில் பெரும்பகுதியினர் உணவுக்காக போராடிக் கொண்டிருக்கிறார்கள். ரூபாவின் மதிப்பிழப்பால் அரிசி உள்ளிட்ட பொருட்களின் விலைகள் அதிகரித்துள்ளன. அத்துடன் மக்கள் பெற்றுக்கொள்ளும் சம்பளத்தின் பெறுமதி வீழ்ச்சியடைவதால் நிலைமை மேலும் மோசமாகும் என எதிர்பார்க்கப்படுகிறது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### வட, கிழக்கில்...

எந்தவொரு தொற்றுநோய் காரணமாகவும் இந்த விலங்குகள் உயிரிழக்கவில்லையென ஆய்வக பரிசோதனைகள் உறுதிப்படுத்தியுள்ளதாக பேராதனை கால்நடை மற்றும் சுகாதார திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் நேற்று (21) தெரிவித்துள்ளார்.

கடந்த டிசம்பர் மாதம் 08 மற்றும் 09 ஆம் திகதிகளில் உயிரிழந்த கால்நடைகள் குளிர் காலநிலையினால் ஏற்பட்ட அதிர்ச்சியினால் உயிரிழந்துள்ளதாகவும், தற்போது அந்த நிலைமை தணிந்துள்ளதாகவும் பணிப்பாளர் நாயகம் மேலும் தெரிவித்தார்.

இதன்மூலம் விலங்குகள் மற்றும் இறைச்சி போக்குவரத்துக்கு தற்போது நாடளாவிய ரீதியில் அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

### 05 பொருட்களின் விலை குறைப்பு...

இதற்கமைய பெரிய வெங்காயம், சிவப்பு பருப்பு, டின்மீன் (உள்ளூர்), மிளகாய் மற்றும் நெத்தலி (தாய்) ஆகிய ஐந்து பொருட்களின் விலைகள் குறைக்கப்பட்டுள்ளன.

சதொச அறிவித்துள்ள புதிய விலைக் கழிவுகளின் படி ஒரு கிலோ பெரிய வெங்காயம் 5 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது. அதன் புதிய விலை 185 ரூபா என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஒரு கிலோ சிவப்பு பருப்புக்கு 7 ரூபா குறைக்கப்பட்டு அதன் புதிய விலை 378 ரூபாவாக அறிவிக்கப்பட்டுள்ளது.

425 கிராம் டின்மீன் (உள்ளூர்) 10 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது. அதன் புதிய விலை 480 ரூபாவாகும். அதேபோல், ஒரு கிலோ மிளகாய் 15 ரூபாவால் குறைக்கப்பட்டு அதன் புதிய விலை 1,780 ரூபாவாகவும் ஒரு கிலோ நெத்தலி (தாய்) 50 ரூபாவால் குறைக்கப்பட்டு அதன் புதிய விலை 1,100 ரூபா எனவும் சதொச அறிவித்துள்ளது.

### இலஞ்ச ஊழல் குற்றங்களில்...

இலஞ்சம் தொடர்பான முறைப்பாடுகளில் மூன்றாவது இடத்தில் பிரதேச செயலக அதிகாரிகளுக்கு எதிராக பதிவு இடம்பெற்றுள்ளது. இந்த முறைப்பாடுகள் தொடர்பில் விசாரணைகள் நடத்தப்பட்டு காணி உத்தியோகத்தர்கள் மற்றும் கிராம உத்தியோகத்தர்கள் உட்பட எட்டு அதிகாரிகள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை, இவ்வருடம் ஒக்டோபர் 31ஆம் திகதிவரை 1945 முறைப்பாடுகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக இலஞ்ச ஊழல் குற்றச்சாட்டு விசாரணை ஆணைக்குழுவின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் கூற்றுப்படி, இந்தக் காலப்பகுதியில் கைதுசெய்யப்பட்ட அரச அதிகாரிகளின் எண்ணிக்கை இருபத்தி ஆறு.

இதேவேளை, பொருளாதார பணவீக்க நிலைமை காரணமாக இலஞ்சம் பெறுவது அதிகரித்துள்ளதாக ஆணைக்குழுவின் அதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

### 223 பாடசாலைகளில்...

மேல்மாகாண கல்வியமைச்சின் அனுமதியுடன், இப்பயிற்சித்திட்டத்தில், தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டு சபை மற்றும் பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்பு பணியகமும் இணைந்துள்ளன.

இப்பயிற்சித் திட்டத்தின் இறுதியில் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தலைமையில் சான்றிதழ்கள் வழங்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

### யாழ். மாநகர சபை பட்ஜெட்...

யாழ். செய்தியாளர்

யாழ்ப்பாண மாநகர சபையின் 2023ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் ஏழு மேலதிக வாக்குகளால் தோற்கடிக்கப்பட்டது.

யாழ். மாநகர சபையின் 2023 ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் நேற்று புதன்கிழமை (21) மாநகர முதல்வர் விஸ்வலிங்கம் மணிவண்ணனால் சபையில் சமர்ப்பிக்கப்பட்டது.

வரவு - செலவுத் திட்டத்திற்கு ஆதரவாக 11 வாக்குகளும் எதிராக 18 வாக்குகளும் பதிவாகின. ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி வெளிநடப்பு செய்ததுடன், வாக்கெடுப்பு இடம்பெற்றபோது பங்கேற்கவில்லை.

அத்துடன், 45 உறுப்பினர்கள் அங்கம் வகிக்கும் யாழ். மாநகர சபையில் இலங்கை தமிழரசுக் கட்சியின் சார்பில் 16 உறுப்பினர்களும் அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் சார்பில் 13 உறுப்பினர்களும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் சார்பில் 10 உறுப்பினர்களும் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் 3 உறுப்பினர்களும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சார்பில் 2 உறுப்பினர்களும் மற்றும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் சார்பில் ஓர் உறுப்பினரும் அங்கம் வகிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

### ஆர்ஜென்ரீன அணிக்கு...

உலகக்கிண்ண உதைபந்தாட்டக் கிண்ணத்தை 36 வருடங்களின் பின்னர் கைப்பற்றிய ஆர்ஜென்ரீன அணிக்கு அந்நாட்டில் கோலாகல வரவேற்பு அளிக்கப்பட்டது. தலைநகர் புவனெஸ் அயிரெஸில் திரண்ட கோடிக்கணக்கான ரசிகர்கள் மெஸ்ஸி தலைமையிலான அணியினரை உற்சாகமாக வரவேற்றனர்.

இதனால் தலைநகரில் பெரும் சன நெரிசல் ஏற்பட்டது. இந்த நெரிசலில் சிக்கி ஒருவர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது.

### நெல் விவசாயிகளுக்கு...

இதற்கமைய ஒரு ஹெக்டயர் அல்லது அதனிலும் குறைவான நிலப்பரப்பில் விவசாயத்தில் ஈடுபட்டுள்ள சிறிய அளவிலான நெல் விவசாயிகளுக்கு 10,000 ரூபாவும் ஒரு ஹெக்டயரிலும் அதிக நிலப்பரப்பில் விவசாயத்தில் ஈடுபட்டுள்ள நெல் விவசாயிகளுக்கு 20,000 ரூபாவும் வழங்கப்படவிருப்பதாக விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

நெற்பயிர்ச்செய்கையில் ஈடுபடும் விவசாயிகளுக்கு மாத்திரமே இப்பண உதவி வழங்கப்படவுள்ளதுடன், இவை நேரடியாக விவசாயிகளின் வங்கிக் கணக்கில் வைப்புச் செய்யப்படும்.

இம்முறை 8 இலட்சம் ஹெக்டயர் வயல் பரப்பில் பெரும்போகப் பயிர்ச்செய்கை முன்னெடுக்கப்படவுள்ளது. அதற்கு அவசியமான உரத்தைக் கொள்வனவு செய்வதற்காகவே விவசாயிகளுக்கு இப்பண உதவி வழங்கப்படுகிறது.

இதற்காக 08 பில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்படவுள்ளதுடன், நெற்பயிர்ச்செய்கையில் ஈடுபடும் 12 இலட்சம் குடும்பங்களுக்கு இந்நிதி பகிர்ந்தளிக்கப்படுமென்றும் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர வெகு விரைவில் விசேட ஊடக சந்திப்பொன்றை நடத்தி இவ்விடயம் தொடர்பில் தெளிவுபடுத்தவுள்ளார்.

### மின் கட்டணம் உயர்கிறது...

அவர்கள் அரசியல் நோக்கங்களுக்காக செயற்படுகின்றார்கள் என்பது தெளிவாகத் தெரிகிறது.

எனவே, தற்போது சேவையிலிருந்து கொண்டு இவ்வாறு பொய்யான அறிவிப்புகளை வெளியிடும் அதிகாரிகள் தொடர்பில் சட்ட ஆலோசனைகளை பெற்றுக்கொண்டு, அவர்களுக்கு எதிராக எடுக்கக்கூடிய அதிகபட்ச சட்டபூர்வமான ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்ள பரிந்துரை வழங்கியுள்ளேன். இவர்களின் இதுபோன்ற கருத்துகள் மக்கள் மத்தியில் அமைதியின்மையையும் அரசாங்கத்தின் மீது மக்களின் வைராக்கியத்தையும் நம்பிக்கையின்மையையும் ஏற்படுத்தியுள்ளன.

நுரைச்சோலை அனல் மின் உற்பத்தி நிலையத்தின் மூன்று கட்டமைப்புகளையும் ஜனவரி மாதம் முதல் வாரத்தில் மூடவுள்ளதாகவும் 10 – 12 மணிநேர மின்வெட்டுக்கு செல்ல நேரிடும் என்றும் மின்சார சபையின் பொறியியலாளர் சங்கத்தின் தலைவர் அறிவித்துள்ளார். இது பொய்யான அறிவிப்பாகும்.

இந்த வருடத்தில் அனல் மின் நிலையத்தின் இரு கட்டமைப்புகள் செயலிழந்தும் மின்விநியோகத்தை மேற்கொண்டிருந்தோம். அதனை முகாமைத்துவம் செய்துகொண்டு இரண்டு அல்லது இரண்டரை மணிநேர மின்வெட்டை மேற்கொண்ட சந்தர்ப்பங்களும் இருக்கின்றன. இந்நிலையில், எங்களின் வேலைத்திட்டங்களின் பிரகாரம் இந்த மின்நிலையத்தின் திருத்தப் பணிகளுக்காக மூன்று சந்தர்ப்பங்களில் மூடுவதற்கு தீர்மானித்துள்ளோம். இந்த மின் நிலையத்தின் ஒரு கட்டமைப்பின் பிரதான திருத்தப் பணிகள முன்னெடுக்கப்படாமலுள்ளது. அந்தப் பணிகள் 2020ஆம் ஆண்டு முன்னெடுக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால், கொரோனா நிலைமையினால் அதனை செய்ய முடியாமல் போனது. இந்த வருடம் இரண்டு கட்டமைப்புகளின் திருத்தப் பணிகள் இடம்பெற்றிருந்தன. எனவே, மிஞ்சியுள்ள ஒரு கட்டமைப்பின் திருத்தப் பணிகளை அடுத்த வருடம் மே மாதத்திலிருந்து 180 நாட்களுக்குள் முன்னெடுக்கத் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

இருந்தபோதும் மின் உற்பத்திக்கு நெருக்கடி நிலை ஏற்படுமாக இருந்தால், அதற்கு பதிலாக பயன்படுத்தக்கூடிய மின் உற்பத்தி நிலையங்கள் எமக்கு இருக்கின்றன.

நிதித் தட்டுப்பாட்டின் காரணமாக ஏற்பட்ட மூலபொருள் பற்றாக்குறையின் காரணமாகவே இந்த மின் உற்பத்தி நிலையத்தின் செயற்பாடுகளை முறையாக முன்னெடுக்க முடியாத நிலை ஏற்பட்டது. லக்விஜய மின் உற்பத்தி நிலையத்தை அடுத்த வருடம் மூன்று கட்டங்களாக நூறு நாட்களுக்கு மூடுவதற்கு மின்சார சபையினால் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. இந்த நடவடிக்கைகளின் போது மாற்று மின் உற்பத்தி நிலையங்களை பயன்படுத்த வேண்டி ஏற்படும்.

மேலும், திருத்தப் பணிகளுக்காக ஒரே நேரத்தில் அனைத்து கட்டமைப்புகளையும் மூடும் எதிர்பார்ப்பு எங்களுக்கு இல்லை. அதற்கான அவசியமும் ஏற்படாது. எனவே, பொறியியலாளர்களின் அறிவிப்பு முழுமையாக ஏற்றுக்கொள்ள முடியாத அறிவிப்புகளாகும். தொழிற்சங்கமாக இருந்தாலும் ஒழுக்கமாக செயற்பட வேண்டியது அவசியமாகும். தொழிற்சங்கமாக இருந்தாலும் பயங்கரவாத அமைப்பாக செயற்பட முடியாது.

பொறியியலாளர் சங்கத் தலைவர் குறிப்பிடுவதுபோன்று ஜனவரி மாதத்தில் 7- 8 மணிநேர மின்வெட்டை மேற்கொள்ள ஒருபோதும் நடவடிக்கை எடுக்க மாட்டோம். அதற்கு இடமளிக்கவும் மட்டோம். எரிபொருள் கூட்டுத்தாபனத்தினூடாக மின் உற்பத்திக்கு தேவையான மூலப்பொருட்களை மின்சார சபைக்கு பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுத்துள்ளோம். 6 - 9 வரையான நிலக்கரி கப்பல்களுக்கான கட்டணங்கள் பகுதியளவில் முற்பணம் செலுத்தப்பட்டுள்ளன. எனவே, நிலக்கரியை விரைவில் பெற்றுக்கொள்ள எதிர்பார்க்கிறோம். பொருளாதார நெருக்கடியின் காரணமாக வங்கிகளினூடாக கடன் பெற்றக்கொள்ள முடியாத நிலைமை இருக்கிறது. டொலரை பெற்றுக்கொள்வது சவாலாக இருக்கிறது. ஜனவரி மாதத்தில் நிலக்கரி இறக்குமதி செய்வதற்காக 87.76 மில்லியன் டொலர் தேவைப்படுகிறது. பெப்ரவரி மாதத்தில் 30 வீத கொடுப்பனவை செலுத்த வேண்டியுள்ளது. மத்திய வங்கியினூடாகவோ ஏனைய வங்கிகளினூடாகவோ டொலரை பெற்றுக்கொண்டாலும் அதற்கான ரூபா வேண்டும்.

எனவே, ஜனவரி மாதத்தில் மின்சார சபை 38.45 பில்லியன் ரூபாவை பெற்றுக்கொடுக்க வேண்டும். அதற்காகவே மின் கட்டணத்தை அதிகரிக்க வேண்டும் என்றோம். தற்போதுள்ள கட்டண அறிவீட்டின்படி ஜனவரி மாதம் 30 – 32 பில்லியன் ரூபா மாத்திரமே மின்சார சபைக்கு கிடைக்கும். இந்த நிதி போதாது. மின்கட்டணத்தை அதிகரிப்பதனூடாக தொடர்ச்சியாக மின் விநியோகத்தை வழங்க எதிர்பார்த்துள்ளோம். நிலக்கரி கப்பல் வருவதில் காலதாமதம் இருக்கிறது. அதன் பொருள் 10 மணிநேர மின்வெட்டை அமுல்படுத்துவது இல்லை.

நிச்சயமாக மின் கட்டண மறுசீரமைப்பு செய்யப்படும். சட்டமா அதிபரினால் அதற்கான அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய அதிகான சட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. எனவே, அடுத்த ஜனவரி மாதம் 02ஆம் திகதி இடம்பெறவுள்ள அமைச்சரவைக் கூட்டத்தில் மின் கட்டன அதிகரிப்பு தொடர்பான தெளிவான அறிக்கையை அனுமதிக்காக சமர்ப்பிக்க எதிர்பார்த்துள்ளோம். ஜனவரி மாதத்தில் கட்டாயம் கட்டண அதிகரிப்பு மேற்கொள்ளப்படும் என்றார்.

### தினேஷ் கொலை விவகாரம்...

நேரடிக் குற்றவாளிகள் எவரும் அடையாளம் காணப்படவும் இல்லை என பொலிஸ் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ நேற்று (21) தெரிவித்தார்.

ஷாப்டரின் கொலை தொடர்பில் முன்னெடுக்கப்பட்டு வரும் விசாரணைகள் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

தொழிலதிபர் தினேஷ் ஷாப்டர் கொலை தொடர்பிலான விசாரணைகள் பொலிஸ்மா அதிபரின் உத்தரவுக்கமைய குற்றப்புலனாய்வு பிரிவின் கீழ் இயங்கும் திட்டமிட்ட குற்றம் மற்றும் மனிதப் படுகொலை தொடர்பான விசாரணை பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டு தொடர் விசாரணை முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

இந்த கொலைச் சம்பவம் தொடர்பில் குற்றப்புலனாய்வு பிரிவினர் மற்றும் கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவினர் உள்ளிட்ட 04 குழுக்கள் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றன. அவர்கள் தொடர்ந்தும் 24 மணிநேரமும் விசாரணைகள் முன்னெடுத்து வருகின்றனர்.

மேலும், ஸ்தல பரிசோதனை பிரிவு மற்றும் தடயவியல் பிரிவு என்பவற்றால் ஏனைய அறிவியல் தடயங்களைப் பெறுவதற்கான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இதுவரை திட்டமிட்ட குற்றம் மற்றும் மனிதகொலை தொடர்பான விசாரணை பிரிவுக்கு மட்டும் 42 பேரின் வாக்குமூலங்கள் கிடைக்கப்பெற்றுள்ளன.

அத்தோடு, பொரளை பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளின் மூலம் இதுவரை 8 இற்கும் மேற்பட்டோரின் வாக்குமூலங்கள் பெறப்பட்டுள்ளன. பொரளை பொலிஸார் கொலை சம்பவம் தொடர்பிலான குற்றப்புலனாய்வு பிரிவினருக்கு அனைத்து ஒத்துழைப்பையும் வழங்கிக் கொண்டிருக்கின்றனர்.

எனினும், இதுவரை எவரும் கைதுசெய்யப்படவில்லை. நேரடிக் குற்றவாளிகள் எவரும் அடையாளம் காணப்படவும் இல்லை. அவ்வாறு குற்றவாளிகள் அடையாளம் காணப்படின் கண்டிப்பாக அவர்கள் கைதுசெய்யப்படுவர்.

தற்போது ஷாப்டரின் கொலைதொடர்பில் பல்வேறு தரப்பினருடன் பல கோணங்களில் விசாரணைகள் இடம்பெற்றுவருகின்றன.

ஷாப்டரின் மனைவியிடமும் வாக்குமூலம் பெறப்பட்டுள்ளது. அத்தோடு நாளுக்கு நாள் எமக்கு கிடைக்கப்பெறுகின்ற தகவல்களின் உண்மைத்தன்மைக்கமைய மேலதிக விசாரணைகள் தேவைப்படின் ஷாப்டரின் மனைவி மற்றும் ஷாப்டருடன் நெருங்கிய தொடர்புகளைப் பேணியவர்களிடம் மற்றும் ஏனையோரிடம் விசாரணைகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

விசாரணைகளின் முடிவே நிரந்தரமானது. விசாரணைகளை முன்னெடுப்பதற்கு தகவல்கள் அவசியமாகின்றன. ஆகவே, மூல காரணங்களை தேடி விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எவ்வாறாயினும் எமக்கு கிடைக்கப்பெற்ற தகவல்களுக்கமைய முன்னெடுக்கப்பட்டுள்ள விசாணைகளின் முடிவில் குற்றவாளியை கண்டுபிடிக்க முடியும் என அவர் தெரிவித்தார்.

### தமிழகத்தில் கைதான...

இந்நிலையில், பாகிஸ்தானிலிருந்து இந்தியா மற்றும் இலங்கைக்கு ஆயுதங்கள், போதைப்பொருட்கள் கடத்தப்படுவதாக எழுந்த குற்றச்சாட்டு தொடர்பாக தேசிய புலனாய்வுத்துறை அதிகாரிகள் கடந்த ஜூலை 8ஆம் திகதி வழக்குப் பதிவு செய்தனர்.

இதைத்தொடர்ந்து தமிழகத்தில் சென்னை, திருப்பூர், செங்கல்பட்டு உட்பட 22 இடங்களில் புலனாய்வு அதிகாரிகள் ஜூலை 20ஆம் திகதி சோதனை நடத்தினர். மேலும், திருச்சி சிறப்புமுகாமிலும் சோதனை நடத்தப்பட்டது.

அப்போது அங்கிருந்து கையடக்கத் தொலைபேசிகள், சிம் அட்டைகள், பென் டிரைவ், ஹார்ட் டிஸ்க், மடிக்கணினி, வைஃபை மோடம் மற்றும் முக்கிய ஆவணங்கள் கைப்பற்றப்பட்டன. அவற்றை கேரளாவுக்கு கொண்டு சென்ற அதிகாரிகள் தொடர்ந்து விசாரணை நடத்தி வந்தனர்.

இந்நிலையில், திருச்சி சிறப்பு முகாமிலிருந்த இலங்கையைச் சேர்ந்த குணசேகரன் என்ற பிரேம்குமார், புஷ்பராஜா என்ற பூக்குட்டி கண்ணா, முகமது ஆஸ்மின், அழகப்பெரும சுனில், காமினி பொன்சேகா என்ற கோட்ட காமினி, ஸ்டான்லி கென்னடி பெர்னாண்டோ என்ற பொம்மா, தனுகா ரோஷன், லடியா, காமேஷ் சுரங்கா பிரதீப் என்ற வெலே சுரங்கா, திலீபன் ஆகிய 9 பேரை கைதுசெய்தனர். அவர்களை ஆயுதக் கடத்தல் வழக்கில் கைது செய்ததாக குற்றப்புலனாய்வு அதிகாரிகள் தெரிவித்தனர்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்ட 9 பேரும் சென்னையை அடுத்த பூந்தமல்லியில் உள்ள தேசிய புலனாய்வு சிறப்பு நீதிமன்றத்தில் நீதிபதி இளவழகன் முன்பு நேற்று ஆஜர்படுத்தப்பட்டனர். அவர்களை ஜனவரி 3 வரை நீதிமன்றக் காவலில் சிறையில் அடைக்க நீதிபதி உத்தரவிட்டார். இதையடுத்து அனைவரும் புழல் சிறையில் அடைக்கப்பட்டனர்.

### உச்சகட்ட பெரும்பான்மைவாதத்தை...

இது உச்சக்கட்ட பெரும்பான்மைவாதம். திருத்த முடியாத திமிர்வாதம். இதை எதிர்த்து முறியடிப்பதில், தமிழ் தேசிய கூட்டமைப்புடன், தமிழ் முற்போக்கு கூட்டணி, இரட்டை குழல் துப்பாக்கியாக இணைந்து செயற்படும் என தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் எம்.பி. தெரிவித்தார்.

அரசியலமைப்பு பேரவை நியமனங்களில் ஏற்பட்டுள்ள இழுபறி நிலைமை தொடர்பில் மனோ எம்.பி. மேலும் கூறியதாவது,

அரசியலமைப்புப் பேரவையில் சட்டப்படி பத்து உறுப்பினர்கள் இடம்பெறுவார்கள். அதில் ஏழு எம்.பிக்களும், மூன்று சிவில் சமூக செயற்பாட்டாளர்களும் இடம் பெற வேண்டும். இந்த எம்.பிகளில், நான்கு சிங்கள எம்.பிகளும், தலா ஒரு எம்.பியாக மூன்று எம்.பிக்கள், வடகிழக்கு தமிழர், முஸ்லிம்கள், இலங்கை இந்திய தமிழர் ஆகியோரை பிரதிநிதித்துவம் செய்ய வேண்டும். இதுவே நியாயமான நடவடிக்கை. ஆனால், இது நடைபெறவில்லை.

சபாநாயகர், பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர் ஆகிய மூவரும் தம் பதவிநிலை காரணமாக அரசியலமைப்பு பேரவையில் இடம்பெறுகின்றார்கள். ஜனாதிபதியும், எதிர்க்கட்சி தலைவரும் தம் பிரதிநிதிகளை நியமிக்க வேண்டும். இதன்படி ரணில் விக்கிரமசிங்க, தமது பிரதிநிதியாக நிமல் சிறிபால டி சில்வாவையும், சஜித் பிரேமதாச தமது பிரதிநிதியாக கபீர் ஹசீமையும் நியமித்துள்ளனர்.

அரசாங்கம், பிரதான எதிர்க்கட்சி ஆகிய கட்சிகளை சாராத சிறு கட்சிகளின் பிரதிநிதியாக ஒருவர் நியமிக்கப்பட வேண்டும் என்பது சட்டம். அதன்படி, சித்தார்த்தனின் பெயரை தமிழ் தேசிய கூட்டமைப்பு பிரேரித்துள்ளது. இப்போது இதுவே பிரச்சினையாக மாறியுள்ளது.

மொட்டு கூட்டணியில் தெரிவாகி விட்டு, அரசாங்கத்தின் எல்லா தவறுகளுக்கும் காரணமாகி விட்டு, இப்போது எதிர்க்கட்சி பக்கத்தில் வந்து உட்கார்ந்துள்ள உதய கம்மன்பில, விமல் வீரவங்ச கும்பல், இதையும் தட்டி பறிக்க பார்க்கிறது.

உண்மையில், இந்த விவகாரத்தில் மலையக இந்திய வம்சாவளி தமிழரே முதலில், அநீதிக்கு உள்ளாக்கப்பட்டார்கள். ஜனாதிபதி, பிரதமர் ஆகியோரிடம், அவர்கள் நியமிக்கும் எம்.பியாக இந்திய வம்சாவளி தமிழரை பிரதிநித்துவம் செய்யும் ஒரு எம்.பியை நியமிக்கும்படி, நானும், பழனி திகாம்பரமும் கோரிக்கை விடுத் தோம்.

தான் ஏற்கனவே, நிமல் சிறிபால சில்வாவை பெயரிட்டு விட்டதாகவும், முதலிலேயே கூறி இருந்தால், பரிசீலிக்க இடமிருந்தது என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எம்மிடம் கூறினார். தமிழ் முற்போக்கு கூட்டணி எம்.பி. ஒருவரை தமது பிரதிநிதியாக நியமிக்க முதலில் எம்மிடம் உடன்பட, எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச, பிறகு தமது கட்சியில் இருந்து, கபீர் ஹசீமை நியமிக்க வேண்டிய கட்டாயம் தனக்கு உள்ளதாக கூறினார். கபீர் ஹசீம் சகோதர முஸ்லிம் எம்.பி. என்பதால் அதை நாம் புரிந்துக்கொண்டோம்.

இந்நிலையில், மூன்று சிவில் சமூக செயற்பாட்டாளர்களில் ஒருவர், கட்டாயம் மலையக இந்திய வம்சாவளி தமிழராக இருக்க வேண்டும் என்ற கோரிக்கையும், அதற்கான பெயரையும் நாம், தமிழ் முற்போக்கு கூட்டணி சார்பாக பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர்ஆகியோரிடம் சிபாரிசு செய்து வழங்கியுள்ளோம்.

இத்தகைய பின்னணியில், இறுதியான ஒரேயொரு எம்.பி. நியமனத்தில் சித்தார்த்தனின் பெயரை தமிழ் தேசிய கூட்டமைப்பு சிபாரிசு செய்துள்ளது. அது சட்டப்படியும், அரசியல் நியாயப்படியும் சரியானது. ஆகவே, அதை நாமும் ஆதரிக்கிறோம். இதையே இன்று பிரச்சினைக்கு உள்ளாக்கி, அதையும் தட்டிப்பறித்து, ஈழத்தமிழ், மலையக தமிழ் என்ற பேதமில்லாமல் ஒரு தமிழ் எம்.பி. கூட அரசியலமைப்பு பேரவையில் இடம்பெற முடியாத நிலைமையை இனவாதிகள் ஏற்படுத்த முயல்கிறார்கள் எனத் தெரிவித்துள்ளார்.

# சீனாவில் கொரோனாவின் பாதிப்பு அதிகரித்துள்ளதால் இலங்கையில் கண்காணிப்பை வலுப்படுத்துமாறு கோரிக்கை

## பேராசிரியர் நீலிகா மாலவிகே எச்சரிக்கை

சீனாவில் கொரோனா பரவல் அதிகரித்துள்ள நிலையில், இலங்கையில் கட்டுப்பாடுகளை தீவிரப்படுத்தவேண்டும் என்ற வேண்டுகோள்கள் வெளியாகியுள்ளன.

சீனாவில் கொரோனா பரவலை முன்னிட்டு அமுல்படுத்தப்பட்டிருந்த கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டதைத் தொடர்ந்து பெருமளவு பரவல் அதிகரித்துள்ளமை சர்வதேச அளவில் பெருந்தொற்று அச்சுறுத்தல் குறித்து நிச்சயமற்ற நிலையை ஏற்படுத்தியுள்ளது.

சர்வதேச விநியோகத்திற்கான பாதிப்பு குறித்தும் அச்சம் ஏற்பட்டுள்ளது.

எனினும், ஆபத்தான புதிய கொரோனா வைரஸ் பரவ ஆரம்பித்தால் மாத்திரமே 2020 போன்ற சூழ்நிலை ஏற்படும் என கருத்து வெளியிட்டுள்ள நிபுணர்கள் அதற்கான சாத்தியக்கூறுகளை நிராகரிக்க மறுத்துள்ளனர்.

பல நாடுகளில் கொரோனாவின் பல்வேறுபட்ட மாதிரிகள் காணப்படுகின்றன. ஆகவே, புதிய வைரஸ் தோன்றினால் மாத்திரமே பெருந்தொற்று ஆபத்து மீண்டும் ஏற்படும் என ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழக பேராசிரியர் நீலிகா மாலவிகே தெரிவித்துள்ளார்.



எனினும், வெவ்வேறு வைரஸ்கள் தோன்றக் கூடிய ஆபத்துள்ளது. இதன் காரணமாக நாங்கள் கண்காணிப்பை பலப்படுத்த வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். உலகில் தற்போது அதிகளவு கொரோனா நோயாளர்கள் சீனாவிலேயே நாளாந்தம் அடையாளம் காணப்படுகின்றனர் என சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இதனால் அடுத்த சில மாதங்களில் 800 மில்லியன் மக்கள் பாதிக்கப்படலாம் என நிபுணர்கள் எச்சரிக்கின்றனர்.

மரபணு வரிசை ஒழுங்குபடுத்தும் நடவடிக்கைகளை இலங்கை வலுப்படுத்தவேண்டும் என பேராசிரியர் மாலவிகே தெரிவித்துள்ளார்.

3 வாரங்களுக்கு முன்னர் நாங்கள் இறுதியாக மரபணு ஒழுங்கு படுத்தும் நடவடிக்கைகளை முன்னெடுத்தோம். தற்போது இதற்கான மாதிரிகள் இல்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

தற்போது இலங்கையில் இன்புளுவன்சா பிரச்சினை உள்ளது. ஆனால், கொரோனா நோயாளிகளின் எண்ணிக்கை குறைவு எனவும் அவர் தெரிவித்துள்ளார். உலகின் ஏனைய பகுதிகளில் குறைந்தளவு நோயாளர்கள் அடையாளம் காணப்படும் அதேவேளை சீனாவில் அதிகளவு நோயாளர்கள் அடையாளம் காணப்படுகின்றனர். இதுவேபிரச்சினைஎனஅவர்குறிப்பிட்டுள்ளார். புதிய வைரஸ் உருவாவதற்கான மிகவும் பொருத்தமான சூழ்நிலை இதுவெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# இரசாயனக் கசிவு காரணமாக புஸ்ஸல்லாவயில் மூச்சுத்திணறல்

## ஆசிரியர்கள் - மாணவர்கள் வைத்தியசாலையில் அனுமதி

(எஸ்.கணேசன்)

புஸ்ஸல்லாவ சரஸ்வதி மத்திய கல்லூரியில் கல்வி பயிலும் உயர்தர விஞ்ஞான மாணவர்கள் நேற்று (21.12.2022) காலை பாடசாலையின் விஞ்ஞான ஆய்வுக்கூடத்தில் பரிசோதனை ஒன்றை மேற்கொண்டிருந்த வேளையில் புரோமின் (Bromin) என்ற இரசாயனம் இருந்த குவளை உடைந்ததன் காரணமாக அது ஆய்வுக்கூடம் முழுவதும் பரவியுள்ளது.

இதனால் அங்கிருந்த ஐந்து மாணவர்களும் மூன்று ஆசிரியர்களும் பாதிப்புக்குள்ளாகி மூச்சுத்திணறல் காரணமாக புஸ்ஸல்லாவ வகுக்கப்பட்டிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரும் நோக்கில் கண்டி தீயணைக்கும் பிரிவினர் பாடசாலைக்கு விரைந்துள்ள அதேவேளை இரசாயனத்தை அப்புறப்படுத்தும் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளனர்.

ஏனைய மாணவர்களை பாடசாலை நிர்வாகம் உடனடியாக அப்புறப்படுத்தியுள்ள அதேவேளை அவர்களைப் பாதுகாக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பில் விரைந்து செயற்பட்ட பாடசாலை அதிபர் கம்பளை கல்வி வலயத்திற்கும் மாகாண கல்விப் பணிமனைக்கும் புஸ்ஸல்லாவ பொலிஸாருக்கும் அறிவித்ததன் பயனாக மேலதிக விசாரணைகளை புஸ்ஸல்லாவ பொலிஸார் கம்பளை பொலிஸ் அத்தியட்சகருடன் இணைந்து மேற்கொண்டு வருகின்றனர்.







# குமரபுரம் பகுதியில் இரசாயனத் தொழிற்சாலை; எதிர்ப்புத் தெரிவித்து கவனயீர்ப்புப் போராட்டம்!

கிளிநொச்சி பரந்தன் பிரதேசத்திற்குட்பட்ட குமரபுரம் பகுதியில் இரசாயன தொழிற்சாலைக்கான காணி எல்லையிடப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவித்து கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

குறித்த பகுதியில் உள்ள இரசாயன கூட்டுத்தாபனத்துக்கான காணிகள் எல்லையிடப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவித்து குறித்த போராட்டம் நேற்று (21) முன்னெடுக்கப்பட்டுள்ளது.





குறித்த காணிகளில் தாங்கள் நீண்ட காலமாக குடியிருந்து வருவதாகவும் தமது காணிகளையும் சேர்த்து இரசாயனத் தொழிற்சாலைக்கான காணியெனத் தெரிவித்து எல்லையிட்டதுடன், நீண்ட காலமாக பயன்படுத்தி வந்த வீதியை மூடியுள்ளதாகவும் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்துள்ளனர்.

# யானை தாக்கி இளைஞன் பலி

(அநுராதபுரம் செய்தியாளர்)

அநுராதபுரம் நீராவிய பகுதியில் காட்டு யானையின் தாக்குதலுக்குள்ளாகி 21 வயது இளைஞன் ஒருவர் பரிதாபகரமான முறையில் உயிரிழந்துள்ளதாக அநுராதபுரம் பொலிஸார் தெரிவித்தனர்.



நீராவிய ஜும்மா பள்ளிவாசலுக்கு அருகில் 21ஆம் திகதி நேற்று அதிகாலை இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதாக விசாரணைகளை மேற்கொண்டு வரும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

அநுராதபுரம் தேவானம்பிய திஸ்ஸபுர நீராவிய பகுதியை வசிப்பிடமாகக் கொண்ட ரஷான் எனப்படும் இளைஞனே இச்சம்பவத்தில் உயிரிழந்துள்ளார் என்பது தெரியவந்துள்ளது.

குறித்த இளைஞன் தனது சகோதரனை பஸ் தரிப்பு நிலையத்தில் விட்டதன் பின்னர் மீண்டும் வீடு நோக்கி வரும்போதே பள்ளிவாசலின் சுற்று மதில்களை சேதப்படுத்திக்கொண்டிருந்த காட்டுயானைக் கூட்டத்திலுள்ள ஒரு யானை இளைஞனைத் துரத்தி அடித்துள்ளமை தெரியவந்துள்ளது. காட்டு யானையின் தாக்குதலில் உயிரிழந்துள்ள இளைஞனின் சடலம் தற்சமயம் அநுராதபுரம் போதனா வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை அநுராதபுரம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

# நுவரெலியா மாவட்ட செயலாளரின் பன்னிரண்டாவது நடமாடும் சேவை

(நானுஓயா நிருபர்)

நுவரெலியா மாவட்ட செயலாளர் நந்தன கலபடவின் 2022ஆம் ஆண்டின் பன்னிரண்டாவது நடமாடும் சேவை அம்பகமுவ பிரதேச செயலகப் பிரிவில் நேற்று முன்தினம் (20) செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.



ஹிட்டிகே கிராமம், ஹகரபிட்டிய கிராமம், மினுவந்தெனிய, ஜம்புதென்ன, கொட்டேல்லென ஆகிய கிராம உத்தியோகத்தர் பிரிவிலுள்ள மக்களின் தேவைகளை பூர்த்தி செய்வதற்காக இச்சேவை நடத்தப்பட்டது.



நுவரெலியா மாவட்ட செயலாளர் நந்தன கலபடவின் பணிப்புரையின் கீழ் அம்பகமுவ பிரதேச செயலாளர் சிதாரா கமகே தலைமையில் இடம்பெற்ற இந்த நடமாடும் சேவையில், அடையாள அட்டைப் பிரிவினால் அடையாள அட்டை வழங்கும் பொதுச்சேவை மற்றும் ஒரு நாள் சேவையின் செயற்பாடு, வயது முதிர்ந்தவர்களுக்கான அடையாள அட்டை வழங்கல், பிறப்புச் சான்றிதழ் வழங்குதல், திருமணங்களைப் பதிவு செய்தல், பாடசாலைக்கு செல்லாத குழந்தைகளை பாடசாலைக்கு அனுப்புதல், வேலைவாய்ப்பு, வருங்கால மற்றும் தொழில் வழிகாட்டுதல் சேவைகள், ஊனமுற்ற குழந்தைகளுக்கான சேவைகளை வழங்குதல் மற்றும் ஆலோசனை வழங்குதல், பெண்களின் பிரச்சினைகளை தீர்ப்பது உள்ளிட்ட பல சேவைகள் மற்றும் குழந்தைகளின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகள் வழங்கப்பட்டன.

# சிவனொளிபாதமலை யாத்திரிகர்கள் வீசும் குப்பைகளால் சுற்றாடல் சீர்கேடு

(செ.தி.பெருமாள்)

சிவனொளிபாதமலை பருவகாலமான இந்த நாட்களில் மலையடிவாரம் முதல் உச்சி வரையுள்ள பகுதிகளில் பல பகுதிகளில் யாத்திரிகர்கள் குப்பைகள் வீசிவிட்டு செல்வதால் சுற்றுச்சூழல் மாசு அடையும் நிலை ஏற்பட்டுள்ளது.

இது குறித்து சிவனொளிபாதமலைக்கு பொறுப்பான பீடாதிபதி பெங்கமுவே தம்மதின்ன தேரர் ஆரம்ப காலத்தில் சகல அதிகாரிகளையும் ஒன்றிணைத்து கலந்துரையாடல்களை மேற்கொண்டிருந்தார்.

அதன்படி, மலை உச்சியில் இருந்து அடிவாரம்வரை உள்ள பகுதிகளில் குப்பைகள் போடவோ, வீசி எறியவோ வேண்டாம் எனவும் தரிசனம் செய்ய வரும் யாத்திரிகர்கள் மலைக்கு வரும்போது பிளாஸ்டிக் மற்றும் வெற்று போத்தல்கள், பொலித்தீன் குப்பைகள் போன்றவற்றை எடுத்து வரவேண்டாம் எனவும் அவர் வேண்டுகோள் விடுத்திருந்தார்.

எனினும், ஒரு சில யாத்திரிகர்கள் இவ்வாறு குப்பைகள் வீசி எறிந்துவிட்டுச் சென்றமை வேதனைக்குரியது என தேரர் கூறினார்.

இனியும் இவ்வாறு செய்ய வேண்டாம் என மக்களுக்கு தெரியும் வகையில் பதாகைகள் பொருத்தப்பட்டுள்ளன. மேலும், புனித யாத்திரை என்பதால் அந்தப் பிரதேசத்தில் மது, கஞ்சா, போதைப்பொருள் என்பன தடை செய்யப்பட்டுள்ளன. அவற்றை எடுத்து வரும் நபர்களை கைதுசெய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த வேண்டும் எனவும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.



# மிருக வைத்தியருக்கு கொலை அச்சுறுத்தல்

## வளர்ப்பு நாய்க்கு சிகிச்சையளிக்க வீட்டுக்கு வரவில்லையென அரசியல்வாதி கோபமாம்

நோயினால் பாதிக்கப்பட்ட வளர்ப்பு நாய்க்கு வைத்தியம் செய்ய செல்லாததன் காரணமாக முன்னாள் அமைச்சர் ஒருவர் தனக்கு மரண அச்சுறுத்தல் விடுத்ததாக ஜா-எல பிரதேசத்தைச் சேர்ந்த கால்நடை வைத்தியர் ஒருவர் ஜா-எல பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

குறித்த முன்னாள் அமைச்சர் கொழும்பில் உள்ள வீடொன்றில் வசிப்பதாகவும், தனது வீட்டிலுள்ள வளர்ப்பு நாய்க்கு உடல் நலக்குறைவாக உள்ளதால் சிகிச்சைக்கு வருமாறு கூறியதாகவும் ஆனால், தன்னால் வரமுடியாதென கூறியதால் தனக்கு கொலை மிரட்டல் விடுத்ததாகவும் வைத்தியர் தனது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# தொலைபேசி சார்ஜரால் நடந்த தீப்பரவல் சம்பவம்

வாத்துவ நகரில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சொகுசு வேன் ஒன்று தொலைபேசி சார்ஜரில் ஏற்பட்ட மின் கசிவு காரணமாக தீப்பிடித்து எரிந்ததாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

களுத்துறை நகர சபையின் தீயணைப்பு வாகனம் வருவதற்குள் பிரதேசவாசிகள் தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துள்ளனர்.

சாரதி தனது கைபேசியை சார்ஜ் செய்ய வைத்துவிட்டு அருகிலுள்ள கடைக்கு சென்றபோதே தீ பரவியது. இதனால் உயிர்ச்சேதம் எதுவும் ஏற்படவில்லை.

இதில் வேனின் முன் பகுதி முற்றிலும் எரிந்து நாசமானதாக பொலிஸார் தெரிவித்தனர்

# இளம் மாதர் முஸ்லிம் அமைப்பினால் வறுமையான மாணவர்களுக்கு உதவி

(ஏ.எஸ்.எம்.ஜாவித்)

இலங்கை இளம் மாதர் முஸ்லிம் அமைப்பின் ஏற்பாட்டில் கனடா ஸ்ரீலங்கா முஸ்லிம் பெண்கள் அமைப்பின் அனுசரணையில் மூவினத்தையும் சேர்ந்த மிகவும் வருமானம் குறைந்த ஏழை மாணவர்களுக்கு பாதணிகளுக்கான வவுச்சர்கள் உட்பட சுமார் 6 ஆயிரம் ரூபா பெறுமதியான கற்றல் உபகரணங்கள் நேற்று முன்தினம் (20) வழங்கப்பட்டுள்ளன.

மாதர் அமைப்பின் தலைவி தேசமான்ய பவாஸா தாஹா தலைமையில் தெமட்டகொடை வை.எம்.எம்.ஏ. தலைமை அலுவலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வில் கனடா ஸ்ரீலங்கா முஸ்லிம் பெண்கள் அமைப்பின் உயர்பீட உறுப்பினர்களான சீனத் சுஜா மற்றும் பர்ஹாத் இன்ஹாம் ஆகியோர் சிறப்பு அதிதிகளாக கலந்துகொண்டிருந்தனர்.

மாதர் அமைப்பின் அங்கத்தவர்கள் மற்றும் பெற்றோர்கள் கலந்துகொண்ட இந்நிகழ்வில் மாணவர்களுக்கு சிறப்பு அதிதிகளால் கற்றல் உபகரணப் பொதிகள் வழங்கிவைக்கப்பட்டன.

இந்த அமைப்பு கடந்த பல வருடங்களாக ஏழை மாணவர்கள் மற்றும் அடிப்படைத் தேவையுடையவர்களுக்கு தையல் இயந்திரங்கள், மருத்துவ உதவிகள், உலர் உணவுப் பொருட்கள் எனப்பல சேவைகளை செய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.






# வெற்றி நிச்சயம்

**"உங்கள் பிரச்சினை எதுவானாலும் ஒருமுறை என்னை தொடர்பு கொண்டால், 100% வெற்றி நிச்சயம்" நடக்காத காரியங்களையும் நடத்திவைக்கும் சக்தி என்னிடம் மட்டுமே உண்டு. என்னை நம்புங்கள். பணப்பிரச்சினை, தொழில் முடக்கம், வியாபார மந்தம், கடன் தொல்லை, முன்னேற்றத்தடை, திறமையிருந்தும் வாழ்க்கையில் முன்னேற முடியாமை, நினைப்பது ஒன்று நடப்பது ஒன்றாக இருத்தல், எதிலும் தோல்வி, எதிரித்தொல்லை, தீராதநோய், போதைவஸ்துப்பாவனை, வழக்கில் வெற்றிபெற, போட்டி பந்தயங்களில் ஜெயிக்க, வெளிநாடுசெல்ல, விற்கப்படாத வீடு/காணி/வாகனம் விற்க, கொடுத்த பணம் திரும்பி வர, படிப்பில் மந்தம், விவாகரத்தை தடுக்க, கணவன்-மனைவி பிரச்சினை, காதல் பிரச்சினை, பிரிந்தவர் ஒன்றுசேர, திருமணத்தடை, குழந்தையின்மை மற்றும் உங்கள் சகல பிரச்சினைகளுக்கும் 48 மணித்தியாலங்களுக்குள் 100% நிரந்தரத் தீர்வை பெற்றுக்கொடுப்பேன் என்று உத்தரவாதம் அளிக்கிறேன்.**

**உலகப் புகழ்பெற்றவரும் இலங்கையில் நம்பர் 1 மலையாள மாந்திரீக ஜாம்பவான், தத்துவஞானி, மகரிஷி, தேசபந்து, கௌரவ கலாநிதி.**

e b a j b . **ஸ்ரீமத் சுவாமிஜி—0710192687**

h t hh

தமிழன் THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com

**2022, டிசம்பர் 22ஆம் திகதி, வியாழக்கிழமை**

# ரசிகர்களை உணர்ச்சிவசப்பட வைத்த உலகக்கிண்ண உதைபந்து திருவிழா

22ஆவது உலகக்கிண்ண உதைபந்தாட்டப் போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை முடிவுக்கு வந்தது. நான்கு ஆண்டுகளுக்கு முன்பு நடந்த பிரான்ஸ் – குரேஷியா இறுதிப் போட்டியைப் பார்த்தவர்கள் 112 கோடி பேர் என்றால், ஆர்ஜென்ரீனாவுக்கும் பிரான்ஸுக்கும் இடையே கட்டாரில் நடந்த இறுதி ஆட்டத்தை உலகம் முழுவதும் 150 கோடி ரசிகர்கள் கண்டுகளித்துள்ளனர்.

இறுதி ஆட்டத்தை கட்டாரின் லுசாயில் மைதானத்தில் பார்த்தவர்கள் 88,966 பேர். நவம்பர் 20ஆம் திகதி முதல் டிசம்பர் 18ஆம் திகதி இறுதிப் போட்டிவரை, அந்தச் சிறிய வளைகுடா நாட்டுக்கு வந்த ரசிகர்களின் எண்ணிக்கை 7.6 இலட்சம் பேர்.

பிரான்ஸ் இம்முறை தனது கிண்ணத்தை தக்கவைத்துக் கொள்ளுமா, இல்லை லியோனல் மெஸ்ஸி தலைமையிலான ஆர்ஜென்ரீன அணி கிண்ணத்தை வெல்லுமா என்கிற கேள்வியுடன் கடந்த ஞாயிற்றுக்கிழமை கட்டாரின் லுசாயில் மைதானத்தில் போட்டி தொடங்கியது. முதல் பாதி முடியும்வரை இரண்டு கோல்களுடன் ஆர்ஜென்ரீன அணி ஆடிய அபார ஆட்டம், கடைசி பத்தே நிமிடங்களில் பிரான்ஸ் அணியின் இரண்டு கோல்களால் சமன் செய்யப்பட்டபோது, முன்னெப்போதும் இல்லாத பேரார்வத்துடன் ரசிகர்கள் காத்திருந்தனர். பிரான்ஸின் வெறித்தனமும் விரட்டிப்பிடித்து எப்படியாவது கோல் போடவேண்டுமென்ற அவர்களின் ஆக்ரோஷமும் ரசிகர்களை வேறொரு எல்லைக்கே கொண்டு சென்றது என்றால் மிகையில்லை.

ஒதுக்கப்பட்ட கூடுதல் நேரத்திலும் ஆர்ஜென்ரீனா அடித்த கோலை பிரான்ஸ் சமன் செய்ய, பெனால்ட்டி ஷூட் அவுட்டில் வெற்றியை முடிவு செய்வது என்று தீர்மானிக்கப்பட்டது. ஆர்ஜென்ரீனா 4-2 என்கிற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. உலகக்கிண்ண வரலாற்றில் பெனால்ட்டி ஷூட் அவுட்டில் முடிவு நிர்ணயிக்கப்பட்டிருப்பது இது மூன்றாவது முறை. 1994இல் பிரேஸில் இத்தாலியையும் 2006இல் இத்தாலி பிரான்ஸையும் பெனால்ட்டி ஷூட் அவுட்டில்தான் தோற்கடித்தன.

36 ஆண்டுகளுக்குப் பிறகு ஆர்ஜென்ரீனா உலகக் கிண்ணத்தை வென்றிருக்கிறது. 2002இல் பிரேஸிலுக்குப் பிறகு உலகக் கிண்ணத்தை வெல்லும் தென் அமெரிக்க நாடு ஆர்ஜென்ரீனா.

டீகோ மரடோனாவால் மீண்டும் சாதிக்க முடியாத அந்த வெற்றியை, அவர் மறைந்து இரண்டாண்டுகள் கழித்து, தனது வாரிசு என்று அவரால் அறிவிக்கப்பட்ட மெஸ்ஸி சாதித்து, மரடோனாவுக்கு அஞ்சலி செலுத்தியிருக்கிறார்.

32 அணிகள் மோதிய 2022 உலகக்கிண்ண உதைபந்தாட்டப் போட்டியில் குழுநிலை, 16 அணிகளின் நிலை, காலிறுதிப் போட்டி, அரையிறுதிப் போட்டி , இறுதிப் போட்டி என்று அனைத்திலும் கோல் போட்ட முதல் வீரராக சாதனை புரிந்திருக்கிறார் ஆர்ஜென்ரீனாவின் மெஸ்ஸி. ஜேர்மனியின் லோதார் மேத்யூஸை பின்னுக்குத் தள்ளி, உலகக்கிண்ணப் போட்டிகளில் மிக அதிகமான போட்டிகளில் (26) விளையாடிய சாதனையாளராக அவர் உயர்ந்திருக்கிறார். உலகக்கிண்ண இறுதிப் போட்டியில் 2 கோல்கள், 13 உலகக்கிண்ணப் போட்டி கோல்கள், இந்தப் போட்டியில் மட்டும் ஆர்ஜென்ரீனாவுக்காக 7 கோல்கள், இதுவரையில் அவரது அணிக்காக 98 கோல்கள் என்று மெஸ்ஸி படைத்த சாதனைகள் அவரை உலகின் தலைசிறந்த வீரராக உயர்த்தியிருக்கிறது.

கடந்த 92 ஆண்டுகளில் பிரேஸில், ஜேர்மனி, இத்தாலி, உருகுவே, பிரான்ஸ், ஆர்ஜென்ரீனா, ஸ்பெயின், இங்கிலாந்து ஆகிய நாடுகள் மட்டும்தான் உலகக்கிண்ணத்தை வென்றிருக்கின்றன. அதிலும் ஒருமுறைக்கும் அதிகமாகக் கிண்ணத்தை வென்ற நாடுகள் பிரேஸில் (5), ஜெர்மனி (4), இத்தாலி (4), ஆர்ஜென்ரீனா (3), பிரான்ஸ் (2), உருகுவே (2) ஆகியவைதான்.

1958 மற்றும் 1962ஆம் ஆண்டுகளின் போட்டிகளில் பிரேஸில் தொடர்ந்து வெற்றி பெற்றதுபோல் இம்முறை வெற்றி பெற விழைந்த பிரான்ஸின் கனவு தகர்ந்தது. அதுமட்டுமல்ல, 2006இல் இத்தாலியிடமும் இப்போது ஆர்ஜென்ரீனாவிடமும் பிரான்ஸ் தோற்றிருப்பது நேரடி மோதலில் அல்ல, பெனாலிட்டி ஷூட் அவுட்டில் என்பதுதான் மிகப்பெரிய சோகம்.

முதன்முறையாக உலகக்கிண்ண உதைபந்தாட்டப் போட்டி ஆசியாவை நோக்கி நகர்ந்திருக்கும் வேளையில், சில ஆசிய அணிகள் வருங்காலத்தில் கிண்ணத்தை வெல்லப் போவதற்கான அடையாளங்கள் தெரியத் தொடங்கியிருக்கின்றன. ஆர்ஜென்ரீனாவுக்கு எதிரான ஆட்டத்தில் சவூதி அரேபிய அணி 2 – 1 என்ற வெற்றியை ஈட்டியதும், நான்கு முறை உலகக் கோப்பையை வென்ற ஜேர்மனியை ஜப்பான் வீழ்த்தியதும் அதற்கான எடுத்துக்காட்டுகள்.

தென்கொரியா, போர்த்துகலை வீழ்த்தியதை யாருமே எதிர்பார்க்கவில்லை. உலகக்கிண்ண அரையிறுதி ஆட்டத்தை எட்டிய முதல் ஆபிரிக்க அணி மொரோக்கோ. உலகின் 22ஆவது இடத்திலுள்ள ஆபிரிக்க நாடான மொரோக்கோ, ஸ்பெயின், போர்த்துகல், பெல்ஜியம் ஆகிய அணிகளைத் தோற்கடித்தபோது கட்டாரில் கூடியிருந்த ரசிகர்களின் ஆரவாரம் விண்ணைப் பிளந்தது.

மெஸ்ஸி, கிறிஸ்டியானோ ரொனால்டோ, நெய்மர், பெபெ போன்ற பிரபலங்கள் ஒருபுறம் இருக்கட்டும், கட்டாரில் நடந்து முடிந்திருக்கும் 22ஆவது உலகக்கிண்ண உதைபந்தாட்டப் போட்டி சில புதிய நம்பிக்கை நட்சத்திரங்களை அடையாளம் காட்டியிருக்கிறது. இங்கிலாந்தின் புகாயோ சகா, ஜூட் பெலிங்கம், நெதர்லாந்தின் கோடி கப்கோ, போர்த்துகலின் கொன்ஸாலோ ரமோஸ், ஆர்ஜென்ரீனாவின் ஜூலியன் அல்வாரெஸ், குரேஷியாவின் ஜோஸ்கோ குவார்டியோல் போன்ற வீரர்கள் அடுத்த உலகக் கிண்ணத்தில் சாதனை படைக்கக்கூடும்.

அடுத்த உலகக்கிண்ண உதைபந்தாட்டப் போட்டியை அமெரிக்கா, கனடா, மெக்ஸிக்கோ ஆகிய மூன்று நாடுகளும் இணைந்து 2026இல் வட அமெரிக்காவில் நடத்த இருக்கின்றன. அதற்காக ரசிகர்கள் இப்போதிருந்தே காத்திருக்கத் தொடங்கிவிட்டார்கள். உலகளாவிய ரீதியில் அதிகம் பேரால் ரசிக்கப்படும் விளையாட்டு உதைபந்து. அதன் திருவிழாவை சிறப்புற நடத்தியமைக்காக கட்டாருக்கும் பாராட்டுகளைத் தெரிவித்தாக வேண்டும்.

# மனித உரிமை மீறல்களும் எழுச்சிப் போராட்டங்களும்

## ஓர் உலகளாவிய பார்வை
















வளர்ச்சியை நோக்கி மனித இனம் எவ்வளவு வேகமாக முன்னேறிக் கொண்டிருக்கிறதோ, அதே வேகத்தில் நாகரிகத்தைப் பின்னோக்கி இழுக்கும் மனித உரிமை மீறல்களும் தொடர்ச்சியாக அதிகரித்து வருகின்றன. உலக அளவில் 2022-ஆம் ஆண்டில் நடந்த மனித உரிமை மீறல்களையும், மக்களின் எழுச்சிப் போராட்டங்களையும் ஒரு விரைவுப் பார்வையாக நோக்குவோம்.

உக்ரைன் - ரஷ்யா போர்: வருடத்தின் தொடக்க நிகழ்வாக அமைந்த உக்ரைன் - ரஷ்யா போர், வருடம் முழுவதும் தொடர்ந்தது. ஆம், ஐரோப்பிய யூனியனில் உக்ரைன் இணைவதற்கு எதிர்ப்பு தெரிவித்து உக்ரைன் மீது ரஷ்யா கடந்த பிப்ரவரி மாதம் படை எடுத்தது. தற்போது உக்ரைனின் பல பகுதிகள் ரஷ்ய ராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ளன. போர் காரணமாக உக்ரைனில் லட்சக்கணக்கான மக்கள் அண்டை நாடுகளுக்கு இடம்பெயர்ந்தனர் . ஆயிரக்கணக்கான மக்கள் ரஷ்யப் படையினரால் கொல்லப்பட்டுள்ளனர்.

ரஷ்ய ராணுவ வீரர்களால் பாலியல் துன்புறுத்தலும் உள்ளான உக்ரைன் பெண்களின் கதைகளும் உலக அரங்கை அதிர வைத்தன. இத்துடன் எண்ணில் அடங்கா மனித உரிமை மீறல்களில் ரஷ்யா ஈடுபட்டது. இதன் விளைவாக உலக நாடுகளின் எதிர்வினைகளை ரஷ்யா நாளும் எதிர்கொண்டு வருகிறது.

சவுதியும் மரண தண்டனையும்: மரண தண்டனைகளை மனித குல நாகரிக வளர்ச்சிக்கு எதிரானவை என்று எதிர்ப்புக் குரல்கள் தொடர்ந்து எழுந்து வரும் நிலையில், இந்த 21-ஆம் நூறாண்டிலும் சவுதி, ஈரான், சீனா, வடகொரியா முதலான நாடுகள் தொடர்ந்து மரண தண்டனைகளை நிறைவேற்றி வருகின்றன. அந்த வகையில் சவுதியால் 2022-ஆம் ஆண்டு மார்ச் 12-ஆம் தேதி 81 பேருக்கு ஒரே நாளில் தூக்குத் தண்டனை நிறைவேற்றப்பட்டது. தூக்குத் தண்டனை குறித்து சம்பந்தப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு முன்கூட்டியே தெரிவிக்கவில்லை. ஊடகங்கள் மூலமாகவே அவர்கள் செய்தி அறிந்து கொண்டது பல்வேறு கேள்விகளை உலக அரங்கில் எழுப்பியன.

தலிபான்களும் பெண்களின் உரிமைகளும்: கடந்த 2021-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் ஆப்கனில் தலிபான்கள் ஆட்சியை கைப்பற்றினர். தலிபான்களின் தலைமையிலான ஆட்சி என்பது இன்னமும் ஆப்கன் பெண்களுக்கு இருண்ட காலமாகத்தான் இருந்து வருகிறது. தொடர்ந்து அங்கு பெண்கள் மற்றும் சிறுமிகளின் உரிமைகளும், கனவுகளும் அழிக்கப்படுகின்றன. பெண்கள் கல்வி கற்கவும், பணிக்குச் செல்லவும் தலிபான்கள் ஏராளமான கட்டுப்பாடுகளை விதித்து வருவது நாளும் செய்தியாகி வருகின்றது.

தொடரும் புலம்பெயர்பவர்களின் மரணம்: வறுமைக் கோட்டில் சிக்கியுள்ள மக்கள் பலருக்கு தங்களது பொருளாதாரத்தை மேம்படுத்திக் கொள்ள ஐரோப்பா, அமெரிக்கா, கனடா, ஆஸ்திரேலியா, நியூசிலாந்து முதலான நாடுகளுக்கு சென்று விடுவதுதான் கனவாக இருந்து வருகின்றது. இதற்காக, தங்கள் உயிரை பணயம் வைத்து மக்கள் பயணம் மேற்கொள்கின்றனர்.

அவ்வாறான பயணத்தில் நிகழும் மரணங்களும், அம்மக்களின் அபாயக் குரல்களும் 2022-ஆம் ஆண்டும் தொடர்ந்தன. ஆப்பிரிக்க நாடான மொராக்கோவிலிருந்து ஸ்பெயினுக்குச் செல்ல முயன்ற 2,000-க்கும் அதிகமான ஆப்பிரிக்கர்கள் மீது மொராக்கோ - ஸ்பெயின் பாதுகாப்புப் படையினர் நடத்திய தாக்குதலில் 20-க்கும் அதிகமானவர்கள் பலியாகினர். இந்த கண்மூடித்தனமான, மனிதத் தன்மையற்ற தாக்குதல்கள் சமூக வலைதளங்களில் வைரலாகி நம்முன் பெரும் கேள்வி முன்வைக்கப்பட்டது.

கத்தார் - எல்ஜிபிடி: 2022-ஆம் ஆண்டு ஃபிஃபா உலகக் கோப்பை போட்டிகள் கத்தாரில் நடத்தப்பட்டன. அப்போது போட்டியை காண வந்த புதுமைப் பாலினத்தவரை அந்நாட்டு பாதுகாப்புப் படைகள் நிறுத்தி, துஷ்பிரயோக வார்த்தைகளைப் பயன்படுத்தியதாக கூறப்பட்டது. இது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது.

இஸ்ரேல் - பாலஸ்தீனம்: கடந்த மார்ச் 1-ஆம் தேதி, முகமது நபிகள் விண்ணேற்றத்தைக் குறிக்கும் நாளான்று, கிழக்கு ஜெருசலேமில் டமாஸ்கட் கேட் பகுதியில், மன்வர் புர்கான் (11) என்ற காது கேளாத சிறுமி தனது குடும்பத்தினருடன் கூடியிருந்தார். அப்போது அங்கு வந்த இஸ்ரேல் பாதுகாப்புப் படையினர், பாலஸ்தீனர்களை கலைக்க தீவிரமாக இறங்கினர். தண்ணீரைப் பீய்ச்சியும், ஸ்டன் கையெறி குண்டுகளையும் வீசியும் பாலஸ்தீனர்கள் மீது இஸ்ரேல் பாதுகாப்புப் படையினர் தாக்குதல் நடத்தினர். இதனைத் தொடர்ந்து நடத்தப்பட்ட போராட்டங்களில் பாலஸ்தீனர்கள் பலர் கொல்லப்பட்டனர்.

மேலும், பாலஸ்தீனத்தில் இஸ்ரேலால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட மேற்குக் கரை பகுதியில் இஸ்ரேலின் ராணுவத்தின் அத்துமீறலை தொடர்ந்து செய்திகளாக உலகிற்கு கொண்டு வந்த அல்ஜசீரா பத்திரிகையாளர் ஷிரீன் அபு அக்லே, இஸ்ரேல் ராணுவத்தால் சுட்டுக் கொல்லப்பட்டார். இந்தக் கொலை உலக அரங்கில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

ஹிஜாப்புக்கு எதிராக முழங்கிய ஈரான் பெண்கள்: ஈரானில் கட்டாய ஹிஜாப்புக்கு எதிராக அந்நாட்டு இளம்பெண்கள் மற்றும் இளைஞர்களின் போராட்டம்தான் இந்த ஆண்டு கவனித்தக்க போராட்டமாக மாறியது.

மாஷா அமினி என்ற இளம்பெண் கண்காணிப்பு காவலர்களால் தாக்கப்பட்டு உயிரிழந்தார். இவரது இறப்பு ஈரானில் ஹிஜாப்புக்கு எதிராக மாபெரும் கிளர்ச்சி ஏற்பட வழிவகுத்தது. ஈரானில் செப்டம்பர் மாதம் தொடங்கிய இந்தக் கிளர்ச்சி மூன்று மாதங்களாகத் தொடர்ந்தது. இதில் 300-க்கு அதிகமானவர்கள் ஈரான் ராணுவத்தால் கொல்லப்பட்டனர். 15,000-க்கும் அதிகாமானோர் கைது செய்யப்பட்டனர். போராட்டத்தில் கலந்துகொண்டு பெண்களின் நலனுக்காக குரல் கொடுத்த ஈரான் கால்பந்தாட்ட வீரர் அமீர் நசீர் உள்ளிட்ட 20-க்கும் அதிகமானவர்களுக்கு 'கடவுளுக்கு எதிரான போர்' என்ற குற்றச்சாட்டில் ஈரான் தூக்குத் தண்டனை அறிவித்தது ஈரானை நோக்கி பல்வேறு கேள்விகள் எழக் காரணமாக அமைந்தது.

அமெரிக்க நீதிமன்றத்தின் சர்ச்சை தீர்ப்பு : அமெரிக்காவில் கருக்கலைப்புக்கு எதிரான அந்நாட்டு உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு, அங்கு மட்டுமல்லாமல் சர்வதேச அளவிலும் எதிர்ப்புகள் கிளம்பின. கருக்கலைப்புக்கு எதிரான நீதிமன்றத்தின் தீர்ப்பு, அமெரிக்காவை 150 வருடங்கள் பின்னால் அழைத்துச் சென்றுவிட்டது என்ற விமர்சனக் குரல்கள் வலுவாக ஒலிக்கத் தொடங்கியது.

கடந்த 1973-ம் ஆண்டு ரோ vs வேட் வழக்கில், அமெரிக்க அரசியல் சாசனத்தின் 14-வது திருத்தத்தின்படி கர்ப்பிணிகள் கருக்கலைப்பு செய்வதற்கு உரிமை உள்ளது என அந்நாட்டு உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்தது. இதையடுத்து, எத்தனை வாரங்கள் வரை கருக்கலைப்பு செய்ய அனுமதிப்பது என்பது உட்பட பல்வேறு விவாதங்கள் எழுந்தன. இந்நிலையில், மிசிசிபி மாகாண அரசு 2018-ல் கருக்கலைப்புக்கு தடை விதிக்க வகை செய்யும் சட்டத்தை இயற்றியது. இதன்படி 15 வாரங்களுக்குப் பிறகு கருக்கலைப்பு செய்ய முடியாது. இந்த சட்டத்தை எதிர்த்து தொடரப்பட்ட வழக்கை விசாரித்த அமெரிக்க கீழமை நீதிமன்றம், மாகாண அரசின் சட்டம் செல்லும் என தீர்ப்பளித்தது.

இதை எதிர்த்து அமெரிக்க உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யப்பட்டது. விசாரணை முடிவில் மிசிசிபி மாகாண அரசின் சட்டம் செல்லும் என உச்ச நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது. இதனைத் தொடர்ந்து அமெரிக்காவில் பல மாகாணங்களில், குறிப்பாக குடியரசுக் கட்சி ஆளும் மாகாணங்களில் கருக்கலைப்பு தடை செய்யப்பட்டுள்ளது. இதற்கு எதிராக அமெரிக்க பெண்கள் தொடர்ச்சியாக போராட்டங்களில் பங்கெடுத்தனர்.

எதிர்வினையை உருவாக்கிய சீனாவின் கட்டுப்பாடுகள்: கடந்த நவம்பர் மாதம் முதல் கரோனா பெருந்தொற்றைத் தடுக்க சீன அரசு பொது முடக்கம், போக்குவரத்து கட்டுப்பாடு உள்ளிட்டவற்றை அமல் செய்தது. இந்த நிலையில்தான் சீனாவின் ஜின்ஜியாங் மாகாண தலைநகரில் உரும்கி நகரில் அடுக்குமாடி கட்டிடம் ஒன்றில் தீ விபத்து ஏற்பட்டது. இதில் சிக்கி 10 பேர் உயிரிழந்தனர். இந்த அடுக்குமாடி கட்டிடத்தில் கரோனா கட்டுப்பாடு விதிகள் அமலில் இருந்ததால், அங்கிருந்தவர்களால் உடனடியாக வெளியேற முடியாமல் தீயில் சிக்கியதாக கூறப்பட்டது.

இதையடுத்து அரசுக்கு எதிராக உரும்கி நகரில் மக்கள் போராட்டம் தீவிரம் அடைந்தது. இந்தப் போராட்டம் சீனாவில் பல இடங்களில் பரவியது. இதனைத் தொடர்ந்து கரோனா கட்டுப்பாடுகளில் சீனா தளர்வை ஏற்படுத்தியது.

61 ஆண்டுகளுக்கு பிறகு... பாட்ரிஸின் பல்லை ஒப்படைத்த பெல்ஜியம்: பாட்ரிஸ் லுமும்பா... ஆப்பிரிக்கவின் விடுதலை வரலாற்று நாயகர்களில் மறுக்க முடியாத பெயர். காங்கோ ஐரோப்பாவின் காலனியாக இருந்ததை பாட்ரிஸ் ஒருபோதும் விரும்பியதே இல்லை. காங்கோ விடுபட்டு சுதந்திரமாக, அதேநேரத்தில் ஐரோப்பாவுடன் ஒற்றுமையாக இருக்க வேண்டும் என்று விரும்பினார். இந்தச் சூழலில் 1960-ஆம் ஆண்டு காங்கோ குடியரசாக அறிவிக்கப்பட்டது. ஜனநாயக முறையில் நாட்டின் பிரதமராக பாட்ரிஸ் லுமும்பா பதவியேற்றார். பெல்ஜியம் - காங்கோ உடன் ஏற்படுத்தப்பட்ட நட்பு உடன்படிக்கையையும் அவர் ரத்து செய்தார்.

பாட்ரிஸின் இந்த நடவடிக்கை பெல்ஜியத்தை கோபமடையச் செய்தது. இதனைத் தொடர்ந்துதான் வரலாற்றில் மன்னிக்க முடியாத குற்றத்திற்கு பெல்ஜியம் தன்னை உடன்படுத்திக் கொண்டது. நாடாளுமன்றத்தில் போதிய பெரும்பான்மை இருந்தும் அரசின் சொத்துகளை பாட்ரிஸ் சட்டத்துக்கு புறமாக பயன்படுத்திக்கொண்டார் என்று போலியான குற்றம் சுமத்தப்பட்டு அவரது ஆட்சி கலைக்கப்பட்டது. இந்த ஆட்சி கவிழ்ப்பின் பின்னணியில் பெல்ஜியம் இருந்தது. பாட்ரிஸ் கைது செய்யப்பட்டார்.

1961-ஆம் ஆண்டு ஜனவரி 17-ஆம் தேதி காங்கோ பாதுகாப்புப் படையால் பாட்ரிஸ் சுட்டுக் கொல்லப்பட்டார். பாட்ரிஸின் உடல் உறுப்பில் தங்கத்தினால் ஆன அவரது ஒரே ஒரு பல் மட்டுமே மிச்சம் இருந்தது. பாட்ரிஸின் இந்த மரணம் மனித இன வரலாற்றில் மிகக் கொடூரமான வன்முறையாக கருதப்பட்டது. இந்த நிலையில், 61 ஆண்டுகளுக்குப் பிறகு பாட்ரிஸின் பல்லை ராணுவ மரியாதையுடன் பெல்ஜியம் இந்த ஆண்டு ஜீன் மாதம் காங்கோவிடம் ஒப்படைத்தது.

(நன்றி-இணையம்)

# இன்றைய நாளில்...

1769 – சீன-பர்மியப் போர் (1765–69) முடிவுக்கு வந்தது.

1885 – இட்டோ இரோபுமி என்ற சாமுராய் ஜப்பானின் முதலாவது பிரதமராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

1891 – புகைப்படம் மூலம் முதன் முதலாக 323 புரூசியா என்ற சிறுகோள் கண்டுபிடிக்கப்பட்டது.

1915 – மலேசிய இலங்கைத் தமிழரால் வாங்கப்பட்ட யாழ்ப்பாணம் என்ற விமானம் பிரித்தானிய வான்படைக்கு அன்பளிப்புச் செய்யப்பட்டது.

1921 – சாந்திநிகேதன் கல்வி நிலையம் ஆரம்பமானது.

1964 – தமிழ்நாடு, தனுஷ்கோடி, மற்றும் இலங்கையின் வடக்குப் பகுதியையும் புயல் தாக்கியதில், 1,800 இற்கும் அதிகமானோர் உயிரிழந்தனர்.

1978 – மாவோ-கால இறுகிய கொள்கைகளைத் துறந்து திறந்த சந்தைக் கொள்கைகளை சீனப் பொதுவுடமைக் கட்சித் தலைவர் டங் சியாவுபிங் அறிமுகப்படுத்தினார்.

1978 – இலங்கையில் அப்போதைய நாடாளுமன்றத்தின் பதவிக்காலத்தை மேலும் ஆறாண்டுகளுக்கு நீடிப்பதற்காக நடத்தப்பட்ட தேசிய வாக்கெடுப்பில் 54.66% மக்கள் ஆதரவாக வாக்களித்தனர்.

1989 – கிழக்கு செருமனியையும் மேற்கு செருமனியையும் பெர்லினில் பிரித்த பிரான்டென்போர்க் வாயில் 30 ஆண்டுகளின் பின்னர் திறந்து விடப்பட்டது.

# நக்கல் நமசிவாயம்



# தங்கச்சங்கிலியை திருடியவர்கள் பொலிஸ் அதிகாரியின் மீது தாக்குதல்

## கம்பளையில் சம்பவம்

கம்பளையில் ஆசிரியை ஒருவரின் தங்கச்சங்கிலியை பறித்துக்கொண்டு ஓடிய திருடர்களைப் பிடிக்கச் சென்ற பொலிஸ் உயரதிகாரி ஒருவர் திருடர்களின் தலைக்கவசத்தினால் (ஹெல்மட்) தாக்கப்பட்டு படுகாயமடைந்த நிலையில் கம்பளை வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் (20) மாலை இடம்பெற்ற மேற்படி சம்பவத்தின்போது கம்பளை பொலிஸ் நிலைய குற்றத் தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரியான எம்.ரிஸ்வியே திருடர்களின் தாக்குதலுக்கு இலக்கான நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

குறித்த திருடர்கள் கம்பளை மறியாவத்தை பிரதேசத்தில் வைத்து ஆசிரியை ஒருவரின் ஐந்து இலட்சம் ரூபா பெறுமதியான தங்கச் சங்கிலியை பறித்துக்கொண்டு மோட்டார் சைக்கிளில் தப்பிச் சென்றுள்ளனர்.

மேற்படி சம்பவம் குறித்து கம்பளை கண்டி வீதியில் ஹெரோயின் போதைப்பொருள் சுற்றிவளைப்பில் ஈடுபட்டிருந்த பொலிஸ் உயரதிகாரிக்கு தெரியவந்ததையடுத்து குறித்த திருடர்களை முச்சக்கரவண்டியில் பின் தொடர்ந்து சென்று கம்பளை போத்தலாபிட்டிய பிரதேசத்தில் வைத்து இடைமறித்து கைது செய்ய முற்பட்ட சந்தர்ப்பத்திலேயே குறித்த இரு திருடர்களும் தாங்கள் அணிந்திருந்த தலைக்கவசத்தால் சரமாரியாக பொலிஸ் அதிகாரியை தாக்கிவிட்டு தப்பிச்சென்றுள்ளனர்.

சம்பவம் இடம்பெற்று சிறிதுநேரத்தின் பின்னர் புகையிரத பாதையில் ஒளிந்திருந்த கொள்ளையர்களில் ஒருவர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளதோடு, சந்தேகநபரிடம் மேற்கொண்ட முதற்கட்ட விசாரணைகளிலிருந்து கொள்ளைக்குப் பயன்படுத்திய மோட்டார் சைக்கிள் களனி விகாரைக்கு சுற்றுலா வந்திருந்த நபர் ஒருவரிடமிருந்து திருடியது என்பது தெரியவந்துள்ளது. மேற்படி சம்பவம் தொடர்பான விசாரணைகளை பொலிஸார் தொடர்ந்து முன்னெடுத்து வருகின்றனர்.

# டிஜிட்டல், கணினி மற்றும் ஆங்கில மொழிக் கல்விப் புரட்சியை உடனடியாக ஆரம்பித்தாக வேண்டும்

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவிப்பு







தற்போது நாட்டின் கல்வி முறையில் பாரிய வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாகவும், இவ்வாறான கல்வி முறையால் உலகை வெல்ல முடியாது எனவும், புதிய உலகை நோக்கிய பயணத்தில் உலகை வெற்றிகொள்ள வேண்டுமானால் டிஜிட்டல், கணினி மற்றும் ஆங்கில மொழிக் கல்விப் புரட்சியை நடைமுறைப்படுத்த வேண்டும் எனவும், ஒவ்வொரு பாடசாலையிலும் உள்ள பிள்ளைகளின் ஆங்கில மொழிப் புலமையை உலகில் மிக உயர் நிலைக்குக் கொண்டு வர வேண்டும் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

சிறுவர் தலைமுறையை அறிவு, திறமை மற்றும் வசதிகளுடன் பூரணப்படுத்துவது தார்மீகப் பொறுப்பு என்று நம்பி அதற்கான நிலையான நோக்கை முன்நோக்காகக்கொண்டு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவின் எண்ணக்கருவுக்கு அமைய நடைமுறைப்படுத்தப்படும் சக்வல (பிரபஞ்சம்) வேலைத்திட்டத்தின் கீழ் 47ஆவது கட்டமாக ஐம்பது இலட்சம் (50,00,000) ரூபா பெறுமதியான பாடசாலை பஸ் ஒன்றை பொலன்னறுவை தோபாவெவ தேசிய பாடசாலைக்கு நேற்று (21) அன்பளிப்பாக வழங்கி உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலு கூறியதாவது,

ஆங்கில மொழியை சரளமாகப் பயன்படுத்தும் திறனை விரிவுபடுத்த வேண்டும் எனக் கூறும்போது கிணற்றுத் தவளை எண்ணப்போக்கில் உள்ள சிலர் சிரிக்கிறார்கள். மரபான கல்வி முறைமையை ஒழித்து பிரச்சினைகளுக்குத் தீர்வு தரும் கல்வி முறைமையை உருவாக்க வேண்டும். சர்வதேச தொழிலாளர் சந்தையை மையமாகக்கொண்ட கல்வி முறைமை உருவாக்கப்பட வேண்டும்.

தேசப்பற்று எனக் கூறி இவ்வாறான கல்வி முறைமையை எதிர்ப்பது எமது நாட்டை மேலும் வங்குரோத்து செய்வதாகும். ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சியில் கணினி, தகவல் தொழில்நுட்பம் மற்றும் ஆங்கில மொழிக் கல்வியை இந்நாட்டில் யதார்த்தமாக மாற்றுவேன்.

அரசாங்கத்திற்கு விசுவாசமான 12 பேர் அமைச்சர்களாவதற்கு எதிர்பார்த்தவண்ணம் உள்ளனர். 220 இலட்சம் பேருக்கும் நன்மை செய்யாமல் அல்லாது, தமது குடும்பத்திற்கும் நெருக்கமானவர்களுக்கும் பதவிகளையும் சலுகைகளையும் வழங்குவதற்காகவே அமைச்சுப் பதவிகளை அவர்கள் பெற்றுக்கொள்ள முயல்கின்றனர்.

இந்த நிலையை ஐக்கிய மக்கள் சக்தி ஒரு கட்சியாக மாற்றியுள்ளது. பல்வேறு தரப்பினரின் போலி குற்றச்சாட்டுகளைக் கேளாது அரச ஒதுக்கீட்டின்றி எதிர்க்கட்சியில் இருந்தவாறு அரச பாடசாலைகளுக்கு பஸ்கள் வழங்கப்பட்டு வருகின்றன. இத்தகைய வெற்று குற்றச்சாட்டுகள் எதற்கும் நானும் எதிர்க்கட்சியும் சளைக்கப்போவதில்லை. தூய்மை, நேர்மை, வெளிப்படைத்தன்மையோடு குறித்த வேலைத்திட்டத்தை செயற்படுத்தி கிராமத்துக்கும், நகரத்துக்கும், நாட்டுக்கும் நன்மை பயப்பதால் குறித்த பணியைத் தொடர்வேன்.

இந்நாட்டில் கல்வி அனைவருக்கும் ஒரே மாதிரியாக அமையவேண்டும் என முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாச கூட நினைத்தார். அன்றிருந்த கல்விப் பாகுபாடுகள் நீக்கப்பட்டு உத்தியோகபூர்வ சீருடைகள் வழங்கப்பட்டதோடு, பாடசாலை மாணவர்களின் முறையான போசாக்குக்கான இலவச உணவுவேளைத் திட்டமும் நடைமுறைப் படுத்தப்பட்டது.

பாடசாலைக்கு பஸ் வழங்குவது இலவசக் கல்விக்கான ஒரு முதலீடாகும். கொழும்பிலுள்ள பாடசாலைகளுக்குப் போலவே தொலைதூர பிரதேச பாடசாலைகளுக்கும் பஸ் வசதிகளை வழங்குவதன் மூலம் கல்விப் பாகுபாட்டை இல்லாதாக்குவதாகும். இலவசக் கல்வி என்ற எண்ணக்கருவை வலுப்படுத்தி அதன் இரண்டாவது புரட்சியை இதன் மூலம் செயல்படுத்தப்படுவதாகும் என அவர் தெரிவித்தார்.

# இலங்கைக்கும் நேபாளத்துக்கும் இடையிலான இராஜதந்திர உறவுகளின் 65ஆவது ஆண்டு விழா

## காத்மாண்டுவில் கொண்டாட்டம்







இராஜதந்திர உறவுகளின் 65ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் வகையில் நேபாள உலக விவகார சபையுடன் இணைந்து இலங்கைத் தூதரகத்தால் 2022 டிசம்பர் 19ஆம் திகதி காத்மாண்டுவில் ஏற்பாடு செய்யப்பட்ட 'நேபாள - இலங்கை நட்புறவு; பழங்காலத் தொடர்புகளில் இருந்து நிகழ்காலம்' என்ற தலைப்பிலான உரையாடல் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் நேபாள வெளியுறவு அமைச்சர் நாராயண் கட்கா சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டார். பிம்ஸ்டெக் அமைச்சர்கள் மட்டத்திலான கூட்டத்திற்காக மார்ச் மாதம் இலங்கைக்கு மேற்கொண்ட தனது சொந்த விஜயம் உட்பட சமீபத்திய உயர்மட்ட அரசியல் ஈடுபாடுகள் குறித்து அமைச்சர் கட்கா உரையாற்றினார். பொது மற்றும் தனியார் துறைகளின் பங்களிப்புடன் வர்த்தக உறவுகளை உயர்த்துவதன் முக்கியத்துவத்தையும் அவர் வலியுறுத்தினார்.

வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் அலி சப்ரி காணொளி இணைப்பின் ஊடாக விசேட செய்தியொன்றை வெளியிட்டு கௌதம புத்தரின் காலத்து தொன்மையான இணைப்புகளைக் குறிப்பிட்டுள்ளார். அவர் லும்பினியை இலங்கையையும் நேபாளத்தையும் பிணைக்கும் தொப்புள் கொடி எனக் குறிப்பிட்டார். இரு நாடுகளும் நெருக்கடியான நேரங்களில் ஒருவருக்கொருவர் உதவுவதற்கு அசையாத விருப்பத்துடன் இருப்பது இலங்கை - நேபாள நட்புறவின் முக்கிய பலமாவதாக அவர் குறிப்பிட்டார்.

நேபாளத்தின் முன்னாள் வெளியுறவுச் செயலாளரும், 2005-2009 வரையிலான இலங்கைக்கான தூதுவருமான துர்கா பிரசாத் பட்டராய் நேபாளத்திலிருந்து சிறப்புரை ஆற்றியதுடன், பதிவுசெய்யப்பட்ட மற்றும் பதிவுசெய்யப்படாத பண்டைய தொடர்புகள் மற்றும் பௌத்தம் மற்றும் ராமாயணத்தின் மூலம் உறவுகளை மேம்படுத்துவதற்கு அவர்கள் எவ்வாறு பங்களித்தார்கள் என்பதை எடுத்துக்காட்டினார்.

பொருளாதார ஒத்துழைப்பை ஊக்குவிப்பதற்காக இருதரப்பு சட்ட ஆவணங்களின் மூலம், குறிப்பாக, கூட்டு ஆணைக்குழு மற்றும் விமான சேவைகள் ஒப்பந்தம் மூலம் அமைக்கப்பட்ட சட்ட அடிப்படைகள் குறித்தும் அவர் உரையாற்றினார். 2021இல் விமான இணைப்பை மீண்டும் நிறுவுவதானது வர்த்தகம் மற்றும் சுற்றுலாவை முன்னேற்றுவதற்கான ஒரு முக்கிய முயற்சியாக வரவேற்கப்பட்டது.

# கண்டெடுத்த பணத்தை ஒப்படைத்த கிளிநொச்சி தொழிலாளியின் நேர்மை



கிளிநொச்சி , கனகாம்பிகைகுளம் பகுதியில் ஆடு மேய்த்துக்கொண்டிருந்த ஒருவர் வீதியில் கண்டெடுத்த பெருந்தொகைப் பணத்தை பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளார்.

சுமார் 95,000 பணத்தை வீதியில் எடுத்தவர் கிராம அபிவிருத்தி சங்கத்திடம் கையளித்திருந்துள்ளார்.

எனினும், மேற்படி பணத்திற்கு யாரும் உரிமை கோராத நிலையில் குறித்த பணம் கிளிநொச்சி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

பொலிஸார் குறித்த பணத்தை நீதிமன்றத்தில் ஒப்படைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

ஏழ்மையான நிலையிலும் வீதியில் கிடந்து எடுத்த பணத்தை நேர்மையான முறையில் ஒப்படைத்தவருக்கு சமூக வலைத்தளங்களில் பாராட்டுகள் குவிந்து வருகின்றன.

# காணாமல்போன சிறுவனைத் தேடி பொலிஸ் விசாரணை



எப்பாவல – கிரலோகம பகுதியில் காணாமல் போயுள்ள 9 வயதுசட சிறுவனை தேடி பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

குறித்த சிறுவன் கடந்த 19ஆம் திகதி இரவுமுதல் காணாமல் போயுள்ளார்.

சிறுவனின் வீட்டிற்கு அருகில் வெல்டிங் பட்டறையை நடத்திவந்த நபரொருவரே குறித்த சிறுவனை இறுதியாக அழைத்துச் சென்றுள்ளமை விசாரணைகளில் தெரியவந்துள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

## 21.12.2022 நாணய மாற்று வீதம்

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

| நாணயம் | கொள்வனவு வீதம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 128 1063 | 14 0751 |
| கனேடியன் டொலர் | 152 0 | 164 0146 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 4 ,70 3 | 42,8511 |
| யூரோ | 27 5684 | 285 2045 |
| ஜப்பான் யென் | 1 6015 | 1 6431 |
| சிங்கப்பூர் டொலர் | 153 657 | 165 0122 |
| ஸ்ரேலிங் பவுன் | 325 5664 | 342 4851 |
| சுவிஸ் பிரான்ங் | 273 1622 | 3 2 3550 |
| ஐ.அ.டொலர் | 250 736 | 260 6016 |

| நாடு | நாணயம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 852 1142 |
| குவைட் | குவைட் தினார் | 0,075 1436 |
| ஓமான் | ஓமான் றியால் | 832 1126 |
| கட்டார் | கட்டார் றியால் | 88 2650 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 85 4483 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 87,7618 |







நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி நிலைமையின் பின்னர் நெடுந்தீவிலுள்ள சுற்றுலா மையங்களுக்கு நாட்டில் பல்வேறுபட்ட இடங்களில் இருந்தும் தென் பகுதியிலிருந்தும் அதிகளவு மக்கள் வருகை தந்து நெடுந்தீவிலுள்ள சுற்றுலா மையங்களை பார்வையிடுகின்றனர். வடமாகாணத்தில் சுற்றுலா மையங்கள் அதிகமாக உள்ள நெடுந்தீவு பகுதியில் 550 வருடம் பழைமை வாய்ந்த மரம், வெளிச்சவீடு, ஒல்லாந்தர் காலத்து கோட்டை, போர்த்துக்கேயர் காலத்து வைத்தியசாலை மற்றும் மேலும் பல தொல்பொருள் சான்றுகள், வரலாற்றுச் சின்னங்கள் காணப்படுகின்ற நிலையில் நாட்டின் பல்வேறுபட்ட இடங்களிலிருந்தும் நெடுந்தீவுக்கு வருகை தருகின்றனர்.

திகதி 20.12.2022
செவ்வாய்க்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk
NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம்: 4975
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ.9,826,260.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ.13,459,647.00
ஆங்கில எழுத்து C வெற்றி இலக்கங்கள் 0 9 3 2 8 8

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3217
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ.4,680,100.00
ஆங்கில எழுத்து X வெற்றி இலக்கங்கள் 02 39 66 77
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.64,321,878.80

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு இலக்கம்: 1430
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 2,154,100.00
வெற்றி இலக்கினம் மகரம் வெற்றி இலக்கங்கள் 0 2 5 2 3 7
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.12,294,976.80

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் : 1005
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 2,479,820.00
Z 15 23 49 74
வெற்றி இலக்கினம் வெற்றி இலக்கங்கள்
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 138,533,233.60

ராசி சுப பலன் Handahana
சீட்டிழுப்பு இலக்கம் : 284
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ.8,498,760.00
இலக்கினம் துலாம் வெற்றி இலக்கங்கள் 08 26 29 60
விசேட இலக்கினம் துலாம்
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.2,546,828.60

கோடி 28+ Mega POWER மெகா பவர்
சீட்டிழுப்பு இலக்கம் 1323
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ.3,603,340.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ.287,724,410.00
S 07 40 48 57 59
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ.10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ.10,000,000.00

தேசிய லொத்தர் சபை National Lotteries Board
தொலைபேசி: 011-4607000, 011 - 4607001 - 2 Email : info@nlb.lk
பெக்ஸ்: 011-4669475 Web : www.nlb.lk

# நுவரெலியாவில் தொடரும் வீதி விபத்துக்கள் வேகத்தடை அமைக்குமாறு கோரிக்கை

(திவாகரன்)



நுவரெலியா பிரதான பஸ் நிலையத்தினுள் வீதியைக் கடக்க பொதுமக்கள் அவதிப்படுவதால் வேகத்தடை மற்றும் பாதசாரிகள் கடவை ஆகியவற்றை அமைத்து ஒழுங்குபடுத்த வேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நுவரெலியா பஸ் தரிப்பிடத்தில் இருந்து அனைத்து மாவட்டங்களுக்கும் பஸ்கள் இயக்கப்படுகின்றன. குறிப்பாக நுவரெலியாவில் இருந்து தலவாக்கலை, லபுக்கலை நோக்கி இயக்கப்படும் பஸ்கள் நிறுத்தப்படும் இடத்தில் இதுவரை 5 உயிரிழப்புக்கள் இடம்பெற்றுள்ளன. கடந்த வருடத்தில் மாத்திரம் அவ்விடத்தில் இரு விபத்துகளில் இருவர் உயிரிழந்துள்ளனர். சாரதிகளின் கவனக்குறைவே விபத்துகளுக்கும் உயிரிழப்புகளுக்கும் முக்கிய காரணமாக உள்ளன.

நுவரெலியாவிற்கு பல்வேறு பணிகள் நிமித்தம் வருபவர்கள் காரணமாக இப்பகுதியில் எப்போதும் பொதுமக்கள் நடமாட்டம் அதிகமாக காணப்படும். இவ்விடத்தில் பஸ்கள் வேகமாக வரும் நிலையில், வேகத்தடை மற்றும் பாதசாரிகள் கடவை இல்லாததால் அடிக்கடி விபத்துக்களும் இதனால் பலர் பாதிப்புக்குள்ளாவதும் தொடர்கிறது. எப்பொழுதும் பரபரப்பாக இருக்கும் இவ்விடத்தில் தொடர்ச்சியாக பஸ்கள் சென்று கொண்டே இருப்பதால் பொதுமக்கள் வீதியைக் கடக்க பெரிதும் சிரமப்படுகின்றனர். இதனால் இந்த இடத்தில் அடிக்கடி விபத்து ஏற்படுவது வழமையாகிவிட்டது.

குறிப்பாக காலை, மாலை நேரங்களில் பொதுமக்கள் சென்று வருவதால் போக்குவரத்து நெரிசல் ஏற்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. பஸ் நிலையத்தில் முக்கிய வீதிகள் சந்திக்கும் இந்த இடத்தில் காலை, மாலை நேரங்களில் போக்குவரத்து பொலிஸார் சேவையில் இருந்தால் பொதுமக்கள் மற்றும் பஸ் சாரதிகள் எந்தவித சிரமமும் இன்றி செல்ல முடியும் என இப்பகுதி பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, நுவரெலியா பஸ் நிலையத்தினுள் பொதுமக்கள் செல்லும் பகுதியில் பாதசாரிகள் கடவை மற்றும் வேகத்தடை என்பன அமைப்பதுடன் வேகத்தடைகள் தெரியும்படி வர்ணம் பூசப்பட வேண்டும். இரவில் ஒளிரும்படி விளக்குகள் பொருத்தப்பட வேண்டும். வேகத்தடை இருப்பதை உணர்த்தும் வகையில் 40 மீற்றர்களுக்கு முன்பே எச்சரிக்கை பலகை வைக்க வேண்டும் போன்ற கோரிக்கைகளை இப்பகுதிவாழ் பொதுமக்கள் உரிய அதிகாரிகளுக்கு விடுத்துள்ளனர்.

# சீதையம்மன் ஆலயத்தில் 25ஆம் திகதி விசேடபூஜை

(நுவரெலியா நிருபர்)

மலையக மக்கள் இலங்கைக்கு வருகை தந்து 200 வருடங்கள் நிறைவடைவதை முன்னிட்டு நுவரெலியா சீதையம்மன் ஆலயத்தில் எதிர்வரும் 25ஆம் திகதி மு.ப. 11.30 மணிக்கு விசேட பூஜை நடத்தப்படுகின்றது. இந்தியாவிலிருந்து வருகை தரும் ராஜேந்திரன் குருக்கள் நுவரெலியா சீதையம்மன் ஆலயம் உட்பட மலையகத்தின் பல்வேறு பகுதிகளிலும் பூஜை வழிபாடுகளை நடத்தவுள்ளார்.

நுவரெலியா - ஆவேலியா முத்துமாரியம்மன் ஸ்ரீ சீத்தாஎலிய சீதையம்மன் ஆலயத்தின் அறங்காவலர் சபைத் தலைவரும் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான வேலுசாமி இராதாகிருஷ்ணனின் அழைப்பின் பேரில், ராஜேந்திரன் குருக்கள் நாளை 23ஆம் திகதி இலங்கைக்கு வருகை தரவுள்ளார்.

மலையக மக்கள் இந்தியாவில் இருந்து இலங்கைக்கு வருகை தந்து 2023ஆம் ஆண்டுடன் 200 வருடங்கள் பூர்த்தியாவதை முன்னிட்டும் இலங்கையில் தற்பொழுது ஏற்பட்டுள்ள பொருளாதார பின்னடைவில் இருந்து நாடு சுபீட்சம் பெறவும் மலையக மக்களுக்கும் இலங்கையின் ஏனைய சமூகங்களுக்கும் ஆசி வேண்டியும் இந்த விசேட பூஜை வழிபாடுகள் நடைபெறவுள்ளன.

இதேவேளை, 24ஆம் திகதி கொழும்பு வெள்ளவத்தையில் கங்காதீஸ்வரர் யாகபீடத்தில் மனவள ஆலோசகர் சாமி கங்காதரன் தலைமையில் விசேட பூஜை நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதுடன் 25ஆம் திகதி மாலை 3.00 மணியளவில் தலவாக்கலை முருகன் ஆலயத்தில் விசேட கலந்துரையாடல் ஒன்றும் இடம்பெறவுள்ளது.

# இரத்தினபுரியில் சட்டவிரோதமான இரத்தினக்கல் அகழ்வால் பாதிப்பு

(பலாங்கொடை மேலதிக நிருபர்)

இரத்தினபுரி மாவட்டத்தில் இரத்தினக் கற்களை அகழ்ந்துவிட்டு மூடாமல் கைவிடப்பட்டுள்ள குழிகளால் சுற்றாடலுக்கு பாரிய அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக சுகாதார மற்றும் சுற்றாடல் பாதுகாப்பு அமைப்புகள் எச்சரிக்கை விடுத்துள்ளன. இரத்தினபுரி மாவட்ட கிராமப்பகுதிகளில் குறிப்பாக ஆற்றங்கரைகள், நீர்நிலைகளை அண்டிய பகுதிகள், கம்பனி நிர்வாகங்களில் இயங்கும் பெருந்தோட்டங்கள், தரிசு நிலங்கள் ஆகியவற்றில் இரத்தினக்கல் அகழ்வு பரவலாக இடம்பெற்று வருகிறது.

இவ்வாறாக இடம்பெறும் இரத்தினக்கல் அகழ்வுகளில் பெரும்பாலானவை சட்டவிரோதமாக இடம்பெறுவனவாகும். பெரும்பாலும் இரவு வேளைகளில் திருட்டுத்தனமாக குழிகளைத் தோண்டி இரத்தினக்கற்களை அகழ்ந்துவிட்டு தப்பிச்செல்வது இவர்களது வழமையாகும்.

இவ்வாறான கைவிடப்பட்டு மூடப்படாமலிருக்கும் பெருந்தொகையான குழிகளாலேயே இந்நிலைமை ஏற்பட்டுள்ளதாக புகார் தெரிவிக்கப்படுகிறது. கவனிப்பாரற்று கிடக்கும் இக்குழிகளில் நீர் மற்றும் கழிவுப் பொருட்களும் தேங்கிக் கிடப்பதால் நுளம்புகளின் பெருக்கம் அதிகரிப்பதாகவும் டெங்கு, மலேரியா, மூளைக்காய்ச்சல் போன்ற நோய்கள் பரவலாக காணப்படுவதாலும் இப்பகுதியில் அதிக அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாகவும் சுகாதாரத்துறை தகவல் குறிப்புகள் தெரிவித்துள்ளன. இந்நிலையில் இத்தகைய சட்டவிரோத இரத்தினக்கல் அகழ்வுகளைத் தடுத்து நிறுத்துவதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கடும் நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என்று இப்பகுதிவாழ் பொதுமக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.



இலங்கைக்கான பிரான்ஸ் தூதுவர் ஜீன் பிரைன் கொய்ஸ்பெக்டல் மற்றும் மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ கமகே ஆகியோருக்கிடையிலான சந்திப்பு கண்டி ஆளுநர் அலுவலகத்தில் இடம்பெற்றது. இதன்போது இரு நாடுகளுக்குமிடையிலான நல்லுறவுகள் குறித்து கலந்துரையாடப்பட்டதுடன், நினைவுச் சின்னங்களும் பரிமாறப்பட்டன. (கண்டி நிருபர்)

# மலையகப் பாடசாலைகளில் போதைப்பொருள் சோதனை

(எஸ்.கணேசன்)



பாடசாலை மாணவர்கள் மத்தியில் போதைப்பொருள் பாவனை அதிகரித்துள்ளதாக தொடர்ந்து புகார் தெரிவிக்கப்பட்டுவரும் நிலையில், பாடசாலைகளை கண்காணிக்கும் வகையில் கல்வி அமைச்சு மற்றும் இலங்கை பொலிஸார் ஒன்றிணைந்து முன்னெடுத்து வரும் போதைப்பொருள் சோதனை நடவடிக்கைகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. நேற்று முன்தினம் (20) நாட்டில் பல்வேறு பகுதிகளில் உள்ள பாடசாலைகளில் கண்காணிப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

நுவரெலியா பிரதான பொலிஸ் அத்தியட்சகர் புத்தி உடுகமசூரியவின் பணிப்புரையின் பிரகாரம், நுவரெலியா வலயக் கல்விப் பணிப்பாளரின் அனுமதியுடன் பெருந்தோட்டப் பகுதிகளில் உள்ள பாடசாலைகளில் போதைப்பொருள் சோதனை நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன.

அந்தவகையில் நேற்றைய தினம் கொட்டகலை கேம்பிரிட்ஜ் கல்லூரியிலும் கொட்டகலை தமிழ் மகா வித்தியாலயத்திலும் இந்த போதைப்பொருள் சோதனை நடவடிக்கைகள் இடம்பெற்றன. தனித்தனியாக பாடசாலை மாணவர்களது புத்தகப் பைகள் சோதனை செய்யப்பட்டதுடன், ஆடைகளும் சோதனை செய்யப்பட்டன.

குறித்த பிரதான பாடசாலைகளின் அதிபர்களின் அனுமதியுடன், கொட்டகலை ஐக்கிய வர்த்தக சங்கத்தின் போதைப்பொருள் ஒழிப்புப்பிரிவுக் குழுவின் பங்குபற்றலுடன் திம்புள்ள - பத்தனை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தலைமையிலான விசேட பொலிஸ் குழுவின் மூலம் மாணவர்கள் சோதனை செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# யாழ். சிறையிலுள்ள மியன்மார் அகதிகளுக்கு அத்தியாவசியப் பொருட்கள் வழங்கிவைப்பு





(மன்னார் நகர் நிருபர்)

இலங்கையின் வடக்கு கடற்பரப்பில் பழுதடைந்த படகில் தத்தளித்த நிலையில் கடற்படையினரால் மீட்கப்பட்ட ரோஹிங்கிய முஸ்லிம் அகதிகள் 105 பேர் யாழ்ப்பாணம் சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டுள்ள நிலையில், அவர்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்களை மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனம் (மெசிடோ) நேற்று முன்தினம் (20) மாலை யாழ்ப்பாணம் சிறைச்சாலைக்கு நேரடியாக சென்று வழங்கியது.


மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் பணிப்பாளர் ஜாட்சன் பிகிராடோ தலைமையிலான குழுவினர் நேற்று முன்தினம் மாலை யாழ்ப்பாணம் சிறைச்சாலைக்கு சென்று சுமார் 19 இலட்சம் ரூபா பெறுமதியான ஆண்கள், பெண்கள் சிறுவர்களுக்கான ஆடைகள், சுகாதாரப் பொருட்கள், உணவுகள் உள்ளடங்கலான பொருட்களை வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜாவின் மேற்பார்வையில் வழங்கியது.

யாழ். சிறைச்சாலையிலிருந்து மிரிஹான விலுள்ள குடிவரவு தடுப்பு மையத்திற்கு அனுப்ப நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில், அவர்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்கள் இவ்வாறு மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் பணிப்பாளர் ஜாட்சன் பிகிராடோ தலைமையிலான குழுவினரால் வழங்கப்பட்டது.

பர்மாவிலிருந்து விரட்டப்பட்ட ரோஹிங்கிய இன முஸ்லிம்கள் பங்களாதேஷில் அமைந்திருந்த அகதி முகாமில் தங்கியிருந்த சமயம், இந்தோனேசியாவுக்கு தப்பிச் செல்லும் நோக்கில் படகு மூலம் சட்டவிரோதமாக பயணித்தபோது நடுக்கடலில் படகு பழுதடைந்து 3 வாரங்களாக நடுக்கடலில் தத்தளித்தபோது இலங்கை கடற்படையினரால் கடந்த சனிக்கிழமை காப்பாற்றப்பட்டனர்.

இந்நிலையில் படகில் பயணித்த 105 பேரில் 104 பேர் யாழ்ப்பாணம் சிறைச்சாலைக்கு மாற்றப்பட்ட அதேநேரம், படகு உரிமையாளரை எதிர்வரும் ஜனவரி 2ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# கிளிநொச்சி பொதுச் சந்தைக்குள் தேங்காய் வியாபாரிகள் நெருக்கடியில்



(மு.தமிழ்ச்செல்வன்)

கிளிநொச்சி பொதுச் சந்தைக்குள் தேங்காய் வியாபாரிகள் கூறு விலை கோரல் மேற்கொள்ளும் இடத்தில் மழை காரணமாக நெருக்கடியை சந்தித்துவருவதாக கவலை தெரிவித்துள்ளனர்.

பொருத்தமற்ற இடம் காரணமாக மழை காலங்களில் சேறும் சகதியுமாக காணப்படுகிறது என்றும், அத்தோடு அருகிலுள்ள மலசலகூடங்களிலிருந்து வெளியேறும் நீர் சேர்ந்து காணப்படுவதாகவும் இதனால் கொள்வனவு மற்றும் விற்பனையில் ஈடுபடுவதில் நெருக்கடியாக இருப்பதாகவும் தேங்காய் வியாபாரிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

கரைச்சி பிரதேச சபையின் கீழ் குறித்த சந்தை கிளிநொச்சி மாவட்டத்திற்கான பொதுச் சந்தையாகவும் காணப்படுவதோடு நாளாந்தம் பெருமளவான கொள்வனவாளர்களும், விற்பனையாளர்களும் ஒன்றுகூடுகின்ற சந்தையாகவும் விளங்குகிறது.

எனவே, கரைச்சி பிரதேச சபையினர் இதனை கருத்திலெடுத்து உரிய நடவடிக்கையினை மேற்கொள்ள வேண்டும் என்றும் வியாபாரிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# யாழ். பொது நூலகத்திலுள்ள மேலதிக நூல்கள் அன்பளிப்பு



யாழ். மாநகர சபையின் பொது நூலகத்தில் மேலதிகமாக காணப்படும் புதிய புத்தகங்களை வடமாகாண ரீதியில் நூலகங்களுக்கு வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் யாழ். மாநகர சபை பொது நூலக மண்டபத்தில் நடைபெற்றது.

யாழ். மாநகர சபை பொது நூலகத்தில் காணப்படும் மேலதிகமான புதிய புத்தகங்களை ஏனைய நூலகங்களின் பயன்பாட்டுக்கு வழங்குவது தொடர்பில் பிரேரணை ஒன்று யாழ். மாநகர சபை முதல்வர் வி.மணிவண்ணனால் முன்மொழியப்பட்டு அது உறுப்பினர்களால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது.

இந்நிலையில், அச்செயற்றிட்டத்தின் முதற்கட்டமாக 17 பாடசாலை நூலகங்கள் மற்றும் 14 பிரதேச சபைக்குரிய 31 நூலகங்களுக்கு பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட புத்தகங்கள் யாழ். மாநகர முதல்வர் மணிவண்ணனால் வழங்கப்பட்டது.

எதிர்வரும் காலங்களிலும் புத்தகங்கள் தேவைப்படும் நூலகங்கள், அதற்கான கோரிக்கை கடிதங்களை வழங்கும் பட்சத்தில் அந்நூலகங்களுக்கும் புத்தகங்கள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாநகர முதல்வர் உறுதியளித்தார்.

யாழ்.பொதுநூலக மண்டபத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில் யாழ். மாநகர முதல்வர் வி.மணிவண்ணன் மற்றும் மாநகர ஆணையாளர் இ.த.ஜெயசீலன் பொது நூலக பிரதம நூலகர், பாடசாலை, பிரதேச சபைகளின் நூலகர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கான தொழிற்பயிற்சி நிலையம் கிளிநொச்சியில் திறந்துவைப்பு







மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூகசேவை அமைச்சின் கீழ் வரும் சமூக சேவைகள் திணைக்களத்தினால் வடமாகாணத்திற்கான மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கான தொழிற்பயிற்சி நிலையம் நேற்று முன்தினம் திறந்துவைக்கப்பட்டது.

கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரனும் மகளிர் சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக சேவைகள் அமைச்சின் மேலதிக செயலாளர் ரத்நாயக்கவும் அதிதிகளாக கலந்துகொண்டு பயிற்சி நிலையத்தை திறந்துவைத்தனர்.

இந்நிகழ்வில் சமூக சேவைகள் திணைக்களப் பணிப்பாளர், மேலதிக பணிப்பாளர், உதவிப் பணிப்பாளர் மற்றும் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர், மேலதிக அரசாங்க அதிபர் (காணி) ஆகியோர் உட்பட மாவட்ட செயலக பதவிநிலை உத்தியோகத்தர்களும் கலந்து சிறப்பித்தனர்.

முதல் தடவையாக 50 மாணவர்கள் பயிற்சிநெறிக்கு இணைத்துக்கொள்ளப்பட்டதோடு, தையல் மற்றும் தகவல் தொழில்நுட்பப் பயிற்சிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இப்பயிற்சி நிலையம் மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கான இலவச வதிவிட பயிற்சியை வழங்கும் நிறுவனமாக தொழிற்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# தென்மராட்சிப் பிரதேச பண்பாட்டுப் பெருவிழா



(சாவகச்சேரி நிருபர்)

வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம், தென்மராட்சி பிரதேச செயலகக் கலாசார பேரவை மற்றும் சாவகச்சேரி கலாசார மன்றம் ஆகியன இணைந்து நடத்திய தென்மராட்சி பிரதேச பண்பாட்டுப் பெருவிழா கடந்த திங்கட்கிழமை (19) பிற்பகல் சாவகச்சேரி கலாசார மண்டபத்தில் இடம்பெற்றது.

தென்மராட்சி பிரதேச செயலர் திருமதி உஷா சுபலிங்கம் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் பிரதீபனும், சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பிரதி பணிப்பாளர் திருமதி சி.இராஜமல்லிகை மற்றும் சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி சி.சுதோக்குமார் ஆகியோரும் கௌரவ விருந்தினராக கலாபூஷணம் பொன் ஸ்ரீவாமதேவனும் கலந்து சிறப்பித்திருந்தனர்.

நிகழ்வில் சிறப்பம்சங்களாக கண்ணன் நடனம், புல்லாங்குழல் இசை, திருப்புகழ் நடனம், நாட்டிய நடனம், குறத்தி நடனம், கலைச்சாகரம் மற்றும் இளங் கலைச்சாகரம் விருது வழங்கல் நிகழ்வு, அன்னக்கிளி நாடகம், கலைஞர்கள் கௌரவிப்பு மற்றும் பரிசளிப்பு வைபவம் ஆகியன இடம்பெற்றன.

மேலும் நிகழ்வில் சாவகச்சேரி பிரதேச சபை தவிசாளர் க.வாமதேவன், சாவகச்சேரி நகரசபையின் உப தவிசாளர் பாலமயூரன், விழா அனுசரணையாளர்கள், கலைஞர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் கலை இரசிகர்கள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

# எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் அறிக்கையில் சிறுபான்மையினருக்கு அநீதியிழைக்கப்படக் கூடாது

## ஆணைக்குழு தலைவருடனான சந்திப்பில் ரிஷாட் எம்.பி. வலியுறுத்து

உள்ளூராட்சி நிறுவனங்களின் வட்டார எல்லை நிர்ணயத்தை மேற்கொள்வதற்காக நியமிக்கப்பட்டுள்ள தேசிய எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரியவை, மக்கள் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் கொழும்பில் கடந்த செவ்வாய்க்கிழமை (19) சந்தித்துக் கலந்துரையாடினார்.



இதன்போது, எல்லை நிர்ணயம் தொடர்பில் நாடளாவிய ரீதியில் மக்கள் காங்கிரஸ் கட்சியினால் நடத்தப்பட்ட கலந்துரையாடல்களின் பின்னர், பொதுமக்களினாலும் பொது அமைப்புகளினாலும் எல்லை நிர்ணய திருத்தம் சம்பந்தமாக தமது கட்சிக்கு வழங்கப்பட்ட கோரிக்கைகள் அடங்கிய ஆவணத்தை ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரியவிடம் மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாட் கையளித்தார்.

அத்துடன், கடந்த முறை இடம்பெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தலின்போது, தேர்தல் முறைமையில் குளறுபடிகள் இருந்ததினால், அந்தத் தேர்தல் முறைமையானது பாரிய தோல்வியை ஏற்படுத்தியது எனவும் ஆணைக் குழுவின் தலைவரிடம் மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாட் சுட்டிக்காட்டினார். இனிவரும் காலங்களிலும் உள்ளூராட்சி சபை உறுப்பினர்களின் எண்ணிக்கையை அரைவாசியாக குறைக்கும் பட்சத்தில், சமூக ரீதியான மற்றும் இன ரீதியான பல்வேறு பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கவேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்படும் எனவும் தெரிவித்த அவர், இதன் காரணமாக பாரிய சவால்ககளை எதிர்கொள்ள வேண்டிய சூழல் ஏற்படும் எனவும் குறிப்பிட்டார்.எனவே, பழைய விகிதாசார முறைப்படி தேர்தலை நடத்த வேண்டும் எனவும், அவ்வாறு நடத்துகின்ற பட்சத்தில் உறுப்பினர்களின் எண்ணிக்கையிலும் எதிர்பார்க்கின்ற அளவிலான குறைப்பை செய்ய முடியும் எனவும் எடுத்துரைத்தார்.

பழைய விகிதாசார தேர்தல் முறைமையை நடைமுறைப் படுத்த வேண்டும் என்பதே தமது கட்சியின் இறுதி நிலைப்பாடு எனவும், அதற்குரிய சிபாரிசை எல்லை நிர்ணய ஆணைக் குழு அரசாங்கத்திடம் முன்வைக்க வேண்டும் எனவும் வேண்டுகோள் விடுத்த மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாட், உள்ளூராட்சி மன்றத் தேர்தலை பிற்போட அனுமதிக்க வேண்டாம் எனவும் எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் தலைவரிடம் கோரிக்கை விடுத்தார்.

இந்தச் சந்திப்பில், எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் உறுப்பினர் ஹமீட் மற்றும் மக்கள் காங்கிரஸின் தேசிய அமைப்பாளர் அப்துல்லாஹ் மஹ்ரூப் ஆகியோரும் உடனிருந்தமை குறிப்பிடத்தக்கது.




### Senior Banking Assistant

A mj 9CEBB
Pt khelb shnm9Onrrdrr xd q nedwoddqhdmbd hmsgd ehdkc ne
a mj hmf, g ud fnncj mnv kdcf d nmsgd oqnct bsr mc rdquhbdr
@ookx9gssor 9 . cebbinaonqs kodnoldr gqbnl
Rdmlmqulhbd oqdr hcdms (Gt l mQdr nt qbdr)
CEBB A mj O B, 62. F kkd Qn c, Bnknl an /2-

### Assistant Manager – Internal Audit

A mj 9B qf lkkr
Dwoddqhdmbd mc Pt khelb shnmr 9 Et kk O qs Pt khelb shnmr hm
A mj hmf nqEhm mbd, Cdf qdd eqnl qdbnf mhydc t mhudqrhsx,
Nudq/ xd q neDwoddqhdmbd hm A mj -
@ookx9b qddq b qf lkkra mj -bnl , Gd c neGt l mQdr nt qbdr,
B qf lkkr A mj hi hsdc, Mn-585, F kkd Qn c, Bnknl an /2-

### Marketing Executives

Bnl o mx9C s L m f dl dmsRxr sdl r (Ous) sc
Qdpt hqdl dmsr 9Rdkdbsdc b mchc sdr qd qdpt hqdc sn dmf f d
hml qj dshmf mc r dkkhmf sgd Bnl o mx'r oqnct bsr nkt shnmr -
Sgnr d v gn odqend sn sgd Bnl o mx'r dwodbs shnmr g ud
cdehmdc b qddqf qnv sg o sg v hsg oqnl nshnm koqnr odbsr sn
RdmlmqL m f dl dms-
Rdkdbsdc ookhb msr v hkk ad qdv qcdc v hsg m ssq bshud
qdl t mdq shnm o bj f d hm bbnqc mbd v hsg pt khelb shnmr
mc dwoddqhdmbd r v dkk r dwbdkkdms b qddq cdudknol dms
noonqst mhshdr hm okd r ms v nqj dmuhqnml dms-
@ookx9 b qddq cl rk mj 1-bnl

### Front Desk Representative

khr shst shnm9Sgd Adshr g RbgnnkhmBnknl an
@ookx9gt l mqdr nt qbdr adqhr grbgnnk-kj , Gd c neGt l m
Qdr nt qbdr, Sgd Adqhr g RbgnnkhmBnknl an, Mn-52, Dkuhsf k
L v sg , Bnknl an /7-

### Administrative Coordinator

Bnl o mx9@qbgmhw
@ookx9b qddq qbgmhw-bnl

@r rhrs ms F dmdq kL m f dq (Ehm mbd), Bghde @bbnt ms ms,
L m f dq (Rdbt qhsx) F q cd HH
khr shst shnm9Rqh mj mc Cdudknol dms Bnqpnq shnm
@ookx9Cdot sx F dmdq kL m f dq, Rqh mj mc Cdudknol dms
Bnqpnq shnm, Mn /2, Rqhl x v qcdm otq L v sg , dkkj c ,
Q i f hqhx -
v v v -k mccdudknol dms-kj

### Management Assistant

khr shst shnm9Ot akhb Tshkhshdr Bnl l hrr hnmneRqh mj
Pt khelb shnm9F BD N. , @ , L hmh t l ne sgqdd xd q ne
onr s-pt khexhmf dwoddqhdmbd hm rh hk qb o blsx-
@f d9Adknv 1
@ookx9Ot akhb Tshkhshdr Bnl l hrr hnmneRqh mj , dudk /5,
A mj neBdxknmL dqbg ms Snv dq 17, Rs-L hbgd kr Qn c,
Bnknl an /2-/00 12815/6

# காணாமலாக்கப்பட்டவர்கள் பற்றிய பதிவு யாழில் ஆரம்பம்





காணாமல்போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தில் காணாமலாக்கப்பட்டோர் தொடர்பான பதிவுகள் நேற்று புதன்கிழமை மேற் கொள்ளப்பட்டன.


யாழ்ப்பாணம் கல்வியங் காட்டில் காணாமல்போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தில் இந்தப் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டன.

காணாமல்போன ஆட்கள் தொடர்பான பதிவுகளை மேற்கொள்வதற்காக அரசாங்கத்தால் அமைக்கப்பட்ட நிறுவனத்தின் ஓ.எம்.பி. அலுவலக அதிகாரிகளினால் மாவட்டங்கள்தோறும் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் அதனொரு கட்டமாக யாழ்ப்பாணத்திலும் மேற்கொள்ளப்பட்டது.

காணாமலாக்கப்பட்டோரின் உறவுகளால் குறித்த பதிவுகளுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் முகமாக எதிர்ப்பு நடவடிக்கையும் முன்னெடுக்கப்பட்டதோடு ஒருசிலர் அதிகாரிகளிடம் காணாமலாக்கப்பட்ட உறவினர் தொடர்பான பதிவுகளை மேற்கொண்டு வருகின்றனர். அவ்வாறு பதிவுகளை மேற்கொண்டவர்களுக்கு ஆயிரம் ரூபா கொடுப்பனவும் வழங்கப்பட்டது.

# இலங்கைக்கு கடத்தப்படவிருந்த 45 இலட்சம் ரூபா மதிப்புள்ள பீடி இலைகள் பறிமுதல்





(மன்னார் நகர் நிருபர்)


தூத்துக்குடியிலிருந்து இலங்கைக்கு கடத்த முயன்ற 45 இலட்சம் ரூபா மதிப்புள்ள பீடி இலைகளை க்யூ பிரிவு பொலிஸார் நேற்று (21) கைப்பற்றியுள்ளனர்.

தூத்துக்குடி, புல்லாவெளி கடற்கரையில் புதன்கிழமை (21) அதிகாலை 4 மணியளவில் க்யூ பிரிவு காவல் ஆய்வாளர் விஜய அனிதா தலைமையில் உதவி ஆய்வாளர்கள் ஜீவமணி, வேல்ராஜ் தலைமை காவலர் ராமர், இருதயராஜ், இசக்கி, காவலர் பழனி பாலமுருகன் ஆகியோர் ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்தபோது கடற்கரையில் நின்றுகொண்டிருந்த மினி லொறியை சோதனையிட்டனர்.

அதில், சுமார் ஒன்றரை தொன் எடையுள்ள பீடி இலைகள் இருந்தன. இதையடுத்து மினி லொறி மற்றும் பீடி இலைகளை பொலிஸார் பறிமுதல் செய்தனர். கைப்பற்றப்பட்ட பீடி இலைகளின் இந்திய ரூபா மதிப்பு சுமார் 7 இலட்சத்து 50 ஆயிரமாகும். இலங்கையில் அதன் மதிப்பு 45 இலட்சமாகும்.

அதன் காரணமாக பீடி இலைகள் தொடர்ச்சியாக இலங்கைக்கு கடத்த முயற்சிக்கப்பட்டு வருகிறது. இந்த பீடி இலைகளை சட்டவிரோதமாக படகு மூலம் இலங்கைக்கு கடத்த முயன்ற மர்ம நபர்களை பொலிஸார் தேடி வருகின்றனர்.

# குருநாகல் மாநகர சபையின் வரவு-செலவுத் திட்டம் தோல்வி



ஆளும் கட்சியான ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன சமர்ப்பித்த குருநாகல் மாநகர சபையின் 2023ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் ஏழு வாக்குகளால் தோற்கடிக்கப் பட்டுள்ளது.

குருநாகல் மாநகர சபையில் நேற்றுமுன்தினம் கூடிய சபை உறுப்பினர்களின் கூட்டத்தின்போது குருநாகல் மேயர் துஷார சஞ்ஜீவ விதாரண உத்தேச வரவு-செலவுத் திட்டத்தை சமர்ப்பித்தார்.குருநாகல் மாநகர சபையின் 2023ஆம் ஆண்டுக்கான உத்தேச வரவு-செலவுத் திட்டம் எதிராக 14 வாக்குகளாலும் ஆதரவாக 07 வாக்குகளாலும் தோற்கடிக்கப்பட்டது.

# அதிகாலையில் கோர விபத்து: பெண்கள் மூவர் பரிதாபப் பலி!



குருநாகல் நாரம்மல - பெதிகமுவ சந்தியில் நேற்று அதிகாலை இடம்பெற்ற விபத்தில் மூன்று பெண்கள் உயிரிழந்துள்ளனர்.

நாரம்மல பகுதியிலிருந்து குருநாகல் நோக்கி பயணித்த வேன் சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து அருகிலிருந்த மதிலில் மோதி விபத்துக்குள்ளானதாக பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் காயமடைந்த இருவர் நாரம்மல வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளனர். அத்துடன், மற்றைய பெண் குருநாகல் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

நாரம்மல - பெதிகமுவ பகுதியைச் சேர்ந்த 56, 59 மற்றும் 61 வயதுடையவர்களே உயிரிழந்துள்ளனர். விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# காணாமலாக்கப்பட்ட உறவுகளுக்கு நஷ்டஈடு குறித்து இனி நீதி அமைச்சர் கதைக்கக் கூடாது!

## மன்னார் மாவட்ட வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவுகளைத் தேடும் குடும்பங்களின் சங்கம் எச்சரிக்கை

(மன்னார் நகர் நிருபர்)

காணாமலாக்கப்பட்ட உறவுகளுக்கு நஷ்டஈடு வழங்குவது குறித்து இனி நீதி அமைச்சர் எங்கும் கதைக்கக்கூடாது. கண்துடைப்புக்காக மன்னாரில் அமைக்கப்பட்டுள்ள ஓ.எம்.பி. அலுவலகத்தை உடனடியாக மன்னாரிலிருந்து அகற்ற வேண்டும் அல்லது காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்களாகிய நாங்கள் ஒன்றிணைந்து அகற்ற வேண்டிய நிலை ஏற்படும் - என மன்னார் மாவட்ட வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவுகளைத் தேடும் குடும்பங்களின் சங்கத் தலைவி மனுவல் உதயச்சந்திரா தெரிவித்துள்ளார்.



மன்னாரில் நேற்று புதன்கிழமை (21) காலை இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

காணாமலாக்கப்பட்ட எமது உறவுகளுக்கு இழப்பீடு வழங்குவதாக இவ்வளவு காலமும் நீதி அமைச்சர் கூறி வருகிறார். எங்களுக்கு இந்த இழப்பீடு வேண்டாம் என்று நாங்கள் கூறி வந்தோம். காணாமலாக்கப்பட்ட எமது உறவுகளும், பிள்ளைகளுமே எமக்கு வேண்டும் என பல வருடங்களாக போராடி வருகின்றோம்.

அரசாங்கத்திடம் பல தடவைகள் கதைத்தும் எவ்வித நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை. இழப்பீட்டை வழங்கி எங்களை திசை திருப்ப பார்க்கின்றார்கள்.

இங்கே ஒன்றும் நடக்கவில்லை என்று காட்டும் வகையிலும் ஐ.நாவிற்கு தமது அறிக்கைகளை வழங்க காணாமலாக்கப்பட்ட எம் உறவுகளுக்கு இழப்பீடு வழங்க முயற்சிக்கின்றனர்.

நாங்கள் இழப்பீட்டுக்காக இவ்வளவு காலமும் போராடவில்லை. எமது உறவுகளுக் காகவும், அத்தனை உயிர்களுக்காகவுமே நாங்கள் போராடி வருகிறோம். எமது பிள்ளைகளுக்கும், உறவுகளுக்கும் என்ன நடந்தது என்று முதலில் கூறுங்கள்.அரசாங்கத்திடம் ஒப்படைத்த பிள்ளை களையும், உறவுகளையுமே நாங்கள் கேட்கி றோம். அவர்களுக்கு என்ன நடந்தது? என்றே கடந்த 15 வருடங்களாக கேட்டுக்கொண்டு இருக்கின்றோம். எமது உறவுகளைத் திருப்பித் தாருங்கள் என்று கேட்கின்றோம். ஆனால், அதை பற்றி கதைக்கிறார்கள் இல்லை.

காணாமலாக்கப்பட்டோர் அலுவலகம் (ஓ.எம்.பி.) பற்றி கதைக்கிறார்கள். நஷ்ட ஈடு பற்றி கதைக்கிறார்கள். மரணச் சான்றிதழ் வழங்குவதாக கூறுகிறார்கள். நாங்கள் எதையும் கேட்கவில்லை.

எமது உறவுகளையும் பிள்ளைகளையுமே கேட்கின்றோம். சுமார் 2200 நாட்களாக மழைக்கும் வெயிலுக்கும் இடையில் நின்று போராடி வருகிறோம்.

காணாமலாக்கப்பட்ட உறவுகளைத் தேடிய 148 பேர் இதுவரை மரணித்துள்ளனர். இவ்வாறான சூழ்நிலையில் ஒவ்வொரு மாவட்டமாக சென்று நஷ்டஈடு தருவதாகக் கூறுகிறார்கள். நாங்கள் இலங்கை அரசாங்கத்தில் நம்பிக்கை இல்லாத காரணத்தினாலேயே சர்வதேச விசாரணையை கோரி நிற்கின்றோம்.எங்களுக்கு நஷ்டஈடு தர நீதி அமைச்சருக்கு என்ன அருகதை உள்ளது? நீதியமைச்சர் மன்னார் பக்கம் வராமல் இருப்பது அவருக்கு நல்லது.

காணாமலாக்கப்பட்ட உறவுகளுக்கு நஷ்ட ஈடு வழங்குவது குறித்து இனி நீதி அமைச்சர் எங்கும் கதைக்கக்கூடாது. கண் துடைப்புக்காக மன்னாரில் அமைக்கப்பட்டுள்ள ஓ.எம்.பி. அலுவலகத்தை உடனடியாக மன்னாரிலிருந்து அகற்ற வேண்டும். அல்லது காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்களாகிய நாங்கள் ஒன்றிணைந்து அகற்ற வேண்டிய நிலை ஏற்படும்.

எங்களால் ஒன்றும் செய்ய முடியாது என்று நினைத்துக்கொண்டு இருக்கின்றீர்கள். சுமார் 2 ஆயிரம் நாட்களாக போராடுகின்ற எமக்கு அதை செய்ய முடியாது என்று நினைக்கிறீர்களா? எனவே, இனிவரும் காலங்களில் நஷ்டஈடு வழங்குவதாகக் கூறுவதை நிறுத்துங்கள் என அவர் எச்சரிக்கை விடுத்தார்

# ஜம்இய்யதுல் உலமா சபையினர் சுற்றாடல் அமைச்சருடன் சந்திப்பு



அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமாவின் நூற்றாண்டு விழா 2023இல் நடைபெறவுள்ள நிலையில், தாஸிம் மௌலவி, கலீல் மௌலவி உள்ளிட்டோர் சுற்றாடல் அமைச்சர் நஸீர் அஹமட்டைச் நேற்றுமுன்தினம் (20) சந்தித்துக் கலந்துரையாடினர்.

இதன்போது, முஸ்லிம் சமூகத்தின் கண்ணியமிக்க அமைப்பான ஜம்இய்யதுல் உலமா எதிர்காலத்தில் ஆற்றவேண்டிய பணிகள் குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது.

அரசியல் ரீதியான தனது தீர்மானங்கள், முஸ்லிம் சமூகத்தில் ஏற்படுத்திய பிரதிபலிப்புகள் குறித்தும் அமைச்சர் எடுத்து விளக்கினார். 13ஆவது திருத்தம் முஸ்லிம் சமூக அரசியலில் ஏற்படுத்தும் தாக்கங்களை எச்சரித்த அவர், இவ்விடயத்தில் முஸ்லிம் எம்பிக்களை ஒரேநிலைப்பாட்டுக்கு கொண்டு வருவதன் அவசியமும் ஜம்இய்யதுல் உலமா முக்கியஸ்தர்களுக்கு விளக்கப்பட்டது.

அரசியலமைப்பின் இருபதாவது திருத்தத்தையும், ஜனாஸா எரிப்பையும் முடிச்சுப்போட்டு முன்வைக்கப்படும் விமர்சனங்களை நிராகரித்த அமைச்சர், ஓட்டமாவடி மஜ்மா நகரில் நல்லடக்கம் செய்வதற்காக தாம் எடுத்துக்கொண்ட முயற்சிகள் மற்றும் அரச உயர்மட்டங்களுடன் நடத்தப்பட்ட பேச்சுகள் குறித்தும் விபரித்தார்.

எதிர்க்கட்சி மனோநிலையில் எந்தநேரமும் செயற்படுவதால், ஏற்படவுள்ள ஆபத்துக்கள் பெரும்பான்மை சமூகத்திடமிருந்து முஸ்லிம்களை தூரப்படுத்தும் ஆபத்திலிருந்து பாதுகாக்க அரசியல் சாராத அமைப்புகள் அக்கறை செலுத்த வேண்டும் என்றும் அமைச்சர் கேட்டுக்கொண்டார்.







கொழும்பிலுள்ள இந்தோனேசிய தூதுவர் டெவி கிஸ்ரினா டொபிங் தலைமையில் 529 குடும்பங்களுக்கு ரூபா 2,924.170 பெறுமதியான உலருணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. ஹம்பாந்தோட்டை, ஹட்டன் மற்றும் மஸ்கெலியா போன்ற பகுதிகளில் வருமானம் குறைந்த மூவினங்களையும் சேர்ந்த குடும்பங்களுக்கும் சர்வமதத் தலைவர்களுக்கும் இப் பொதிகள் வழங்கப்பட்டன. இந்நிகழ்வை இந்தோனேசியா- இலங்கை நட்புறவுச் சங்கத்தின் 30 ஆண்டுகள் நிறைவையொட்டியும், இந்தோனோசியா - இலங்கை இராஜதந்திர உறவு 70 வருடங்களை பூர்த்தியை முன்னிட்டும் இந்தோனோசியத் தூதுவர் இந்நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# அந்நியச் செலாவணியின் பிரதான பங்குதாரர்களான கைத்தொழில் துறையினரை வலுவூட்ட அரசு தயார்

## ஜனாதிபதி ரணில் அறிவிப்பு



சிறிய மற்றும் நடுத்தரக் கைத்தொழில் துறையினர் நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதில் சிறந்து விளங்கக்கூடிய சூழலை உருவாக்குவேன் - என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

நாட்டுக்கு அந்நியச் செலாவணியை ஈட்டித் தருவதில் பிரதான பங்குதாரர்களான தொழில்துறையினரை வலுவூட்டுவதற்கு அரசாங்கம் தயார் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

கொழும்பு கலதாரி ஹோட்டலில் நேற்றுமுன்தினம் (20) பிற்பகல் நடைபெற்ற 'சாதனையாளர் விருது – 2022' இல் உரையாற்றும் போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இலங்கை தேசிய கைத்தொழில் சம்மேளனம் கைத்தொழில் அமைச்சுடன் இணைந்து 21ஆவது தடவையாக இவ்விருது வழங்கும் நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தது.

வீழ்ச்சியடைந்த பொருளாதாரத்தைப் பார்த்து வருந்துவதை விடுத்து, சுபீட்சமான எதிர்காலத்தை ஏற்படுத்தக்கூடிய சூழலை உருவாக்க அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டுமென சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, இரண்டாம் உலகப் போரால் அழிந்த ஜப்பானும் ஜேர்மனியும் கட்டியெழுப்பப்பட்ட விதத்தை நாம் முன்னுதாரணமாகக்கொள்ள வேண்டும் என்றும் தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேலும் கூறியதாவது ,

நமது நாட்டின் வீழ்ச்சியடைந்த பொருளாதாரத்தை மீண்டும் கட்டியெழுப்புவதில் கைத்தொழில்துறையினருக்கு பெரும் பொறுப்பு உள்ளது. நாட்டின் பொருளாதாரத்திற்கு பெரும் பங்களிப்பை வழங்கும் குழுவினராக தொழிலதிபர்கள் உள்ளனர். ஒரு நாடு என்ற வகையில் எம்மால் இந்நிலையிலிருந்து மீள முடியும் என்பதை நான் கூற விரும்புகின்றேன். இந்நேரத்தில், தொழில்துறையினருக்கு வரிச்சலுகைகளை வழங்க முடியாது. ஆனால், நமது நாட்டின் சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழில்களை மேலும் மேம்படுத்த முடியும். அதற்கு நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தலாம். உலகின் பிற நாடுகளிலுள்ள சிறிய, நடுத்தர கைத்தொழில்களின் வளர்ச்சியை அவதானித்து அவர்கள் பயன்படுத்திய நவீன தொழில்நுட்பத்தை நாமும் நமது சிறிய மற்றும் நடுத்தரக் கைத்தொழில்களின் வளர்ச்சிக்காக பயன்படுத்தலாம். அரசாங்கம் என்ற வகையில் அதற்கு அவசியமான அனைத்து ஒத்துழைப்பையும் வழங்க நாம் தயாராகவுள்ளோம்.

நீங்கள் பழைய முறைகளைப் பின்பற்றுகின்றீர்களா அல்லது புதிய வழியில் சிந்தித்து, புதிய திட்டத்தின் மூலம் நாட்டின் பொருளாதாரத்தைப் பலப்படுத்தி, சர்வதேச ரீதியாக நாட்டை முன்னேற்றும் வழியில் செயற்படுகின்றீர்களா என்பதை நீங்களே தீர்மானிக்க வேண்டும். இதற்கான சிறந்த சந்தர்ப்பம் உங்களுக்குக் கிடைத்துள்ளது.

அதேபோன்று, வீழ்ச்சியடைந்த பொருளாதாரத்தைப் பார்த்து வருந்துவதா அல்லது வளமான எதிர்காலத்தை உருவாக்க அனைவரும் ஒன்றிணைந்து செயற்படுவதா என்று சிந்திக்க வேண்டும். இரண்டாம் உலகப் போரால் அழிந்த ஜப்பானும் ஜேர்மனியும் மீண்டும் பொருளாதார ரீதியாக வலிமை பெற்று உலகை எப்படிக் கைப்பற்றின என்று சிந்தித்துப் பாருங்கள். அப்படியானால் இந்த நாட்டின் பொருளாதாரத்தையும் மீளக் கட்டியெழுப்ப முடியும். அதற்கு எமது மனப்பான்மையில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும்.

இன்று நம் நாட்டுக்கு அந்நியச் செலாவணி தேவைப்படுகிறது. அந்நியச் செலாவணியை அதிகரிப்பதன் மூலம் நமது பொருளாதாரம் வலுப்பெறும். அப்போதுதான் கல்வி, சுகாதாரத் துறைகளுக்கு அதிக நிதி ஒதுக்க முடியும். இதன் மூலம் கல்வி மற்றும் சுகாதாரத் துறையில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வுகளை வழங்க முடியும்.

கைத்தொழில் அமைச்சின் செயலாளர் திலகா ஜயசுந்தர, ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் சிரேஷ்ட பேராசிரியர் சுதந்த லியனகே உள்ளிட்ட பலர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

# விமானப் பணிப்பெண்கள் நியமனம் வழங்குவதாக கூறி யுவதிகளை நிர்வாணப்படம் எடுத்தவர் கைது

## கண்டி குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நடவடிக்கை

விமானப் பணிப்பெண்களை நியமிக்கும் நிறுவனம் என்ற போர்வையில் இணையதளத்தில் நேர்காணல் நடத்தி அழகான பெண்களின் நிர்வாண புகைப்படங்களை எடுத்துக்கொண்டு பாலியல் இலஞ்சம் வாங்க முயன்ற ஒருவரைக் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கைதுசெய்துள்ளனர்.

ஹங்குரான்கெத்த பிரதேசத்தில் வசிக்கும் நீர் வழங்கல் சபையின் மின்மானி வாசிப்பவர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

சம்பவத்துக்கு முகங்கொடுத்த மாத்தளை மற்றும் கண்டியில் வசிக்கும் இரண்டு யுவதிகளிடமிருந்து குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் கணினி குற்றப் புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் லக்கி ரந்தெனியவுக்கு கிடைத்த முறைப்பாடுகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின்போதே சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கண்டி கணினி குற்றப் புலனாய்வுப் பிரிவின் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் சதுரி திஸாநாயக்க உள்ளிட்ட குழுவினர் விசாரணைகளை மேற்கொண்டு சந்தேகநபரைக் கைதுசெய்துள்ளதுடன், நான்கு கையடக்கத் தொலைபேசிகள், 13 சிம் அட்டைகள் மற்றும் இந்த மோசடிக்கு பயன்படுத்தப்பட்ட கணினி ஒன்றையும் கைப்பற்றியுள்ளனர்.

# யானைகளின் எண்ணிக்கை தொடர்பில் கணக்கெடுப்பு

## 12 வருடங்களின் பின்னர் நடவடிக்கை

நாட்டில் காட்டு யானைகளின் எண்ணிக்கை தொடர்பான கணக்கெடுப்பொன்று 12 வருடங்களின் பின்னர் முன்னெடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக விவசாய, வனஜீவராசிகள் மற்றும் வனவள பாதுகாப்பு அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

2001ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்பு அறிக்கைக்கமைய நாட்டில் 5,000இற்கும் அதிகமான காட்டு யானைகள் காணப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், தற்போது வனஜீவராசிகள் மற்றும் வனவள பாதுகாப்புத் திணைக்களங்களில் போதுமானளவு அதிகாரிகள் இன்மை காரணமாக இந்தக் கணக்கெடுப்பிற்காக ஆர்வமிக்க சிவில் அமைப்புகள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள், சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் உள்ளிட்ட அனைத்து தரப்பினரினதும் ஒத்துழைப்புகளை பெற்றுக்கொள்ளவுள்ளதாக அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

இலங்கையின் விவசாய நடவடிக்கைகளில் காட்டு யானைகள் பாரிய பாதிப்பை ஏற்படுத்துவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஆகவே, நாட்டின் காட்டு யானைகளின் எண்ணிக்கையை வெளிப்படுத்துவது மாத்திரமின்றி, யானை – மனித மோதலை தவிர்ப்பதற்கான வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தும் போது இந்த ஆய்வின் ஊடாக கிடைக்கப்பெறும் தகவல்களை பயன்படுத்துவதும் இதன் நோக்கமாகும் என அமைச்சர் மஹிந்த அமரவீர மேலும் குறிப்பிட்டுள்ளார்.

### பேர வாவியை அண்மித்து பயணிகள் படகு சேவை

பேர வாவியை அண்மித்து பயணிகள் படகு சேவையை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்காக இந்த நடவடிக்கையை முன்னெடுப்பதற்கு திட்டமிட்டுள்ளதாக அமைச்சர் கூறியுள்ளார்.

# வாகனத் தரிப்பிடங்கள் தொடர்பில் பொலிஸார் விசேட அறிவுறுத்தல்

பண்டிகைக் காலத்தில் கொழும்பு நகரில் நடத்தப்படும் நிகழ்வுகளுக்காக வருகை தரும் மக்கள் தமது வாகனங்களை நிறுத்துவதற்கான இடங்கள் பொலிஸாரினால் அறிவிக்கப்பட்டுள்ளன.

எதிர்வரும் 31ஆம் திகதிவரை தாமரைக் கோபுரம், ஜனாதிபதி செயலகம் மற்றும் காலிமுகத்திடல் ஆகிய பகுதிகளை அண்மித்து நடத்தப்படும் நிகழ்வுகளை முன்னிட்டு இந்த விசேட ஒழுங்கு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அதற்கமைய, தாமரைக் கோபுரத்தை அண்மித்து நடைபெறும் நிகழ்வுகளைப் பார்வையிடுவதற்காக வருகை தரும் பொதுமக்கள் தமது வாகனங்களை, கப்பித்தாவத்தை கோவில் வாகன நிறுத்துமிடம், டி.ஆர்.விஜேவர்தன மாவத்தை, காமினி சுற்றுவட்டம் முதல் ரீகல் வரையான வீதியின் இரு மருங்கிலும் உள்ள வாகன நிறுத்துமிடங்கள் ஆகிய பகுதிகளில் நிறுத்த முடியும் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஜனாதிபதி செயலகம் மற்றும் காலிமுகத்திடல் ஆகிய பகுதிகளை அண்மித்து நடத்தப்படும் நிகழ்வுகளுக்காக வருகை தரும் பொதுமக்கள் தமது வாகனங்களை, பாதுகாப்பமைச்சின் வாகன நிறுத்துமிடம், காலிமுகத்திடல் மத்திய வீதி வாகன நிறுத்துமிடம் மற்றும் புதிய பாலதக்ஷ மாவத்தை வாகன நிறுத்துமிடம் ஆகிய பகுதிகளைப் பயன்படுத்த முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.






சமூக சேவைகள் பிரிவினால் ஏற்பாடு செய்யப்பட்ட வலது குறைந்தோருக்கு உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல்.முகம்மது ஹனிபா தலைமையில் பிரதேச செயலகத்தில் நேற்று (21) இடம்பெற்றதுடன், இந்நிகழ்வில் உதவிப் பிரதேச செயலாளர் யு.எம்.அஸ்லம், நிர்வாக உத்தியோகத்தர் கே.பி.சலீம், கிராம சேவைக்கு பொறுப்பான நிர்வாக உத்தியோகத்தர் எம்.எல்.தாசிம், சமூகசேவை உத்தியோகத்தர் ஏ.ஆர்றோஸ்மி மற்றும் விடயத்துக்குப் பொறுப்பான உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டதை படத்தில் காணலாம்.
(படங்கள் – சம்மாந்துறை நிருபர்)

# கல்முனை பஸ் நிலையத்தில் தரிப்புக் கட்டணம் அறவிடும் நடவடிக்கை ஆரம்பம்

(சாய்ந்தமருது நிருபர்)

கல்முனை பிரதான பஸ் நிலையத்திலிருந்து சேவையில் ஈடுபடும் பயணிகள் போக்குவரத்து பஸ்களுக்கு தரிப்புக் கட்டணம் அறவிடும் திட்டம் நடைமுறைக்கு வந்துள்ளது.

இத்திட்டம் கல்முனை மாநகர முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.றகீப் தலைமையில் நேற்று (21) சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் பிரதி முதல்வர் ரஹ்மத் மன்சூர், மாநகர ஆணையாளர் ஏ.எல்.எம்.அஸ்மி, பிரதி ஆணையாளர் ஏ.எஸ்.எம்.அஸீம், கணக்காளர் கே.எம்.றியாஸ், வருமானப் பிரிவு பொறுப்பு உத்தியோகத்தர் எம்.ஏ.அஹத், தனியார் போக்குவரத்து அதிகார சபையின் கல்முனை நிலைய பொறுப்பாளர் ஏ.எம்.கரீம் உள்ளிட்டோர் பங்கேற்றிருந்தனர்.



கல்முனை மாநகர சபையின் பொதுச் சபை அமர்வில் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கமைவாக இக்கட்டணம் அறவிடும் நடவடிக்கை ஆரம்பித்து வைக்கப்பட்டிருக்கிறது.

இதன் பிரகாரம் கல்முனை பிரதான பஸ் நிலையத்திற்கு வந்து செல்லும் இலங்கை போக்குவரத்து சபையின் கல்முனை பஸ் டிப்போவுக்குரிய பஸ்களைத் தவிர ஏனைய அனைத்து இ.போ.ச. மற்றும் தனியார் பஸ்களுக்கும் இக்கட்டணம் அறவிடப்பட்டவுள்ளது.

குறுந்தூர பயணத்தில் ஈடுபடும் பஸ்களுக்கு ஒவ்வொரு தடவையும் 100 ரூபாவும் நெடுந்தூர பயணத்தில் ஈடுபடும் பஸ்களுக்கு 200 ரூபாவும் அறவிடப்படவுள்ளதாக மாநகர முதல்வர் ஏ.எம்.றகீப் தெரிவித்தார்.

# பெண்களுக்கான உரிமைகளை எதிர்வரும் தேர்தல்களில் உறுதிப்படுத்த வேண்டும்

## பெண்கள் உரிமை செயற்பாட்டாளர்கள் வேண்டுகோள்

(அம்பாறை நிருபர்)

பெண்களுக்கு எதிரான அனைத்து பாரபட்சங்களையும் அகற்றி பெண்களின் சமமான அரசியல் பங்கேற்பு மற்றும் பிரதிநிதித்துவம் உறுதிசெய்யப்பட வேண்டுமென பெண்கள் உரிமை செயற்பாட்டாளர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலுக்கான மக்கள் இயக்கத்தின் (கபே) தேர்ந்தெடுக்கப்பட்ட சில மாவட்டங்களில் முன்னெடுக்கப்படும் ஜனனி டிஜிட்டல் அறிவை மேம்படுத்தும் வேலைத்திட்டத்தில் நேற்று முன்தினம் (20) மாலை மூன்றாம் கட்ட நிகழ்வின் பின்னர் ஏற்பாடுசெய்யப்பட்ட விசேட செய்தியாளர் சந்திப்பில் மேற்கண்டவாறு குறிப்பிட்டனர்.

மேலும் அங்கு கலந்துகொண்டவர்கள் கருத்து தெரிவித்ததாவது,

இலங்கையில் செயல்வலுவிலுள்ள சட்டதிற்கமைய பெண்களுக்கும் ஆண்களுக்குச் சமமான சந்தர்ப்பம் மற்றும் உரிமைகள் காணப்படுவதாக குறிப்பிடப்பட்டுள்ள போதிலும் நடைமுறையில் இல்லை. பெண்கள் இரண்டாம் தரப் பிரஜைகளாக தற்போது வரை ஆக்கப்பட்டுள்ளனர் என்பதே எமது கருத்தாகும். சமூகத்தினுள் ஆணாதிக்க சிந்தனை மற்றும் தீர்மானங்களுக்கிடையில் பெண்களுக்குக் கிடைக்கவேண்டிய உரிய இடம் கிடைப்பதில்லை. ஆதலால் அரசியல் அடிப்படையில் பெண்களை வலுவூட்டல், உள்ளூர் அதிகாரசபைத் தேர்தல்கள் சட்டத் திருத்தம், உள்ளூர் அதிகாரசபைகளில் பெண்களின் பிரதிநிதித்துவம் அது தொடர்பான பிரச்சினைகள் தொடர்பாக அரசியல் கட்சிகளின் முகவர்கள்,பெண் தொழிற்படுனர்கள் உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

தற்போது கூட கபே அமைப்பு உள்ளிட்ட தேர்தல் கண்காணிப்பு அமைப்புகளுடன் தேர்தல் ஆணைக்குழு ஒன்றிணைந்து பெண்களை அறிவுறுத்தும் நிகழ்ச்சித் திட்டங்களை ஒழுங்குசெய்வதோடு மாவட்ட மட்டத்தில் அதாவது அனைத்து மாவட்ட தேர்தல் அலுவலகங்களூடாக தேர்தல்கள் செயன்முறைகள் ஜனநாயகம் சர்வஜன வாக்குரிமை மற்றும் உள்ளூர் அதிகாரசபைத் தேர்தல்கள் சட்டத் திருத்தம் தொடர்பாகவும் பெண்களின் அரசியல் பங்கேற்பு தொடர்பாகவும் பெண்களை அறிவுறுத்தும் செயலமர்வுகள் நாடு தழுவிய அடிப்படையில் நடத்தப்படுகின்றன.




இருந்தபோதிலும் சகல தரப்பினரும் பெண்களின் உரிமைகளை மதித்து செயற்படுத்த முன்வருவதுடன், உள்ளூராட்சி பிரதிநிதித்துவத்துக்காக பெண்களுக்காக 25% ஒதுக்கீடு (Quota) அறிமுகம் செய்தல் பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவம் தொடர்பான பிரச்சினைகள் எதிர்வரும் காலங்களில் தீர்வு காணப்பட வேண்டும் என வேண்டுகோள் விடுத்தனர்.

மேலும் பெண் தலைமைகளுக்கான டிஜிட்டல் அறிவை மேம்படுத்தும் வேலைத்திட்டத்தின் மூன்றாம் கட்ட செயலமர்வில் சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலுக்கான மக்கள் இயக்கத்தின் அம்பாறை மாவட்ட இணைப்பாளர் எஸ்.எல்.அப்துல் அஸீஸ் இணைப்பில் சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலுக்கான மக்கள் இயக்கத்தின் தேசிய நிறைவேற்றுப் பணிப்பாளர் அஹமட் மனாஸ் மக்கீன் வளவாளராக ஜனநாயக மறுசீரமைப்பு மற்றும் தேர்தல் கற்கை நெறிக்கான நிறைவேற்றுப் பணிப்பாளர் மஞ்சுள கஜநாயக்க கலந்துகொண்டிருந்ததுடன், பெண் தலைமைகள் மேடைப் பேச்சுகளையும் ஊடக அறிக்கையிடல்களையும் எவ்வாறு மேற்கொள்தல் என்பது தொடர்பாகவும், தேர்தல் பிரசார நிதி சட்டம், தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்கு சமூக ஊடகங்களை பயன்படுத்தும் விதம் மற்றும் தகவல் அறியும் சட்டம் தொடர்பாக விளக்கமளித்தார்.

# ஹெரோயினுடன் கைதான பெண்ணுக்கு ஒத்திவைக்கப்பட்ட சிறைத்தண்டனை

(அம்பாறை நிருபர்)

அம்பாறை மாவட்டம், கல்முனை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட புறநகர்ப் பகுதியில் ஹெரோயின் போதைப்பொருளுடன் கைதான குடும்பப் பெண் தொடர்பிலான வழக்கு கடந்த வெள்ளிக்கிழமை (16) கல்முனை நீதிமன்ற நீதிவான் எம்.எஸ்.எம்.சம்சுதீன் முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது கைதான சந்தேகநபர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி ஹெரோயின் போதைப்பொருளை தம் வசம் வைத்திருந்தவர் குற்றச்சாட்டை ஏற்றுக்கொள்வதாகவும் அத்துடன் சந்தேகநபர் குடும்பப் பெண் எனவும் அவரது கணவன் நோயுற்ற நிலையில் காணப்படுவதாகவும் பெண்பிள்ளைகள் பராயமடையாமல் உள்ள நிலைமைகளை மன்றிற்கு விண்ணப்பம் செய்திருந்தார்.

இதற்கமைய சந்தேகநபர் சார்பில் ஆஜரான சட்டத்தரணியின் சமர்ப்பணம் விண்ணப்பங்களை ஆராய்ந்து நீதிவான் சந்தேகநபருக்கு 9,999 ரூபா தண்டப்பணம் மற்றும் ஒரு வருடம் ஒத்திவைக்கப்பட்ட சிறைத்தண்டணை விதித்து உத்தரவிட்டார்.

மேலும் குறித்த வழக்கில் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர் படுத்தப்பட்ட குடும்பப்பெண் 350 மில்லிகிராம் ஹெரோயினுடன் கைது செய்யப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# அம்பாறை மாவட்டத்தில் வெள்ள அபாயம்; முகத்துவாரங்களை திறக்க அவசர நடவடிக்கை







(சாய்ந்தமருது நிருபர்)

கடந்த சில தினங்களாக தொடர்ச்சியாக பெய்து வருகின்ற அடைமழை காரணமாக அம்பாறை மாவட்டத்தில் வெள்ள அபாயம் ஏற்பட்டுள்ளது.

கல்முனை, சாய்ந்தமருது, மாளிகைக்காடு, காரைதீவு, நிந்தவூர், மருதமுனை, பெரியநீலாவணை, பாண்டிருப்பு, நற்பிட்டிமுனை, சம்மாந்துறை, அக்கரைப்பற்று, அட்டாளைச்சேனை, ஒலுவில், பாலமுனை போன்ற பிரதேசங்களின் தாழ்நிலப் பகுதிகளில் வெள்ள அபாயநிலை ஏற்பட்டுள்ள துடன், மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப் பட்டுள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை முற்பகல் தொடக்கம் இப்பிரதேசங்களில் பலத்த மழை பெய்து வருகின்றது. இதன் காரணமாக சில இடங்களில் வீடுகளினுள் வெள்ளம் புகுந்துள்ளது. குளங்கள் நிரம்பியுள்ளதால் அவற்றை அண்டியுள்ள சாய்ந்தமருது பொலிவேரியன் கிராமம் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதை அவதானிக்க முடிகிறது. இங்கிருந்து வெள்ள நீரை அகற்றுவதற்காக அப்பகுதியிலுள்ள பெரிய வாய்க்கால்கள் தோண்டப்பட்டு வருகின்றன.

அதேவேளை, கல்முனையையும் கொலனிப் பகுதிகளையும் இணைக்கும் கிட்டங்கிப்பால வீதி மற்றும் கல்முனை- அம்பாறை நெடுஞ்சாலை யிலுள்ள மாவடிப்பள்ளி பாலம் என்பவற்றுக்கு மேலாக வெள்ளநீர் பாய்ந்தோடுவதால் போக்குவரத்துகள் பாதிக்கப்பட்டுள்ளன.

இந்த வெள்ள நிலைமையை கருத்திற் கொண்டு, வெள்ளநீரை கடலுக்கு அனுப்பு வதற்காக தேவையேற்படின் சாய்ந்தமருது பிரதான முகத்துவாரம் உட்பட கல்முனை மாநகர பிரதேசங்களிலுள்ள அனைத்து முகத்துவாரங்களையும் திறப்பதற்கு அவசர நடவடிக்கை எடுக்குமாறு மாநகர மேயர், சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல் வழங்கியுள்ளார்.

அத்துடன், ஏலவே துப்புரவு செய்யப்பட்டு, மீண்டும் குப்பைகளினாலும் மண் திட்டு களினாலும் அடைப்பட்டுள்ள வடிகான்கள் துரிதமாக சீர்செய்யப்பட்டு வருவதுடன், குறுக்கு வீதிகளிலும் சிறிய ஒழுங்கைகளிலும் அமைந்துள்ள வீடு, வளவுகளில் இருந்து வெளியேற முடியாதிருக்கின்ற வெள்ளநீரை வெளியேற்றுவதற்கான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

# சீரற்ற காலநிலையால் அக்கரைப்பற்று பாடசாலையில் வேருடன் வீழ்ந்தது மரம்



(அட்டாளைச்சேனை நிருபர்)

அக்கரைப்பற்று பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் (20) பிற்பகல்வேளை வீசிய பலத்த காற்று காரணமாக அக்கரைப்பற்று தேசிய பாடசாலையின் பிரதான நுழைவாயிலுக்கு அருகாமையில் இருந்த பாரிய மரமொன்று வேருடன் சாய்ந்துள்ளது.

சுமார் 15 வருடங்களுக்கு மேலாக பயன்பட்டுக் கொண்டிருந்த இப்பாரிய மரம் வீழ்ந்ததைத் தொடர்ந்து, பாடசாலையின் மின்விநியோகம் தடைப்பட்டு, சுவர்ப் பகுதியும் சேதமடைந்ததுடன், பாடசாலை போக்குவரத்திற்கும் தடை ஏற்பட்டதாக அதிபர் ஏ.பி.முஜீன் தெரிவித்தார்.

வேருடன் சாய்ந்த பாரிய மரத்தை அப்புறப்படுத்தும் முயற்சியில் பாடசாலை ஆளணியினருடன் அக்கரைப்பற்று மாநகர சபை ஊழியர்கள், பெற்றோர்கள் மற்றும் பழைய மாணவர்களும் ஈடுபட்டதாகவும், இம் மரத்தை அப்புறப்படுத்த வாகன வசதி உள்ளிட்ட பல்வேறு உதவிகளையும் புரிந்த மாநகர மேயர் அதாஉல்லா அஹமட் சக்கிக்கு தனது நன்றியறிதலை தெரிவிப்பதாகவும் அதிபர் ஏ.பி. முஜீன் மேலும் தெரிவித்தார்.

கிழக்கு
செய்திகள்
eastthamilan@gmail.com

# வாழைச்சேனையில் பாதுகாப்பற்ற குழியில் விழுந்து நபரொருவர் பலி!

(மீராவோடை நிருபர்)

நீர்க் குழி ஒன்றில் விழுந்து நபரொருவர் மரணமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கும்புறுமூலை பகுதியில் வைத்தே இச்சம்பவம் நேற்றுக் காலை (21) இடம்பெற்றுள்ளது.

தோட்டம் ஒன்றில் வெட்டப்பட்டிருந்த நீர்க் குழி ஒன்றில் தவறி விழுந்து அந்த நபர் மரணமடைந்துள்ளதாக விசாரணைகளின்போது தெரியவந்துள்ளது. இவ்வாறு மரணமடைந்த நபர் கும்புறுமூலை பகுதியைச் சேர்ந்த 38 வயதுடைய உதிஸ்கரன் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

மரணமடைந்த நபரின் உடல் பிரேத பரிசோதனைக்காக வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட் டுள்ளதுடன், மேலதிக விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# திகிலிவட்டை - புன்னக்குடா பகுதிகளில் குடும்பஸ்தர்கள் இருவர் தூக்கிட்டு மரணம்

(மண்டூர் நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் அண்மைக் காலமாக தற்கொலை செய்துகொள்ளும் சம்பவங்கள் அதிகரித்தது வருவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். இந்நிலையில், ஏறாவூர் மற்றும் சந்திவெளி பொலிஸ் பிரிவுகளில் இருவர் தூக்கிட்டுத் தற்கொலை செய்துகொண்ட சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்திவெளி திகிலிவட்டை பிரதேசத்தைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தந்தையான பிரபாகரன் தனுகரன் (வயது 29) மற்றும் தம்பிலெப்பை ரம்லான் (வயது 54) என்பவர்களே இவ்வாறு தற்கொலை செய்துகொண்டுள்ளனர்.

ஏறாவூர் மற்றும் சந்திவெளி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகளின் வேண்டுதலுக்கமைவாக சம்பவ இடத்திற்குச் சென்ற ஏறாவூர் பிரதேச திடீர் மரணவிசாரணை அதிகாரி எம்.எஸ்.எம்.நசீர் சடலங்களைப் பார்வையிட்டதுடன், சடலத்தை பிரேத பரிசோதனைக்கு உட்படுத்திய பின்னர் நெருங்கிய உறவினர்களிடம் ஒப்படைக்கும்படி பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

தடயவியல் பொலிஸார் மற்றும் ஏறாவூர், சந்திவெளி பொலிஸாரும் இணைந்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# போடியார் புலம்பல்!



**தேர்தல்தானாம் தீர்வு எண்டு பேராசிரியர் பீரிஸ் ஐயா சொல்லுறாரு எலுவா?**

**அவரு மகிந்தட தோலுக்க கட்டிப்புடிச்சித்து இருக்கக்குள தேர்தல பற்றி வாயே துறக்கல்ல, மாகாணசப தேர்தல் வருடக்கணக்கா கிடப்புள கிடக்கு அப்ப எல்லாம் பேசாம இருந்த பேராசிரியர் இப்பதான் தேர்தல்தான் தீர்வு எண்டு கனவுகாணுறாருடாப்பா..!**

# சாய்ந்தமருது கலாசார மத்திய நிலைய முகாமைத்துவ செயலாளராக அஸ்வான் தெரிவு

(சாய்ந்தமருது நிருபர்)



சாய்ந்தமருது கலாசார மத்திய நிலைய முகாமைத்துவ சபையின் செயலாளராக கலைஞர் அஸ்வான் ஷக்காப் மௌலானா தெரிவுசெய்யப் பட்டுள்ளார்.

சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம்.ஆஷிக் முன்னிலையில் கலாசார உத்தியோகத்தரும் மேற்படி மத்திய நிலையத்தின் பொறுப்பதிகாரியுமான யூ.கே.எம்.றிம்ஸான் தலைமையில் இடம்பெற்ற இம்முகாமைத்துவ சபையின் அங்குரார்ப்பண நிகழ்வின்போதே அவர் இப்பதவிக்கு ஏகமனதாக தெரிவுசெய்யப்பட்டிருக்கிறார்.

மருதம் கலைக்கூடல் மன்றத்தின் ஸ்தாபகத் தலைவராகவும் சாய்ந்தமருது பிரதேச செயலக கலாசார அதிகாரசபையின் பொருளாளராகவும் பணியாற்றி வருகின்ற அஸ்வான் மௌலானா, நாடகக் கலை பட்டறைக்கான வளவாள ராகவும் அண்மையில் தெரிவு செய்யப்பட்டிருந்தார்.

நாடக எழுத்தாக்கம், தயாரிப்பு மற்றும் மேடை நாடகம் என்பவற்றில் விற்பன்னராகத் திகழும் இவர், பல்வேறு விருதுகளைப் பெற்றிருப்பதுடன் தொலைக்காட்சி நாடகங்களிலும் நடித்திருக்கிறார்.

கலை, கலாசார மற்றும் சிவில் சமூக செயற்பாடுகளில் முன்னின்று பங்காற்றி வருகின்ற இவர், முஸ்லிம் சமய, கலாசார அமைச்சின் இணைப்புச் செயலாளராகவும் கடமையாற்றியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# தென்கிழக்குப் பல்கலையில் முஸ்லிம் பெண் எழுத்தாளர்களின் இரண்டாவது தேசிய மாநாடு

(பொலிவேரியன் நிருபர்)

"ஆற்றலுள்ள பெண்கள் அமைப்பு" நடத்தும் முஸ்லிம் பெண் எழுத்தாளர்களின் இரண்டாவது தேசிய மாநாடு எதிர்வரும் சனிக்கிழமை (24) காலை 8.30 மணிக்கு இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் இஸ்லாமிய அரபு மொழி கேட்போர் கூடத்தில் இடம்பெறும்.

"ஆற்றலுள்ள சிறந்த குடும்பப் பெண்களே சமூகத்தின் வரம்" எனும் தொனிப்பொருளில், ஸ்ரீலங்கா பென் கிளப்பின் தலைவி மஷூறா சுஹூறுத்தீன் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வுக்கு முன்னாள் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் மேலதிக செயலாளரும், இலங்கைக்கான தூதுவருமான ஏ.எல்.ஏ.அஸீஸ் பிரதம அதிதியாகவும், இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் தமிழ் மொழித் துறை தவசிப் பேராசிரியர் ரமீஸ் அப்துல்லாஹ் முதன்மை அதியாகவும் கலந்துகொள்வர்.

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட நூலகர் கலாநிதி மஷ்ருபா முஹம்மட், கல்முனை வலயக்கல்வி அலுவலகத்தின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஜிஹானா ஆலிம், மருதமுனை பரக்கத் டெக்ஸ்டைல்ஸ் பணிப்பாளர் எம்.ஐ.ஏ.பரீத், அம்பாறை மாவட்ட கலாசார ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர் ஏ.எல்.தௌபீக், பிறை எவ்.எம்.பிரதிப் பணிப்பாளர் பஷீர் அப்துல் கரீம் ஆகியோர் கௌரவ அதிதிகளாகக் கலந்துகொள்வதோடு, சிரேஷ்ட ஊடகவியலாளர் பி.எம்.ஏ.காதர், சம்மாந்துறை ஈஸ்டன் ஜூவலரி பணிப்பாளர் இஸட் எம்.பஷீர், ஊடகவியலாளர் எம்.எஸ்.எம்.ஸாகிர், கல்முனை பிரதேச செயலகத்தின் கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.எச்.பௌசுல் ஹிபானா, சூர்யா பெண்கள் அபிவிருத்தி நிலையத்தின் இணைப்பாளர் எழுத்தாளர் விஜயலட்சுமி சேகர் ஆகியோர் விசேட அதிதிகளாகவும் கலந்துகொள்வர்.

நிகழ்வில், ஏறாவூரைச் சேர்ந்த என்.எம்.ஆரிபா வரவேற்புரையும் சாய்ந்தமருது அல்-ஹிலால் பாடசாலையின் பிரதி அதிபர் றிப்கா அன்சார் நன்றியுரையும் நிகழ்த்துவர்.

'ஈழத்து முஸ்லிம் பெண்களின் கவிதைகள்' எனும் தலைப்பில் கலாநிதி ஹனீபா இஸ்மாயீல், பெண் எழுத்தாளர்களின் படைப்புகள் அவர்கள் சார்ந்த பிரச்சினைகளைப் பேசுகின்றனவா? எனும் தலைப்பில் கலாநிதி சத்தார் எம்.பிர்தௌஸ், முஸ்லிம் பெண்களின் காதல் கவிதைகள் எனும் தலைப்பில் பேராசிரியர் எஸ்.எம்.ஐயூப் ஆகியோர் நிகழ்வில் பிரதான உரை நிகழ்த்தவுள்ளனர்.

இதன்போது 'அவரி 4' சஞ்சிகையின் ஆண்டு மலரும் வெளியிடப்படவுள்ளது.

'அவரி 4' சஞ்சிகையின் அவதான குறிப்புகள் பற்றி ஆய்வாளர் சிராஜ் மசூர், 'அவரி 3' சஞ்சிகையின் இரசனைக் குறிப்புகள் பற்றி கவிஞர் அஸீஸ் எம்.பாயிஸும் கருத்துரை வழங்குவர்.

அத்துடன்ற அமைப்பின் தலைவி மஷூறா சுஹூறுத்தீன் தலைமையில் ஒன்பது பேர் பங்குபற்றும் நவரசக் கவியரங்கும் இடம்பெறுவதோடு, திருகோணமலை சாஹிராக் கல்லூரியின் பிரதி அதிபர் மர்ளியா சக்காப் தலைமையில் "அதிசுவையாக சமைப்பவர்கள் ஆண்களா பெண்களா?" எனும் தலைப்பில் சிறப்புப் பட்டிமன்றமும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

# வாகரை ரிதிதென்ன கிராமத்தில் 32 வருடங்களின் பின்னர் திறந்துவைக்கப்பட்ட முதலாவது நூலகம்





(கல்குடா நிருபர்)

வாகரை பிரதேச சபை எல்லைக்குட்பட்ட ரிதிதென்ன கிராமத்தில் 32 வருட வரலாற்றில் முதன்முதலாவதாக பொது வாசிகசாலை பிரதேச சபையால் திறந்துவைக்கப்பட்டது.

பிரதேச மக்களின் நன்மைகருதி பொதுமக்களும் மாணவர்களும் பயன்பெறும் வகையிலும் பிரதேச மாணவர்களினதும் பொதுமக்களினதும் வாசிப்புப் பழக்கத்தை ஊக்குவிக்கும் நோக்கிலும் வாகரை பிரதேச சபை உறுப்பினர் எஸ்.எம்.தாஹிர் எடுத்துக்கொண்ட அயராத முயற்சியினால் வாசிகசாலை திறந்துவைக்கப்பட்டுள்ளது.

பிரதேச சபை உறுப்பினர் எஸ்.எம்.தாஹிர் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பிரதம அதிதியாக வாகரை பிரதேச சபையின் தவிசாளர் கண்ணப்பன் கணேசன் கலந்துகொண்டு பொது வாசிகசாலையை உத்தியோகபூர்வமாக திறந்துவைத்தார்.

இந்நிகழ்வில் அதிதிகளாக ரிதிதென்ன இக்ர/வித்தியாலய அதிபர் எம்.எஸ்.எம்.றிஸ்மின் மற்றும் பிரதேச பள்ளிவாசல்களின் நிர்வாக சபையினர்கள், உலமாக்கள், பெற்றோர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

இக்கிராமம் உருவாக்கப்பட்டு 32 வருடங்களாக இக்கிராமத்தின் முக்கிய தேவைகளில் ஒன்றாகக் காணப்பட்ட வாசிகசாலை தேவையை பிரதேச சபை உறுப்பினர் எஸ்.எம்.தாஹிர் தொடர்ச்சியாக பிரதேச சபை அமர்வுகளில் விடுத்த கோரிக்கைகளின் பயனாக திறந்து வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மெஸ்ஸியை பார்சிலோனா திரும்ப வரவேற்குமா?



பரிஸ் செயின்ட் ஜெர்மைனின் பயிற்சி மைதானமான கேம்ப் டெஸ் லோஜஸில் லியோனல் மெஸ்ஸியும் கைலியன் எம்பாப்பேவும் சந்திக்கும்போது எப்படி நடந்துகொள்வார்கள்? எம்பாப்பே, நெய்மருடன் மெஸ்ஸி வரிசையில் நிற்பார். சமன்பாடுகள் மாறிவிட்ட நிலையில் இப்போது மூன்று சூப்பர் ஸ்டார்களும் எப்படி இணைந்து செயல்படுவார்கள் என்பது உன்னிப்பாகக் கவனிக்கப்படும்.

மேலும், மெஸ்ஸியின் எதிர்காலம் ஆர்வமாக உள்ளது. கட்டார் நிதியுதவி கிளப்புடனான அவரது ஒப்பந்தம் சீசன் முடிவில் காலாவதியாகிறது. PSG மெஸ்ஸிக்கு இரண்டு வருட ஒப்பந்தத்தை வழங்கவுள்ளதென Goal.com தெரிவித்துள்ளது. 2021இல் மெஸ்ஸி PSGஇல் இணைந்தபோது, இரண்டு வருட ஒப்பந்தத்தில் கூடுதல் ஆண்டுக்கான விருப்பம் இருந்தது. ஆனால், மெஸ்ஸி உலகக்கிண்ணத்தை வென்றதைத் தொடர்ந்து, அவரை தக்கவைக்க PSG ஓல் அவுட் செய்ய வாய்ப்புள்ளது.

மெஸ்ஸி ஸ்பெயினுக்குச் சென்ற பிறகு 13 வயதில் அவர் சேர்ந்த பார்சிலோனா கிளப்புக்குத் திரும்பலாம் என்ற ஊகமும் உள்ளது. எம்எஸ்எல் அணியான இன்டர் மியாமிக்கு மாறுவது குறித்தும் பேசப்படுகிறது. டேவிட் பெக்காமின் இணை உரிமையாளரான மியாமி அணி மெஸ்ஸியுடன் ஒப்பந்தம் செய்ய நெருக்கமாக இருப்பதாக பல தகவல்கள் தெரிவிக்கின்றன.

இருப்பினும், PSG தலைவர் நாசர் அல்-கெலைஃபி ஆர்ஜென்ரீனா நட்சத்திரம் தங்கள் கிளப் நிறங்களில் தொடர்ந்து விளையாடுவார் என்று நம்புகிறார்.

# ஷேன் வோனின் எதிர்வுகூறல் நிஜமாகியது

பாகிஸ்தானுக்கு எதிராக அதன் சொந்த மண்ணில் 17 வருடங்கள் கழித்து 3 போட்டிகள்கொண்ட டெஸ்ட் கிரிக்கெட் தொடரில் விளையாடிவரும் இங்கிலாந்து 3–0 என்ற கணக்கில் தொடரை வென்றது.

இப்போட்டியில் பாகிஸ்தான் வம்சாவளியைச் சேர்ந்த இளம் சுழல் பந்து வீச்சாளர் ரெஹன் அகமத் 18 வருடம் 126 நாட்களில் இங்கிலாந்து அணிக்காக அறிமுகமானார். அதன் வாயிலாக டெஸ்ட் கிரிக்கெட்டில் மிகவும் இளம் வயதில் விளையாடும் இங்கிலாந்து வீரர் என்ற பிரைன் க்ளோஸின் 73 வருட சாதனையை தகர்த்த அவர் புதிய சாதனை படைத்தார்.

லீசெஸ்டர்ஷைர் அணிக்காக கவுண்டி தொடரில் வெறும் 3 முதல் தரம், 7 லிஸ்ட் ஏ போட்டிகளில் மட்டுமே விளையாடியுள்ள அவர் வெறும் 14 விக்கெட்டுகளையும் 195 ஓட்டங்களை மட்டுமே எடுத்துள்ளார். அந்தவகையில் குறைவான போட்டியில் மட்டுமே விளையாடி ஆரம்பகட்டத்திலேயே இருக்கும் அவர், இவ்வளவு சீக்கிரமாக டெஸ்ட் கிரிக்கெட்டில் அறிமுகமானது ஆச்சரியமாக பார்க்கப்படுகிறது.

ஆனால், அந்தத் திறமையை சமீபத்தில் மறைந்த அவுஸ்திரேலியாவின் நட்சத்திர



முன்னாள் வீரர் மற்றும் வரலாறு கண்ட மிகச்சிறந்த சுழல் பந்து வீச்சாளரான ஷேன் வோர்னே 5 வருடங்களுக்கு முன்பே கணித்துள்ளார். ஆம் ஒருமுறை இங்கிலாந்துக்கு பயணித்த ஷேன் வார்னே 13 வயதில் இருந்த ரெஹன் அஹமத் வலைப்பயிற்சியில் பந்து வீசுவதை நேரடியாக பார்த்துள்ளார். அவரது நுணுக்கங்களை உன்னிப்பாக கவனித்து புரிந்துகொண்ட அவர், "நீ 15 வயதில் முதல் தர கிரிக்கெட்டில் விளையாடுவாய்" என்று அப்போதே நேரடியாக பாராட்டினார்.

அவரது வாக்கு போலவே 16 வயதில் லீசெஸ்டர்ஷைர் அணிக்காக கவுண்டி சம்பியன்ஷிப் தொடரில் அறிமுகமான ரெஹன் அஹமத் பாகிஸ்தானுக்கு எதிரான தன்னுடைய அறிமுகப் போட்டியில் முதல் இன்னிங்ஸில் 2 விக்கெட்டுகள் எடுத்த நிலையில் 2ஆவது இன்னிங்ஸில் 5 விக்கெட்டுகளை சாய்த்துள்ளார். அதன் வாயிலாக டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் மிகவும் இளம் வயதில் ஒரு இன்னிங்ஸில் 5 விக்கெட்டுகளை எடுத்த வீரர் என்ற அவுஸ்திரேலியாவின் பட் கமின்ஸ் (18 வருடம் 190 நாட்கள்) சாதனையை தகர்த்த அவர் (18 வருடம் 128 நாட்கள்) புதிய உலக சாதனையும் படைத்துள்ளார்.

விளையாட்டு செய்திகள்

thamilansports@gmail.com

# 2022ஆம் ஆண்டின் பிபிசி விளையாட்டு ஆளுமை

2022ஆம் ஆண்டுக்கான பிபிசி விளையாட்டு ஆளுமை விருதுக்கு ஆறு போட்டியாளர்களின் பட்டியல் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜிம்னாஸ்டிக் வீராங்கனை ஜெசிகா காதிரோவா, கால்பந்து வீரர் பெத் மீட், கர்லிங்கின் ஈவ் முயர்ஹெட், கிரிக்கெட் வீரர் பென் ஸ்டோக்ஸ், ஸ்னூக்கர் வீரர் ரோனி ஓசுல்லிவன் மற்றும் தடகள வீரர் ஜேக் வைட்மேன் ஆகியோர் பரிந்துரைக்கப்பட்டுள்ளனர்.

டிசம்பர் 21 புதன்கிழமை அன்று பிபிசி ஒன்னில் நடைபெறும் நிகழ்ச்சியின்போது வாக்களிப்பு திறக்கப்படும்.

நிகழ்ச்சியின்போது அறிவிக்கப்பட்ட முழு விவரங்களுடன், முக்கிய



விருதுக்கு பொதுமக்கள் இரவில் தொலைபேசி அல்லது ஒன்லைனில் வாக்களிக்கலாம்.


இந்த ஆண்டின் இளம் விளையாட்டு ஆளுமை, அணி மற்றும் ஆண்டின் சிறந்த பயிற்சியாளர், அன்சங் ஹீரோ மற்றும் ஹெலன் ரோலாசன் விருது ஆகியவை அறிவிக்கப்படும் மற்ற விருதுகளில் அடங்கும்.

எட்டு முறை ஸ்பிரிண்டிங் தங்கப் பதக்கம் வென்ற உசைன் போல்ட்டுக்கு வாழ்நாள் சாதனையாளர் விருதும், உலகக் கிண்ணத்தை வென்ற லியோனல் மெஸ்ஸிக்கு ஆண்டின் உலக விளையாட்டு நட்சத்திரம் விருதும் வழங்கப்படும்.

# பார்பராவுக்கு போட்டித் தடை

சிலி நாட்டைச் சேர்ந்த பிரபல டென்னிஸ் வீராங்கனைக்கு சர்வதேச போட்டிகளில் விளையாடுவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் அவரது ரசிகர்கள் கவலையை வெளியிட்டு வருகின்றனர்.

2016ஆம் ஆண்டு இடம்பெற்ற போட்டியொன்றில் தோல்வியடைவதற்காக இவர் இலஞ்சம் பெற்றுக்கொண்டதாக உறுதிசெய்யப்பட்டுள்ளது.



இதனையடுத்து அவரை மூன்று வருடங்கள் போட்டிகளிலிருந்து இடைநிறுத்துவதாக சர்வதேச டென்னிஸ் சம்மேளனம் அறிவித்துள்ளது. அந்த வகையில் எதிர்வரும் 2025ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 28ஆம் திகதிவரை போட்டித் தடை அமுலில் இருக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மீண்டும் விஸ்வரூபமெடுக்கும் கொரோனா:

# சீனாவில் இடைவிடாது எரியும் மயானங்கள்; பிணவறைகளில் குவிந்து கிடக்கும் சடலங்கள்!

**அமெரிக்கா - தென்கொரியா - பிரேஸில் - ஜப்பான் உள்ளிட்ட உலக நாடுகளில் அடுத்த அலை; மரபணு பரிசோதனைக்கு இந்திய மத்திய அரசு உத்தரவு**



சீனாவில் கொரோனா பாதிப்பு அதிகரித்து வருவதால் மருத்துவமனைகள், தகனக்கூடங்கள் நிரம்பி வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

அமெரிக்கா, தென்கொரியா, பிரேஸில், ஜப்பான் உள்ளிட்ட நாடுகளிலும் மீண்டும் கொரோனா தொற்று அதிவேகமாக பரவிவருகிறது.

இந்நிலையில் இந்திய மத்திய அரசு, அனைத்து மாநில அரசுகள் மற்றும் யூனியன் பிரதேசங்கள் முன்னெச்சரிக்கையுடன் செயற்பட வேண்டும். கொரோனா பரிசோதனைகளைத் தீவிரப்படுத்த வேண்டும். கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டவர்களுக்கு உரிய சிகிச்சை அளிக்க வேண்டும். அனைத்து கொரோனா நோயாளிகளின் மாதிரிகளையும் மரபணுப் பரிசோதனைக்கு உட்படுத்த வேண்டும் என பல்வேறு உத்தரவுகளைப் பிறப்பித்துள்ளது.

சீனாவின் வூஹான் நகரில் கடந்த 2019ஆம் ஆண்டு இறுதிப்பகுதியில் கொவிட் - 19 வைரஸ் கண்டறியப்பட்டது. அங்கிருந்து 2020ஆம் ஆண்டு தொடக்கத்தில் உலகம் முழுவதும் வைரஸ் பரவியது. அடுத்தடுத்து கொரோனா அலைகள் உருவாகி, உலக நாடுகளை அச்சுறுத்தின.

இந்நிலையில், கடந்த ஓராண்டாக பல்வேறு நாடுகள் கொரோனா வைரஸ் பரவல் குறைந்து, படிப்படியாக இயல்புநிலைக்குத் திரும்பி வருகின்றன.

கடந்த சில வாரங்களாக சீனாவில் கொரோனா வைரஸ் அதிவேகமாகப் பரவி வருகிறது. அந்த நாட்டில் ஒமிக்ரோன் பிஎவ்7 என்ற வகை வைரஸ் கட்டுக்கடங்காமல் பரவுகிறது.





**சர்வதேச மருத்துவ நிபுணர்கள் எச்சரிக்கை**

பீஜிங்கிலுள்ள மயானமொன்றில் தினமும் 200 சடலங்கள் தகனம் செய்யப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது. கூட்டத்தைக் கட்டுப்படுத்த மயானங்களில் பொலிஸார் பணியமர்த்தப்பட்டுள்ளனர். தற்போது பரவி வரும் கொரோனா தொற்றால் சீனாவில் 10 இலட்சம் பேர் உயிரிழக்கக்கூடும் என்று சர்வதேச மருத்துவ நிபுணர்கள் எச்சரித்துள்ளனர்.

**எலுமிச்சையின் தேவை அதிகரிப்பு**

சீனாவில் கொரோனா தொற்று பாதிப்பு அதிகரித்து வருவதையடுத்து, மக்கள் இயற்கை மருந்துகளை நாடுவதால் எலுமிச்சை பழத்திற்கான தேவை அதிகரித்துள்ளது.

எலுமிச்சை பழத்தில் விற்றமின் சி அதிகமாக உள்ளதால், எடை குறைப்புமுதல் நோய் எதிர்ப்புச் சக்தியை மேம்படுத்துவதுவரை பல நன்மைகள் இருப்பதால் மக்கள் அதிகளவில் எலுமிச்சை பழத்தை வாங்கி வருகின்றனர்.

**60 சதவீதம் பேர் பாதிக்கப்படும் அபாயம்**

சீனாவில் கொரோனா கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டதிலிருந்து பாதிப்புகள் அதிகரித்துள்ள நிலையில், அடுத்த 90 நாட்களில் 60 சதவீத சீன மக்கள், அதாவது உலகளவில் 10 சதவீத மக்கள் பாதிக்கப்படுவார்கள் என்றும் இலட்சக்கணக்கில் உயிரிழப்புகள் ஏற்படக்கூடும் என்றும் தொற்றுநோயியல் நிபுணரான எரிக் ஃபீகல்-டிங் தெரிவித்துள்ளார்.

சீனாவில் மருத்துவமனைகள் நிரம்பி வழிவதாகவும் பீஜிங்கிலுள்ள மயானங்களில் இடைவிடாது சடலங்கள் எரிக்கப்படுவதோடு சுமார் 2 ஆயிரம் சடலங்கள் பிணவறைகளில் குவிந்து கிடப்பதாகவும் வீடியோக்களுடன் அவர் ட்விட்டர் பக்கத்தில் பதிவிட்டுள்ளார். சீனாவில் நிலைமை மிக மோசமாகியுள்ளதாக தெரிவித்துள்ள எரிக், 2020ஆம் ஆண்டு இருந்த அதே நிலைமைக்கு சீனா மீண்டும் திரும்பியுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

**தென்கொரியாவில் ஒரே நாளில் 87,559 பேருக்கு தொற்று**

சீனாவைப்போல் தென்கொரியாவும் கொரோனா தொற்றின் புதிய, புதிய அலைகளால் கடுமையான பாதிப்பை எதிர்கொண்டு வருகிறது. அந்த வகையில் தென்கொரியாவில் கடந்த சில வாரங்களாக கொரோனா தொற்று பாதிப்பு தொடர்ந்து உயர்ந்து வருகிறது. உயிரிழப்பும் அதிகரித்துக்கொண்டே உள்ளது. அதன் தொடர்ச்சியாக அங்கு நேற்றுமுன்தினம் ஒரே நாளில் 87,559 பேருக்கு கொரோனா தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளதுடன், 56 பேர் உயிரிழந்துள்ளனர்.

# பதவியை இராஜினாமா செய்கிறேன்.. ஒரு முட்டாளை தேடிப்பிடித்துவிட்டு...

## ட்விட்டர் சிஇஓ எலான் மஸ்க் அறிவிப்பு

ட்விட்டர் தலைமை நிர்வாக அதிகாரி பொறுப்பிலிருந்து விலகவிருப்பதாக எலான் மஸ்க் அறிவித்துள்ளார்.

ட்விட்டரில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், "ட்விட்டர் சிஇஓ பதவியை நான் விரைவில் இராஜினாமா செய்கிறேன். அந்தப் பதவிக்கு ஒரு முட்டாளை தேடிப்பிடித்துவிட்டு இராஜினாமா செய்வேன். அதன்பிறகு மென்பொருள்



மற்றும் சர்வர்ஸ் குழுக்களை இயக்க இருக்கின்றேன் எனத் தெரிவித்துள்ளார்.

ட்விட்டர் தலைமை நிர்வாக அதிகாரி பொறுப்பிலிருந்து தான் விலக வேண்டுமா என எலான் மஸ்க் நடத்திய வாக்கெடுப்பில் 57.5 சதவீதம் பேர் பதவி விலகவேண்டும் என்றும், 42.5 சதவீதம் பேர் பதவி விலக வேண்டாம் என்றும் வாக்களித்ததை தொடர்ந்து அவர் இதனை அறிவித்துள்ளார்.

# மூழ்கிய தாய்லாந்து போர்க் கப்பல்: மாலுமிகள் அறுவரின் சடலங்கள் மீட்பு

தாய்லாந்தின் தென்கிழக்குக் கடற்கரையில் மூழ்கிய போர்க் கப்பலிலிருந்து 6 மாலுமிகளின் சடலங்களை மீட்புக் குழுவினர் மீட்டனர்.

அந்தக் கடல் பகுதியில் (HTMS Sukhothai) ஹெச்.டி.எம்.எஸ். சுகோதாய் போர்க் கப்பல் திடீரென கடலில் ஏற்பட்ட பேரலையால் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு கவிழ்ந்தது.

ஏற்கனவே விபத்துப் பகுதியிலிருந்து 76 மாலுமிகள் உயிருடன் மீட்கப்பட்டனர். இதுவரை 6 பேர் சடலமாக மீட்கப்பட்டுள்ள நிலையில், காணாமல்போன 23 பேரை தேடும் பணிகள் மீட்புப் படையினரால் முழுவீச்சில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

உலக செய்திகள்



**அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணத்தில் ஏற்பட்ட 6.4 ரிச்டர் சக்திவாய்ந்த நிலநடுக்கத்தில் சிக்கி 2 பேர் உயிரிழந்துள்ளதுடன், 12 பேர் படுகாயமடைந்துள்ளனர். யுரேகா என்ற இடத்திற்கு அருகே ஏற்பட்ட சக்திவாய்ந்த நிலநடுக்கத்தால் கட்டடங்கள் பல தரைமட்டமாகியுள்ளன.**

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7